# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/13/NEWS/2014

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Engal Thesam  එංගල් දේසම්

மலர்: 13 | இதழ்: 09 | 2014 மே 01-14 | ஹிஜ்ரி: 1435 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 | 268


PUBLIC LIBRARY JAFFNA



**ஜெனீவா தீர்மானம் இலங்கையை பாதிக்குமா?** 07



நேர்காணல்:
**அரசாங்கத்திலிருந்து வெளியேறினால்...** 10



**குலனின் மீது விழுந்த உஸ்மானிய அறை** 13



## எங்கள் தேசம் செய்தி இணையதளம் அங்குரார்ப்பணம்

எங்கள் தேசம் செய்தி இணையதளம் கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி மாதம்பை இஸ்லாஹிய்யா அரபுக்கல்லூரியில் நடைபெற்ற விசேட வைபவமொன்றில் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர் உஷ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்களினால் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

www.engalthesam.lk என்ற இணைய முகவரியில் எங்கள் தேசம் செய்தித் தளத்தை பார்வையிடலாம்.

# மத முரண்பாட்டு பொலிஸ் பிரிவு முஸ்லிம்களுக்கு நன்மை தரும்?

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய, மத முரண்பாடுகள் தொடர்பில் எழும் பிணக்குகளை தீர்த்து வைப்பதற்காக புதிதாக உருவாக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் பிரிவு, முஸ்லிம் சமூகத்துக்கு பல நெருக்கடிகளை கொண்டுவரலாம் என கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக பொதுபல சேனாவினால் முஸ்லிம் சமூகத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வந்த பல்வேறு நெருக்குவாரங்களை அடுத்தே இந்த பொலிஸ் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

➡ 16

## பொதுபல சேனாவுக்கு நடவடிக்கை எடுங்கள்

### தேசிய ஷூரா சபை வேண்டுகோள்

பொதுபல சேனாவுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தேசிய ஷூரா சபை அரசாங்கத்திற்கும் பொலிஸாருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது. அது வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பொதுபல சேனாவினால் முன்னெடுக்கப்படும் தீவிரவாத செயற்பாடுகள், நாட்டிற்கும் பௌத்த கோட்பாடுகளுக்கும் மிகுந்த அவப் பெயரை ஏற்படுத்தியுள்ளன.

➡ 16



## முஸ்லிம்கள் நாட்டுப்பற்றை நிரூபிப்பது காலத்தின் தேவை

### அமைச்சர் பஷீர் சேகுதாவூத்

ஏ.எம். பாயிஸ்

முஸ்லிம் சமூகம் செயற்பாடற்ற ஒரு சமூகமாக மாறிவருகிறது. நாம் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற போது அவற்றைத் தீர்ப்பதற்கு வரலாற்று ரீதியான பழக்கவழக்கங்களையே கையாளுகிறோம் புதிதாக ஜனநாயக அடிப்படையிலான செயற்பாடுகளை சிந்திப்பதில்லை. தற்போதைய நாட்டு சூழலில் முஸ்லிம்கள் நாட்டுப்பற்றோடு எவ்வாறு இருந்திருக்கிறார்கள் என்பதை நிரூபிப்பதற்கான செயற்பாடுகள் அவசியம்.

➡ 16



## இலங்கைக்கு விரல் நீட்டும் மோடி

இலங்கை, மலேசியா, பிஜி தீவுகளிலும் பரவி வாழும் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டிய பலமான அரசாங்கம் இந்தியாவில் அமைய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இந்திய மீனவர்களை தொடர்ந்து அச்சுறுத்தி வரும் இலங்கை மற்றும்

➡ 16

## லிபியாவிலுள்ள இலங்கையரை தாயகம் அழைக்க நடவடிக்கை

லிபியாவில் நிலவும் பாதுகாப்பற்ற நிலைமை காரணமாக அங்கிருக்கும் இலங்கையரை நாட்டிற்கு மீள வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவர்களை நாட்டிற்கு மீள வரவழைப்பதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரன்தெனிய தெரிவித்தார்.

## மத விவகாரங்கள் தொடர்பில் நீங்களும் முறைப்பாடு செய்யலாம்

➡ 16

## ஜப்பானில் புலமைப்பரிசில்

தொழிநுட்பம், முதுகலை மற்றும் பல்வேறு பட்டப் படிப்புகளுக்கான புலமைப்பரிசில்களை வழங்க ஜப்பானிய கல்வி, கலாசார, விளையாட்டு, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு முன்வந்துள்ளது.

இலங்கை மாணவர்களுக்கான இப்புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் உயர்கல்வி அமைச்சின் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வு பரீட்சையூடாகவே மாணவர்கள் தெரிவுகள் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, விண்ணப்பங்களை மே 23 ஆம் திகதிக்கு முன்னர் உயர்கல்வி அமைச்சு, இல 18, வார்ட் பிலேஸ், கொழும்பு 07 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.



மத முரண்பாடுகள் தொடர்பில் எழும் பிணக்குகளை தீர்த்து வைக்கும் விசேட பொலிஸ் பிரிவை பிரதமர் தி.மு. ஜயரத்ன திறந்து வைத்தார்.

## 50 அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுக்காற்று விசாரணை

கசினோ தொடர்பான மூன்று வர்த்தமானி அறிவித்தல்களை நிறைவேற்றும் வாக்கெடுப்பைப் புறக்கணித்த 50 அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்றத்தில் சர்ச்சைக்குரிய கசினோ தொடர்பான மூன்று வர்த்தமானி அறிவித்தல்களை நிறைவேற்றும் வாக்கெடுப்பில் அமைச்சர்கள் உள்ளிட்ட 50 வரையான ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை.

➡ 16

## பாகிஸ்தான் ஜமாஅத்தே இஸ்லாமியின் புதிய அமீராக ஸிராஜுல் ஹக் தெரிவு




பாகிஸ்தான் தலைநகரம் லாகூரிலுள்ள ஜமாஅத்தே இஸ்லாமியின் புதிய அமீராக ஸிராஜுல் ஹக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிதாக தெரிவாகியுள்ள அமீர், கைபர் பக்தூன் கவா மாநிலத்தின் ஆட்சியில் அமைச்சராக பதவி வகிக்கிறார். ஜமாஅத்தின் அமீராக சத்தியப்பிரமாணம் செய்து கடமையை ஏற்பதற்கு முன்பு அந்த அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாத்காரமாக முடிவெடுப்பது மதகுருமாருக்கு உசிதமானது அல்ல

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார



பொதுபல சேனா போன்ற இனவாத, மதவாத அமைப்புகளின் மக்களுக்குத் திருப்தியற்ற செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கான காலம் உருவாகியுள்ளதென தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, பிரச்சினைகள் ஏற்படும்போது அதற்கு பலாத்காரமாக முடிவுவெடுப்பது மதகுருமாருக்கு உசிதமானது அல்ல எனவும் குறிப்பிட்டார்.

இனவாத, மதவாத செயற்பாடுகளில் ஈடுபட்டு பிளவுகளை ஏற்படுத்தும் அமைப்புக்களுக்கு தண்டனை வழங்குவதற்காக புதிய சட்டம் ஒன்றை ஏற்படுத்த அமைச்சரவையில் மகஜர் ஒன்றை சமர்ப்பிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

வில்பத்துவில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் பொதுபல சேனாவினர் செயற்படுவது சாதாரண விடயம். ஆனாலும் இனவாத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒருக்காலும் இடமளிக்க முடியாது. துவேஷத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்ற எந்தவோர் அமைப்பையும் இச்சட்டத்தின் மூலம் தண்டிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# அமைச்சர்மார் காணிக் கொள்ளையராம்

## ஹெல உறுமய தலைவர்



நாட்டில் அரசாங்கத்தை பிரச்சினைக்குள் தள்ளிவிடும் இரண்டு சக்திகள் செயற்பட்டு வருகின்றன. இதில் ஒன்று, நண்பன் எனும் முகமூடியை அணிந்த எதிரான சக்தி. மற்றைய சக்தி, அரசாங்கத்தை பிரச்சினைக்குள் தள்ளும் அமைச்சர்கள். அவர்கள் அரசாங்கத்தின் காணிகளை கொள்ளையிடுகிறார்கள் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார்..

புலிப் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டிய பின்னர் புதிய தோற்றத்தில் முஸ்லிம் அடிப்படைவாதம் நாட்டிற்குள் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் செய்யும் கெடுதிகளால் அரசாங்கத்திற்கோ, நாட்டுக்கோ, மக்களுக்கோ புதிதாக வெளியில் இருந்து எதிரிகள் தேவையில்லை என்றும் ஓமல்பே சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# சந்திரிகா அணியில் அமைச்சர்கள்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கவைச் சந்தித்து அவருடன் கலந்தாலோசிப்பதற்கு ஆளுங்கட்சியில் வலது சாரியைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய அமைச்சர்கள் தயாராகியுள்ளனர்.

நாட்டின் தற்போதைய நிலை, சர்வதேசிய ரீதியில் இலங்கை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, ரீ.வீ. குணசேகர, திஸ்ஸ விதாரண ஆகியோர் உள்ளிட்ட அமைச்சர்களுடன் கூடிய குழுவினர் சந்திரிகா பண்டார நாயக்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இதற்கு முன்னரும் அரசில் அங்கம் வகிக்கும் முக்கிய புள்ளிகள் பலர் சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து பேசியுள்ளதாவும் அறிய முடிகிறது.

# ஹம்பாந்தோட்டையில் பாராளுமன்றம்

ஸ்ரீஜயவர்த்தன புர பாராளுமன்ற கட்டடத்தொகுதி புனர்நிர்மாணம் செய்யப்பட இருப்பதால் பாராளுமன்ற அமர்வுகளை ஹம்பாந்தோட்டையில் நடத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை சர்வதேச கருத்தரங்கத்தில் அமர்வுகளை நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படுகிறது.

கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தைப் பயன்படுத்துவது தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

புனர்நிர்மாணப் பணிகள் குறைந்தது மூன்று மாதங்களுக்கேனும் நீடிக்கும் என்பதால் ஸ்ரீ ஜயவர்த்தன புர பாராளுமன்றத்தில் அமர்வுகள் நடைபெற மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.


# முசலி பிரதேச சபையில் கண்டன தீர்மானம்

முசலி பிரதேசசபையின் மாதாந்த அமர்வின் தவிசாளர் எகியாவினால் பொதுபல சேனாவின் நடவடிக்கையை கண்டித்தும் மன்னார் மறிச்சுக்கட்டி மக்களுக்கு அவரவரின் சொந்தக் காணியை அல்லது மாற்றுக் காணி வழங்கப்பட வேண்டும் என தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த தேர்தல்களின் போது முசலி பிரதேசத்தில் உள்ள முஸ்லிம்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே வாக்களித்தனர். பொதுபல சேனாவின் நடவடிக்கையை கட்டுப்படுத்தாவிட்டால் மன்னார் மாவட்டத்தில் மட்டுமன்றி இந்த நாட்டில் இக்கட்சி பாரிய பின்னடைவை சந்திக்க வேண்டி வரலாம். முசலி பிரதேசத்திற்கு வந்து மரைக்கார் தீவு மக்களை வெளியேறச் சொல்வதற்கு பொதுபல சேனாவுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என இப்பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றிய தவிசாளர் எஹியா தெரிவித்தார்.

இந்த கண்டன தீர்மானத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் மற்றும் அமைச்சர் றிஷாட் பதியுதீன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# இலங்கை சிறுமியின் ஓவியம் ஐ.நா. அமைப்பில் தெரிவு




ஐ.நா. மன்றத்தின் சுற்றுச் சூழல் செயற்திட்டத்துக்கான ஆசிய பசுபிக் பிராந்திய சிறார் ஓவியப் போட்டியில் இந்த ஆண்டு இலங்கையைச் சேர்ந்த கந்தகே கியாரா செனுலி பெரேரா என்ற எட்டு வயது மாணவியின் ஓவியம் சிறந்த ஓவியமாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்காக அந்த சிறுமிக்கு ஆயிரம் அமெரிக்க டொலர் பரிசும் நைரோபியில் நடக்கும் இந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்கு அவருக்கும் அவரது பெற்றோர் மற்றும் ஆசிரியருக்குமான விமான பயணச் செலவும் வழங்கப்படவுள்ளன.

ஐ.நா. மன்றத்தின் சுற்றுச் சூழல் செயற்திட்டத்தின் சார்பில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஆண்டு தோறும் பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டுக்கான சுற்றுச் சூழல் விழிப்புணர்வு பிரசாரத் தலைப்பாக வீணாகும் உணவும் பூமிப் பந்தின் பாதுகாப்பும் என்ற தலைப்பு அறிவிக்கப்பட்டது.

இதையொட்டி உலக நாடுகள் அனைத்திலிருந்தும் சிறார்களுக்கான ஓவியப் போட்டி நடத்தப்பட்டது. இந்த போட்டி பிரிவுக்கு கிடைத்த 63,700 மொத்த ஓவியங்களிலே இலங்கை சிறுமியின் ஓவியம் சிறந்த ஓவியமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

# 2008 இற்கு பின் மலேரியாவே இல்லை



நாட்டில் 2008 ஆம் ஆண்டின் பின்னர் மலேரியாவினால் உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்பது இலங்கை பெற்றுக் கொண்ட பாரிய வெற்றி என சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

இலங்கையில் அதிக மலேரியா நோயாளர்கள் 1934, 1935 ஆம் ஆண்டுகளிலேயே பதிவாகினர். இக்காலப்பகுதியில் 15 இலட்சம் நோயாளர்கள் மலேரியாவினால் பீடிக்கப்பட்டதுடன், 80 ஆயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

அண்மைக் காலங்களில் மலேரியாவினால் பீடிக்கப்பட்ட எவரும் பதிவாகவில்லை என்ற போதிலும் நாட்டிற்கு அதிகளவிலான வெளிநாட்டவர்கள் வருகை தருகின்றமையால், மலேரியா ஏற்படும் அபாயம் நிலவுவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

தேசிய மலேரியா தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இத்தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.





அகிலத்திற்கோர் அருட்கொடையாக வந்த முஹம்மது நபியவர்களின் வழிகாட்டி முன்மாதிரிகள் என்ற தொனிப்பொருளில் சர்வதேச இஸ்லாமிய நிவாரண அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் ஜனாதிபதி ஆலோசகர் ஏம்.எம். ... தலைமையில் நடைபெற்ற நிகழ்வு.

படமும் தகவலும்: ஏ.எஸ்.எம். ஜாவித்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுபல சேனாவும் அரச உறவும்

எம்.எச். முஹம்மத்



நம்பிக்கைக்கு தகுதியற்ற அரசாங்கத்தின் கீழ்த்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோமா? என்ற சந்தேகம் எவருக்காவது எழுந்தால், அச்சந்தேகத்தில் எந்தக் குறைவும் இல்லையென்றே சொல்ல முடியும். தேசத்தின் இறைமைக்கு பலத்த சவாலாக எழுந்து நின்ற விடுதலைப் புலிகளை துணிவுடன் எதிர்கொண்டு வெற்றிகண்ட அரசாங்கத்தினால், தற்போது விதைக்கப்படுகின்ற கடும்போக்கு தேரர்களின் கோமாளித்தனங்களை இரும்புக்கரம் கொண்டு தடுக்க முடியாத வக்கில்லாத அரசாங்கமாக மாறியிருப்பதுதான் கவலையளிக்கிறது.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஆட்சி, முக்கிய முஸ்லிம் அமைச்சர்கள் அங்கம் வகிக்கும் அரசாங்கம், பாதுகாப்பு அமைச்சு என்ற அனைத்தையும் கைக்குள் வைத்துக் கொண்டிருக்கும் தகைமையுள்ள ஜனாதிபதி ஆட்சி புரியும் ஒரு நாட்டிலேயே இந்த பொதுபல சேனா என்ற பயங்கரவாத அமைப்பு தான் விரும்பியவாறு பேய் ஆட்டம் ஆடிக்கொண்டிருக்கிறது. சட்டமும் நீதியும் படுகேவலமான பலப் பரீட்சைக்கு உட்படுத்தபட்டுள்ளன. இந்த நாட்டின் நீண்ட வரலாற்றுக்கும் பாரம்பரியத்திற்கும் சொந்தக்காரர்களான முஸ்லிம்களை காரசாரமாக விமர்சிக்கும் இவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் தகுதியற்ற, இனவாத அரசியலுக்குள் இன்றைய அரசாங்கம் தன்னை தாரை வார்த்துக் கொண்டுள்ளது.

ஜனநாயக அரசியல் அடிப்படையிலான ஆட்சி என்பதை ஓரங்கட்டிவிட்டு இனவாத சாயம் பூசி ஆட்சி செய்ய காரணம், தேர்தல் வெற்றியின் சுலோகம் இனவாத அணுகுமுறையில் இருப்பதை அனுபவபூர்வமாக கண்டு கொண்டதன் விளைவேயாகும். வட்டிலப்பம், பிரியாணி சுவைக்கும் சமூகத்தின் சில்லறை ஆதரவை விடவும் பௌத்தவாதத்தின் பெயர்ப்பலகை மூலம் தேறுகின்ற இலாபம் அதிகமாகும்.

ஜாதிகபல சேனாவின் ஊடகவியலாளர் மாநாட்டுக்குள் புகுந்து நடத்திய சண்டித்தனங்களின் போது பொலிஸாரை கண்காணிப்பு குழுவாக செயற்பட முடிந்ததே தவிர பாதுகாப்பு தரப்பினராக செயலாற்ற முடியவில்லை. அப்படி பொலிஸாருக்கு வாய்ப்பூட்டு போட்டு வைத்திருப்பது யாராக இருக்க முடியும்? மதவாத விஷம் கக்கி மீண்டும் ஒரு தேசிய ரீதியான முரண்பாட்டை உருவாக்குவதில் கண்ணும் கருத்துமாக செயற்படும் பொதுபல சேனாவுக்கு இருக்கின்ற பலம், பாவம் தான் அங்கம் வகிக்கின்ற பிரதேச சபைக்கு தைரியமாகச் சென்று உரையாற்ற முடியாத இக்கட்டான சூழ்நிலையை விஜித தேரருக்கு உருவாக்கியது. இலங்கையின் சட்டங்களுக்கு நாட்டில் இருக்கின்ற முக்கியத்துவத்திலும் பார்க்க கோதாபயவின் சட்டங்களுக்கே நடைமுறையில் பாரிய கண்ணியமும் மகத்துவமும் வழங்கப்பட்டுள்ளதா என்று வினவ வழியமைக்கப்பட்டுள்ளது.

பொறுமையின் எல்லா எல்லைகளிலும் கீறிப் பார்த்து ஓய்ந்து போன பொதுபல சேனா புனித அல்குர்ஆனை பேசு பொருளாக்கி சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தை எதிர் எதிரான அணியில் நிறுத்தி எதையாவது சாதிக்க முடியுமா என்று பார்க்கிறது. விவாத அறை கூவல் விடுக்குமளவுக்கு ஜனநாயக சாரம்சங்களை கொண்டதல்ல இந்த பொதுபல சேனா. மாறாக, பொல்லாத வம்புகளையும் வங்குரோத்துக்களையும் யார் மீதாவது ஏவி தங்களின் மாபியா நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்த வேண்டும் என்பதே இவர்களின் இலக்கு. எம் தரப்பு நியாயங்களுக்கு எவ்வித மதிப்புமளிக்கத் தயாராயில்லாத கூலிப் படையுடன் நாம் இஸ்லாத்தைப் பற்றியோ, குர்ஆனைப் பற்றியோ பேசுவதில் அர்த்தமில்லை.

பொதுபல சேனாவின் இயக்கத்திலும் அதன் நிகழ்ச்சி நிரல்களிலும் கொண்டிருந்த சந்தேகத்தைப் போன்று இன்றைய அரசாங்கத்திற்கும் இவர்களுக்குமிடையில் இருக்கும் மிக வெளிப்படையான பந்தப் பிணைப்பையும் ஊன்றி நோக்க வேண்டிய தேவையிருக்கிறது. பொலிஸ், இராணுவம், பாதுகாப்புப் படைகள் என ஒரு தேசத்திற்கு இருக்கவேண்டிய எல்லா வளங்களையும் தன்னகம் கொண்ட தேசத்தில் ஒரு குழு அபரிமிதமான சக்தியாக செயலாற்ற முடியும் என்றால் நிச்சயமாக அதன் பின்னணியில் பலம் பொருந்திய சக்திகளின் ஆதரவு இருக்கும். அந்த ஆதரவு அரசின் அங்கீகாரத்துடன் செயற்படுகின்றதா, இல்லையா? என்பதை வெளிப்படையான முறையில் சொல்லத்தான் நம் அமைச்சர்களை காணவில்லை.

முஸ்லிம் காங்கிரஸை உடைத்தெறிந்து விட்டு அதிகாரவர்க்கத்தின் கூட்டணியில் சங்கமித்த இன்றைய அமைச்சர் றிஷாட் பதியுதீனின் சிறுபிள்ளைத்தனமான அறிக்கை சிரிப்பூட்டுகிறது. உலமா சபை, புத்திஜீவிகள் சொன்னால் எந்நேரமும் தான் வாடகைக்கு எடுத்து தலைமை வகிக்கின்ற கட்சியை கலைக்கத் தயார் என அறிக்கை விடுத்திருந்தார். உலமா சபை ஒருபோதும் நேரடி அரசியல் நகர்வுகளை பேசாது என்ற உண்மையை நன்கு தெரிந்து கொண்டே அரசியல் காமெடிகளை அரங்கேற்றுவதை இவர் போன்றவர்கள் தவிர்க்க வேண்டும்.

இந்த அரசாங்கத்தில் இருக்கும் எல்லா அமைச்சர்களுக்கும் பொதுபல சேனாவுக்கும் அரசுக்கும் இருக்கின்ற உறவு பற்றி தெளிவாகத் தெரியும். இது குறித்து பேசினால் கரண்ட் கம்பியை தொட்டதுபோல அரசாங்க உறவில் இருந்து தூக்கியெறிப்படுவார்கள்.

➡ 16

## 2 இலட்சம் ரூபாவுக்கு நட்சத்திர சிறை

### பிரதியமைச்சர் அமைச்சர் சரத்குமார குணரத்ன



ஒருசிலர் கோடிக்கணக்கில் பணத்தை கொள்ளையடித்து விட்டு இரண்டு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவிக்கிறார்கள். சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இரண்டு இலட்சம் செலவு செய்தால் உள்ளே நட்சத்திர ஹோட்டல்களில் இருப்பது போன்று சொகுசு கிடைக்கும். பிறகு சிறையிலிருந்து வெளியே வந்து செல்வந்தர்களாக வாழ்கிறார்கள். இதுதான் இன்றைய நிலைமை என பிரதியமைச்சர் சரத்குமார குணரத்ன தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு பிரதேசத்திற்கு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பை பாதுகாப்பதற்கு அரசியல்வாதிகளாகிய நாங்களும் பாரிய பொறுப்பைச் சுமக்க வேண்டியுள்ளது. இன்று மிக விரைவில் பணம் தேடி செல்வந்தர்களாக மாறுவதற்காக சிலர் விரும்புகிறார்கள். இதற்காக இவர்கள் கொள்ளையடித்தலை அரசியல்மயப்படுத்த முயற்சி செய்கிறார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கல்முனை மாநகரசபை எல்லைக்குள் இலத்திரனியல் பிரஜைகள் அறிக்கை அட்டை

கல்முனை மாநகரசபையின் சேவைகள் தொடர்பில் பொதுமக்களின் கருத்துகளை இலத்திரனியல் பொறிமுறை மூலம் அறிந்துகொள்ளும் ஆசிய மன்றத்தின் இலத்திரனியல் பிரஜைகள் அறிக்கை அட்டை நிகழ்ச்சித்திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் கல்முனை மாநகர முதல்வர் சட்ட முதுமாணி எம். நிஸாம் காரியப்பர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை. சலீம், கல்முனை மாநகர ஆணையாளர் ஜே.லியாக்கத் அலி, மாநகரசபை உறுப்பினர்கள், ஆசிய மன்றத்தின் பிரதிநிதிகளுடன் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சின் அனுசரணையுடனும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடனும் உள்ளூராட்சி மன்றங்களில் ஆசிய மன்றம் நடைமுறைப்படுத்தி வரும் உள்ளூர் பொருளாதார ஆளுகை செயற்திட்டத்தின் கீழ் கல்முனை மாநகரசபை பிரிவில் இப்புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப் படும்.

இத்திட்டத்திற்கென விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட 22 அதிகாரிகள் பிரதேசங்கள் தோறும் களத்தில் இறங்கி சுமார் 1800 குடும்பத் தலைவர்களை நேரடியாக சந்தித்து கல்முனை மாநகரசபையின் சேவைகள் தொடர்பில் அவர்களது கருத்துகளை இலத்திரனியல் பொறிமுறை ஊடாக பதிவு செய்து வருகின்றனர்.



மடிகே மிதியால கிராமத்தில் கல்வி மற்றும் கலாசார முன்னேற்றத்தை கருப்பொருளாகக் கொண்டு இயங்கி வரும் மெக்டோ அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட தரம் 10, 11 மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்குமான ஊக்குவிப்பும் வழிகாட்டலும் நிகழ்ச்சி மடிகே மிதியால மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற முன்னாள் முஸ்லிம் பாடசாலைகளின் ஒருங்கிணைப்பாளரும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பகுதிநேர விரிவுரையாளரும் ஆலோசகருமான எம்.ஆர். சனூஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

தகவல்: எம்.ஆர்.எம். ஜவ்பர் (ஆசிரிய ஆலோசகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்

மலர் : 13 இதழ் : 09 மே 01 - 14

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு– 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

## தொழிலாளர் தியாகத்தை உணர்த்தும்
# உலக தொழிலாளர் தினம்

முழு உலகையும் தம் கரங்களால் வளப்படுத்தும் தொழிலாளர் வர்க்கத்தின் நலன் பேண வருடாந்தக் கலண்டரில் ஒரு நாளை ஒதுக்கிவிடுவது போதுமானதென்று கருத முடியாது. முதலாளித்துவ உலகம் தொழிலாளர்களையும் ஒரு பண்டமாக யோசித்த காலமொன்றிருந்தது. இன்றும் கூட அந்த நிலையிலிருந்து பாரிய முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்ல முடியாது என்பதற்கு பல நடவடிக்கைகள் சான்றாக உள்ளன. கார்ல் மார்க்ஸ் ஊதியத்தை, ஒரு தொழிலாளி தொழிலாளியாக உயிர் வாழ்வதற்கும் அவனது சந்ததிகள் நாளை உயிரோடு இருப்பதற்குமாக வழங்கப்படும் கொடுப்பனவு என்று வரைவிலக்கணப்படுத்தினார். நாளை அவன் முதலாளியாக அல்லது தொழில் முயற்சியாளனாக மாறிவிட்டால் முதலாளிக்கு வேலை செய்ய ஆட்கள் இல்லாமல் போகும். எனவே, குறைவான சம்பளத்தையே வழங்கவேண்டும். அன்றைய பொழுதுக்குள் அது செலவு செய்யப்பட வேண்டும். ஆனால், அவனது சந்ததியினர் உணவில்லாமல் இறந்துவிட்டால் அடுத்த சந்ததியில் தொழிலாளர்கள் இல்லாமல் போவார்களே அதற்காக கொஞ்சம் அதிகரித்துக் கொடுக்கவேண்டும் என்பதுதான் கார்ல் மார்க்ஸின் வரைவிலக்கணத்திலிருந்து நாம் விளங்கிக்கொளும் விடயமாகும்.

தொழிலாளியின் வியர்வை காய்வதற்கிடையில் அவனின் ஊதியத்தை வழங்கிவிடுமாறு முஹம்மது நபியவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். உழைத்து உருக்குலைந்து கரடு முரடாக மாறிய கைகளில் முத்தம் கொடுத்து நபிகள் நாயகம் உழைப்பாளியை கௌரவித்தார். உழைத்துச் சாப்பிடுவதன் உயர்வை உபதேசித்து எடுத்துக்கூறினார். பள்ளிவாசலில் முடங்கியிருந்து தஸ்பீஹ் செய்து கொண்டும் வணக்கம் புரிந்து கொண்டுமிருந்த ஒரு மனிதன் விடயத்தில் இவருக்குரிய ஜீவனோபாயத்தை யார் வழங்குவது என்று தோழர்களிடம் வினவினார். இவருடைய சகோதரன் காட்டுக்குச் சென்று விறகு வெட்டி விற்பனை செய்து இவரது குடும்பத்தையும் காப்பாற்றுகிறார் என்று சொன்னதைக் கேட்டு, இவரை விட இவரது சகோதரன் அல்லாஹ்விடத்தில் உயர்ந்தவன் என்ற கருத்தை நபிகள் நாயகம் தெரிவித்ததாக வரலாற்றில் பார்க்க முடியும்.

நபி வழியை ஏற்றுக்கொண்டதாக கூறிக்கொள்ளும் பலர் தொழிலாளிகளை நடத்தும் விதம் ஊடகங்களில் நாற்றமெடுத்த செய்தியாக வருவதையும் மறுப்பதற்கில்லை. கார்ல் மார்க்ஸ் கூறிய இழிநிலையை விட, படுமோசமான நிலையில் கடைகளில், ஹோட்டல்களின் கூலித் தொழிலாளிகள் நடத்தப்படுவது யாரும் அறியாததல்ல. ஆனால், அத்தகைய தொழிலாளிகளுக்காக யார் குரல் கொடுப்பது என்பதே இன்றைய கேள்வி.

பரம்பரை பரம்பரையாக பணக்காரராக இருக்கத் துணை நிற்கும் உழைக்கும் வர்க்கம் உடல்நலமின்றி, கல்வியறிவற்று, சுத்தமான காற்றைக்கூட சுவாசிக்க முடியாத சூழலில் நாற்றமெடுக்கும் சேரிகளில் குடியிருக்கின்றனர். அவர்களின் பிள்ளைகளுக்கு உரிய கல்வி கிடைப்பதில்லை. இந்த நாட்டில் இலவசக் கல்வி நடைமுறையில் இருந்தாலும் அதுவே இன்று விலை கூடிய பொருளாக மாறிவருகிறது. தொழிலாளர் வர்க்கத்தின் சுகவாழ்வு பற்றியும் பல பிரச்சினைகள் இருப்பது பற்றியும் சுட்டிக்காட்டப்படுகின்றன. இலவச மருத்துவத்தைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையில் அவர்களில் அனேகர் வாழ்கின்றனர்.

மே தினம் கொண்டாடப்படும் இம்மாதத்தில் பலரும் சிந்திக்க வேண்டிய ஒரு விடயமுண்டு. பல தொழிலாளர்களை, சிப்பந்திகளை, உதவியாளர்களை வைத்து வேலை வாங்கும் அளவுக்கு அல்லாஹ் ஒருவருக்குச் செல்வத்தை வழங்கியிருப்பது அவருக்கு ஓர் அருளாகவும் அதேநேரம் சோதனையாகவும் அமைகிறது. அந்த தொழிலாளர்களுக்கு நல்வாழ்வை அமைத்துக்கொடுத்து பல குடும்பத்தினர் இனிதே வாழ வழியமைப்பது அருளாக அமையும். அதேநேரம் அந்தத் தொழிலாளர் குடும்பத்தினரின் பிரார்த்தனைக்கும் அருகதையாக அமைவதுபோன்றே அல்லாஹ்வின் பலத்த கேள்வி கணக்குக்கு உட்படும் ஒரு நாள் பற்றியும் பயந்துகொள்வதே ஒரு புத்திஜீவியின் சிறப்பாக அமைய முடியும். தொழிலாளர்களை வழிநடத்தும் பெருந்தகைகளே சிந்தியுங்கள்.


# கசினோ இருந்தே தீரும்



## அமைச்சர் சம்பிக்க

புதிய அபிவிருத்தித்திட்ட சட்டமூலத்தின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ள ஹோட்டல் திட்டங்களில் சூது, பந்தய வசதி என்ற சொற்கள் நீக்கப்படாதிருப்பதனால், நாட்டினுள் கசினோ திட்டம் நிச்சயமாக வரக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது என ஜாதிக ஹெல உறுமயவின் பிரதம செயலாளர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

# சொல் வெட்டு





■ யார் தப்பு செய்தாலும் பொதுபல சேனா தட்டிக்கேட்கும்

–பொதுபல சேனாவின் இணைப்பாளர்

ஆட்டோட்டமெல்லாம் ஒரு நாளில் ஆணச்சட்டிக்குள் அடங்கிவிடும் சகோதரா



■ புலிகளை விடவும் மோசமான அமைப்பே பொதுபல சேனா

–அமைச்சர் றிஷாட் பதியுதீன்

கிறீஸ்மேன் கதைவிடுவதும் பள்ளிவாசல் உடைக்கிற கதையெல்லாம் ரவூப் ஹக்கீம் விடும் டுப்பு என்றெல்லாம் ஒரு காலத்தில அறிக்கை விட்டீங்களே! இப்ப தெரியுதா?



■ இராணுவத்தை அகற்றமாட்டேன் என்று கூறிக்கொண்டிருந்தால் உரிமைகளை பாதுகாக்கும் வரை தமிழர்கள் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை

–சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி

போராட்டக் கதைய மட்டும் கைவிடுங்க சேர்... இந்த நாட்டுல சேர்ந்து போனா மட்டுந்தான் எதையாவது சாதிக்கலாம்



■ முஸ்லிம்களின் பிரச்சினையை அரசாங்கம் தீர்க்கும் என்ற நம்பிக்கை தளர்ந்து வருகிறது

–அமைச்சர் ரவூப் ஹக்கீம்

ஓங்கட ஆதவன் பாட்டெல்லாம் எடுபடல்ல போல?



■ தனது நிலைமைக்கு மோசமான சவால் வருமானால் மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை கை விடவும் முன்வரலாம்

–கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண

துட்டகைமுனுவின் வாரிசைப் பார்த்து கேக்குற கேள்வியா இது?



■ முஸ்லிம் சமூகத்திற்கும் அவர்களின் புனித அல்குர்ஆனிற்கும் தொடர்ந்தும் அபகீர்த்தி ஏற்படுத்தும் பொதுபல சேனாவை வன்மையாக கண்டிக்கிறேன்

–பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா

பெட்டைக் கோழியும் கூவியாச்சி... இனி பொழுது விடியும்



■ ஒரு குழு சத்தமிட்டு முடிந்தது மற்றொரு குழு மறுமுனையில் சத்தமிடுகிறது

–அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல

ஒங்களுக்கு அரசியல் செய்ய வாழையடி வாழையா இன்னமும் வரும்...

எங்கள் தேசம் சந்தா விபரம்

உள்நாடு: தனிப்பிரதி: 30.00, வருட சந்தா: 1200.00, ஆறு மாதங்கள்: 600.00


வெளிநாடு: இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00, மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00, அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00, இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182

தொடர்புகளுக்கு: 077 2992220


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA




# கசினோவுக்கு கையுயர்த்திய ஹாஜிமார்

-பஷீர் அலி



கொக்கு பற பற... கொக்கு குஞ்சு பற பற... கொக்கு முட்டை பற பற...

சின்னக் குழந்தைகளை வைத்துக் கொண்டு விளையாடும் கிராமப்புற விளையாட்டு ஞாபகம் வருகிறது.

சிறுவர்கள் வளைத்திருக்க, ஒருவர் கொக்கு பறபற என்று சொல்லும்போது மற்றைய சிறுவர்கள் பறப்பதுபோன்று கைகளை உயர்த்துவார்கள். கொக்கு முட்டை பற பற என்று சொல்லும்போதும் பறப்பது போன்று யாராவது கையை உயர்த்தினால் அவர் ஆட்டத்திலிருந்து விலத்தப்படுவார்.

இவ்வாறுதான் இலங்கை அரசியலிலும் சில முஸ்லிம் அரசியல்வாதிகளை சமூக ஆட்டத்திலிருந்து விலத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட கசினோ சூதாட்டத்தை அடிப்படையாகக் கொண்ட மூபோலபாய அபிவிருத்தித்திட்ட வர்த்தமானி மீதான அறிவித்தல்களை நிறைவேற்றும் வாக்கெடுப்பிற்கு ஆதரவளித்ததன் மூலம் நமது மூன்று ஹாஜிமார் நாட்டுக்கும் சமூகத்துக்கும் மட்டுமன்றி, அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ள புனித இஸ்லாம் மார்க்கத்துக்கும் களங்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

அரசாங்கம் சொல்லும் அசிங்கங்களுக்கெல்லாம் ஆய்ந்தோய்ந்து பார்க்காமல் கையை உயர்த்துவதில் பேர் பெற்ற ஏ.எச்.எம். அஸ்வர் ஹாஜியார், காதர் ஹாஜியார், பைசர் முஸ்தபா ஆகியோரே இந்த சட்ட மூலத்துக்கும் ஆதரவாக வாக்களித்தனர்.

அண்மைக்காலமாக பல்வேறு சர்ச்சைகளுக்கு உட்பட்டிருந்த கசினோ குறித்த சட்டமூலம் சில திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதனை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக எதிர்த்ததுடன் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க அத்துரலிய ரத்னதேரர் ஆகியோரும் எதிர்த்து வாக்களித்தனர்.

ஆளுங்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என 50 பேர் இந்த வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் புறக்கணித்திருந்தனர். குறித்த வாக்களிப்பில் அரசாங்கம் சார் உறுப்பினர்கள் அனைவரும் கட்டாயமாகக் கலந்துகொண்டு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என திணிக்கப்பட்டிருந்தனர். தனித்தனியே ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஜனாதிபதி செயலகத்திலிருந்து இந்த திணிப்பு விடுக்கப்பட்டதாக அறிய முடிகிறது. இருந்தும் அரசாங்க சார் உறுப்பினர்கள் 50 பேர் இவ்வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இப்படியிருக்க, இந்த மூன்று ஹாஜிமாரும் நாட்டையும் சமூகத்தையும் குட்டிச் சுவராக்கும் சூதாட்ட சட்ட மூலத்துக்கு பாய்ந்து விழுந்து ஆதரவு தெரிவித்திருக்கின்றனர்.


ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷ எம்பியே இந்த சட்டமூல வாக்களிப்பில் கலந்துகொள்ளாது விட்டிருக்கும்போது இந்த மூன்று ஹாஜிமாருக்கும் என்ன பிடித்திருக்கிறது என்றே தெரியவில்லை.

ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் தாம் நல்ல பிள்ளையாகக் காட்டிக்கொள்ள இந்த கேவலம் கெட்ட சட்டமூலத்துக்கு வாக்களித்திருப்பதன் மூலம் இவர்கள் பெரும்பாவமொன்றுக்கு துணைபோயிருக்கிறார்கள்.

இன்னொரு புறம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் உட்பட அமைச்சர்களான றிஷாட் பதியுதீன்,

➡ 16

# மே தினம்: தொழிலாளர்களுக்கு விடிவு பெற்றுத்தருமா?



ஏ. முஹம்மத் பாயிஸ்

இந்த உலகத்தில் ஒவ்வோர் உற்பத்திக்குப் பின்னாலும் மனித உழைப்பிருக்கிறது. இயற்கை தந்ததற்கப்பால் மற்றையவை அனைத்தும் மனித உழைப்பினாலேயே உருவாகின்றன. அந்தளவுக்கு மனித உழைப்பின்றி ஒன்றுமில்லை.

'உழவன் சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கைவைக்க முடியும்' என்ற பழமொழி இவ்விடயத்திற்கு எவ்வளவு சாலப் பொருத்தம் என்பதை உணர முடியும். இவ்வாறு தொழிற்துறையில் விவசாயிகள் போன்று பல்வேறு தொழிற்துறை சார்ந்தோரும் தமது உடல் உழைப்பை முதலீடு செய்து இந்த உலகத்திற்காக உழைக்கிறார்கள். அந்த தொழிலாளர்களின் உழைப்பைத்தான் நாம் அன்றாடம் ஒவ்வொரு விடயத்திலும் அனுபவித்து வருகிறோம்.

இந்த தொழிலாளிகளின் உழைப்பை கௌரவிக்கும் முகமாக, உலகம் பூராகவும் மே தினம் எனும் உலக தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த உலக தொழிலாளர் தினத்தின் பின்னால் இரத்தக்கறை படிந்த பல வரலாறுகள் உண்டு. உலகின் பொருளாதார வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றிய தொழிலாளர்கள் முற்காலத்தில் 18 மணிநேரம் வேலை வாங்கப்பட்டனர். இதை எதிர்த்து தாங்கள் உழைக்க வேண்டிய நேரத்தை 8 மணிநேரமாக வரையறுத்தனர். அதற்காக போராடி அந்த உரிமையைப் பெற்ற நாளே, மே தினம்.

உலகில் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வேகமாக வளர்ச்சியடைந்த நாடுகள் தொழிலாளிகள் பலரும் நாளொன்றுக்கு 12 முதல் 18 மணிநேரம் கட்டாய வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதற்கெதிரான குரல்களும் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் துவங்கின. இதில் இங்கிலாந்தில் தோன்றிய சாசன இயக்கம் (Chartists) 6 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தொடர் போராட்டங்களை நடத்தியது. அதில் 10 மணிநேர கோரிக்கை முக்கியமானதாகும். அத்தோடு பிரான்ஸில் நெசவுத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்கள் 15 மணிநேரம் உழைக்க வேண்டியிருந்ததால் 1834 இல் ஜனநாயகம் அல்லது மரணம், என்ற கோஷத்தை முன்வைத்து பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அவுஸ்திரேலியாவில் மெல்போனில் கட்டிடத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் தினமும் 15 மணிநேரம் உழைக்க வேண்டியிருந்ததால் உலகிலேயே முதன் முதலாக 8 மணிநேர வேலை கோரிக்கையை முன்வைத்து 1856 இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றனர். இது தொழிலாளி வர்க்க போராட்டத்தில் மைல் கல்லாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து ரஷ்யாவிலும் 1895 - 1899 இற்கு இடைப்பட்ட காலத்தில் பல வேலை நிறுத்தங்களும் போராட்டங்களும் இடம் பெற்றன. இத்தொழிலாளிகளின் 8 மணிநேர வேலைக்கான போராட்டங்களே ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டன.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்குப்போகும் தொகுதி அமைப்பாளர்கள்

ஐ.ஏ. காதிர்கான்

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களில் இம்முறை தோல்வியுற்ற தொகுதி அமைப்பாளர் பதவிகளில் மாற்றங்களை மேற்கொள்ள ஸ்ரீ.சு.க. அதி உயர் பீடம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

இது தவிர, ஐ.ம.சு.கூ. பெற்றுக்கொண்ட வாக்குகளை விட, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஜனநாயகக் கட்சி ஆகியன இணைந்து மேலதிக வாக்குகளைப் பெற்றுக் கொண்ட ஸ்ரீ.சு.க. தொகுதி அமைப்பாளர்களுக்கு எச்சரிக்கை கடிதங்கள் வழங்கி அவர்கள் அறிவுறுத்தப்படவுள்ளதாகவும் நம்பகமாகத் தெரியவருகிறது.


இரண்டு மாகாண சபைகளிலும் தோல்வியுற்ற தொகுதிகளைச் சேர்ந்த அமைப்பாளர்களை நீக்கி, அந்த இடத்திற்கு விரைவில் புதிய அமைப்பாளர்களை நியமிக்க ஆளுங்கட்சியின் அதி உயர்பீடம் தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம், கொழும்பு மாவட்டத்தில் ஐ.ம.சு.கூ. தோல்வியுற்ற மத்திய கொழும்பு, கொழும்பு வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் பொரளை, காலி அகிய தொகுதிகளைச் சேர்ந்த அமைப்பாளர்கள் நீக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

அண்மையில் இடம்பெற்ற இரண்டு மாகாண சபைகளிலும் ஆளும் ஐ.ம.சு.கூ. வெற்றி பெற்றாலும் கூட, அண்மையகால தேர்தல்களை ஒப்பிடும்போது அரசுக்குக் கிடைத்துள்ள வாக்குகள் கணிசமான அளவுக்கு குறைவடைந்திருந்தமை அவதானிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், பாரிய அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்தும் கூட, ஐ.ம.சு.கூ. இன் வாக்குவங்கியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, அரசின் உயர் மட்டத்தை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. இதேவேளை, இம்முறை மேல், தென் மாகாணங்களில் ஆளும் ஐ.ம.சு.கூ. 17 ஆசனங்களையும் இழந்துள்ளது.

மத்திய கொழும்பின் தற்போதைய அமைப்பாளர்களாக சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி, பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா, மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருனிகா பிரேமச்சந்திர ஆகியோரும் கொழும்பு வடக்கின் அமைப்பாளராக நௌஸர் பௌஸியும் பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மினுவாங்கொடையில் சீ.சீ.ரீ.வி. கமரா




-மினுவாங்கொடை நிருபர்-

மினுவாங்கொடை நகர வீதிகளுக்கு சீ.சீ.ரீ.வி. கமராக்களைப் பொருத்துவதற்கு மினுவாங்கொடை நகரசபை தீர்மானித்துள்ளது. மினுவாங்கொடை நகர பாதுகாப்பு நடவடிக்கைகளின் அவசியம் குறித்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, மினுவாங்கொடை நகரசபைத் தலைவர் பெட்றிக் அழக்ஹக்கோன் தெரிவித்தார்.

மினுவாங்கொடை நகர வங்கிகள், நிதி நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியவற்றின் பணிப்பாளர்கள், அதிகாரிகள், உரிமையாளர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினர் என்போரின் ஒத்துழைப்புடன் இணைந்தே இத்திட்டம் அமுல்படுத்தப்பட இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மினுவாங்கொடை நகரில் கள்வர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில், கொள்ளையர்கள் உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் குறித்த சம்பவங்களும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இது தொடர்பில் மக்கள் எந்நேரமும் மிக அவதானத்துடன் இருக்க வேண்டுமெனவும் நகரசபைத் தலைவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

# பஸ் கட்டணம் குறைப்பு



ஐ.ஏ. காதிர்கான்

கொழும்பு - கட்டுநாயக்க அதி வேகப் பாதையில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பஸ்களின் ஒரு வழிக் கட்டணங்கள் 120 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக, கொழும்பு மத்திய போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் கொழும்பு - கட்டுநாயக்கவுக்கு 130 ரூபா கட்டணம் அறவிடப்பட்டு வந்ததாகவும் கொழும்பு - நீர்கொழும்புக்கு 150 ரூபா கட்டணம் அறவிடப்பட்டு வந்ததாகவும் இந்தக் கட்டணங்கள் 120 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்துச் சபையின் பிரதான கட்டுப்பாட்டு அதிகாரி எம்.எச். சந்திர சிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் நாளொன்றுக்கு இ.போ.ச. இற்குச் சொந்தமான ஐஐ அதி சொகுசு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாகவும் இவற்றின் மூலம் கிடைக்கும் நாளாந்த வருமானம் சுமார் பதினொரு இலட்சத்தைத் தாண்டுவதாகவும் கட்டுப்பாட்டாளர் சந்திர சிறி மேலும் குறிப்பிட்டார்.

# கல்வியில் கிண்ணியா பிரதேசம் முன்னேறுகிறது

-கிண்ணியா நிருபர்-

2013 ஆம் ஆண்டு வெளியான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கிண்ணியா வலயக் கல்வி அலுவலகம் மாகாணத்தில் 4 ஆம் இடத்தையும் தேசிய ரீதியில் 21 ஆம் இடத்தையும் பிடித்துள்ளது.

இத்தகைய முன்னேற்றம் கிண்ணியா பிரதேசம் கல்வியில் அபிவிருத்தியடைந்து வருவதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது என கல்வியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

2012 ஆம் ஆண்டு மாகாணத்தில் 6 ஆம் இடத்தைப் பெற்றிருந்த இவ்வலயம் இவ்வருடம் இரண்டு வலயங்களைப் பின்தள்ளி 4 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

முதலாம் இடத்தை மட்டக்களப்பு மத்திய கல்வி வலயமும் இரண்டாம் இடத்தை அக்கரைப்பற்று கல்வி வலயமும் மூன்றாம் இடத்தை கல்முனை கல்வி வலயமும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கவை.

## சமாதான நீதவான்



நிகவெரட்டிய, குலத்துரவுன், 'தாருல் அர்க்கம்' எனும் முகவரியைக் கொண்ட முஹிதீன் பிச்சை முஹம்மது தாஸிம், அகில இலங்கை சமாதான நீதவானாக புத்தளம் மாவட்ட நீதிமன்ற நீதவான் திரு. ஆர்.எஸ்.ஏ. திஸா நாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நிகவெரட்டிய ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாக செயலாளராகவும் அல்ஹிரா சேவை சங்கத்தின் தலைவராகவும் செயற்படும் இவர், காலம் சென்ற எம்.ஏ. எஸ். முஹிதீன் பிச்சை - உம்மு சல்மா தம்பதிகளின் புதல்வராவர்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

எம்.எம்.எம். ஹலால்தீன்

ஹதீஜா ரெஸ்ட் பண்ட் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில், சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா, கிண்ணியா மத்திய கல்லூரி அப்துல் மஜீது மண்டபத்தில் இடம்பெற்றது.

ஹதீஜா ரெஸ்ட் பண்ட் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் எம்.எஸ்.எச். முஹம்மத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அதன் செயலாளர் எஸ்.எம். ஹிஸாம், வலய கல்விப் பணிப்பாளர் எம்.ஐ. சேகு அலி, பிரதி கல்விப் பணிப்பாளர் முனவ்வரா நளீம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த 200 மாணவர்கள் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

# மொழிபெயர்ப்பாளராக நியமனம்

பழுலுல்லா பர்ஹான்




காத்தான்குடி முதலாம் குறிச்சியை சேர்ந்தவரும் காத்தான்குடி நகரசபையில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றுபவருமான எம்.ஐ.எம். முஸம்மில் மட்டக்களப்பு மாவட்ட நீதவான ரீ.எல்.ஏ. மனாப் முன்னிலையில் நீதியமைச்சின் அங்கீகாரம் பெற்ற தமிழ்-சிங்கள மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

காத்தான்குடி அல்மனார் பாடசாலை, சித்தீக்கியா மகளிர் அரபுக் கல்லூரி ஆகியவற்றில் சிங்கள பாட போதனாசிரியராக கடமையாற்றியுள்ள இவர், ஓய்வு பெற்ற அதிபர் ஏ.எச்.எம். இஸ்மாயில்-கலிமத்து சுஹறா தம்பதியினரின் புதல்வராவார்.

The Puttalam Times சமூக ஊடகத்தின் டிஜிட்டல் சஞ்சிகை வெளிவந்து விட்டது. இதனூடாக எழுத்துக்களுடன் ஒலி, ஒளி, காணொளி என முற்றிலும் வித்தியாசமான வாசிப்பு அனுபவத்தைப் பெறலாம் என அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய வெளியீட்டை கணினி மூலம் மட்டும் பார்வையிடலாம். வெகு விரைவில், ஸ்மாட்போன் ஐ போன்களில் வாசிக்கக் கூடிய பதிப்பு வெளியிடப்படவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வகுப்பறை குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக கொடைவள்ளல் பேராசிரியர் பஸ்லி நிஹாரின் 33 கோடி ரூபா சொந்த நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட இருக்கும் 8 மாடிகளைக் கொண்ட கட்டிடத்துக்கான வேலைகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு.

படமும் தகவலும்: ஏ.எஸ்.எம். ஜாவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


PUBLIC LIBRARY



## அரசியல் பார்வை

# ஜெனீவா தீர்மானம் இலங்கையின் பொருளாதாரத்தைப் பாதிக்குமா?







எம்.எச்.எம். ஹஸன்

மனித உரிமைகள் பேரவையின் செயலாளருக்கு இலங்கை தொடர்பாக விசாரிக்கும் அதிகாரத்தை வழங்கிய ஜெனீவா பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அந்த விசாரணையும் முன்னெடுக்கப்பட முன்னரே இலங்கையின் பொருளாதாரத்தை அது எவ்வாறு பாதிக்கும் என்பதற்கான எதிர்வுகூறலை வழங்குவது சிரமமாகும். அன்றியும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விசாரணைகள் சிபாரிசுகளின் அடிப்படையிலும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்படும் பிரேரணையின் அடிப்படையிலும் பொருளாதார தடை என்ற விடயம் அமுலுக்கு வருகின்றது. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளும் ஏகோபித்து முடிவெடுத்தால் மட்டுமே அத்தகைய தீர்மானங்களை நிறைவு செய்ய முடியும் என்பது ஐ.நா. அமைப்புச் சட்டத்தில் உள்ள விடயமாகும். சீனாவும் ரஷ்யாவும் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களுக்கு பாதுகாப்புச் சபையில் அங்கீகாரம் வழங்குவதில்லை என்ற நம்பிக்கை இலங்கையிடம் இருக்கும் வரை பயப்படத் தேவையில்லை என்பது இலங்கையின் நிலைப்பாடாகும்.

மனித உரிமைகளை மீறும் ஒரு நாட்டின் ஜனாதிபதி தலைமை வகிக்கும் பொது நலவாய அமைப்புக்கு நிதி உதவி செய்ய முடியாது என்று காரணங்காட்டி கனடா வருடாந்தம் பொது நலவாயத்துக்கு வழங்கும் 90 இலட்சம் அமெரிக்க டொலர் நிதியை நிறுத்தியுள்ளது. 1947 இல் கொழும்புத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து கனடா இலங்கையின் நட்பு நாடாக இருந்தது. டட்லி சேனாநாயக பிரதமராக (1965-1970) இருந்த காலப்பகுதியில் கட்டுநாயகா விமான நிலையத்திலிருந்து கொழும்பு வீதி-வரையுள்ள பாதைக்கு கனடா இலங்கை நட்புறவு வீதி என்று பெயர் சூட்டப்பட்டது. 2004 இல் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்ய கனடா நடவடிக்கை எடுத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுய விருப்பின் பேரில் வழங்கும் பணம் என்பதால் கனடாவுக்கு எதிராக பொது நலவாய அமைப்பு எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது. அத்துடன் 1987 இல் இந்தியா இலங்கையின் வான்பரப்பை ஆக்கிரமித்து விமானத்தின் மூலம் பருப்பு மூட்டைகளை வட பகுதியில் இறக்கிய சம்பவம் சர்வதேச சட்டத்தை மீறும் செயலாக இருந்தது. ஆனால், எந்தவொரு நாடும் அதனை தட்டிக் கேட்கவில்லை. 15 வெளிநாட்டுத்தூதுவர்கள் வெளியிட்ட அறிக்கையில் வெளிநாட்டுத் தலையீடுகள் ஏற்படா வண்ணமும் இலங்கை தனது செயற்பாடுகளை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறினார்களே தவிர, இந்தியாவின் அத்துமீறல் பற்றி வாய் திறக்கவில்லை. கனடா மட்டுமன்றி பிரித்தானியா, அமெரிக்கா அல்லது வேறு எந்த நாடாயினும் இப்படித்தான் நடந்து கொள்ளும். இத்தகைய நிலையில் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளின் கெடுபிடிகளுக்கு மத்தியில் இலங்கை பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலையில் இல்லையென்பதே யதார்த்தமாகும். இலங்கையில் கடமையாற்றும் பீ.பீ.சி. செய்தியாளர் சாள்ஸ் ஹவ்வினின் வீசாக் கோரிக்கையை இலங்கை மறுத்துள்ளதாகத் தெரிகிறது. ஒரு வருடத்துக்கான வீசாவுக்காக அவர் விண்ணப்பித்த போது மூன்று மாதங்கள் மட்டுமே வீசா வழங்கப்பட்டுள்ளதுடன் காலம் முடிந்ததும் இலங்கையை விட்டு வெளியேறுமாறும் பணிக்கப்பட்டுள்ளார். அவ்வாறு பணிப்புரை செய்வதற்கு இலங்கை அரசுக்கு உரிமையுண்டு. இதே பாணியில் ஏனைய நாடுகள் இலங்கை விடயத்தில் நடந்துகொள்ளத் தொடங்கினால் நிலைமை எப்படி அமையும் என்பது வேறு விடயமாகும்.

2016 இல் 4000 அமெரிக்க டொலர் தலா வருமானத்தை நோக்கி பொருளாதாரத்தை விருத்தியடையச் செய்யும் இலக்கை இலங்கை அடைய வேண்டுமானால் முதலீட்டை அதிகரிக்க வேண்டியிருக்கும். இலங்கை முதலீட்டு வீதம் 30% ஆகவும் சேமிப்பு விகிதாசாரம் 22% மாகவுமே இப்போது காணப்படுகின்றன. இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக்க 35% முதலீடு தேவை. உள்நாட்டுச் சேமிப்பு மட்டம் போதாத நிலையில் வெளிநாட்டு முதலீடு பெறப்பட வேண்டும். இலங்கை தற்போது இடைநிலை வருமான மட்டத்தில் இருப்பதால் வெளிநாடுகளில் உதவி நன்கொடை கிடையாது. கடனும் முதலீடுமே சாத்தியம்.

ஆசியாவில் பொருளாதார முன்னேற்றம் கண்ட நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்றவை 35% வெளிநாட்டு முதலீட்டைத் தொடர்ந்து பேணி வரும் நிலையில் இருந்தமையால் பொருளாதார இலக்கை அடைய முடிந்தது. கடந்த சில வருடங்களாக இலங்கையின் மொத்த முதலீட்டில் 1% மாத்திரமே வெளிநாட்டு நேரடி முதலீடாக அமைந்துள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடு சாத்தியமாகாத போது நாட்டுக்குள் நிதியைப் பாய்ச்சும் அடுத்த நடவடிக்கை படுகடனாகும். கடன் இருவகைப்படும். ஒன்று, சலுகை அடிப்படையில் வழங்கப்படும் அபிவிருத்திக் கடன். மற்றையது, வர்த்தக ரீதியான கடன். கடந்த சில வருடங்களாக இலங்கைக்கு சலுகைக் கடன் பெற முடியாது போயுள்ளது. 2005 இற்கு முன்பு இலங்கையின் வெளிநாட்டுக் கடனில் பெரும்பகுதி அபிவிருத்திக் கடன் வகையிலேயே இருந்தது. 2012 இல் மொத்தக் கடனில் 34% வெளிநாட்டு வர்த்தகக் கடனாகும். இது ஒரு மோசமான நிலை என்றே பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இது சர்வதேச நிதிச் சந்தையில் அதிக வட்டிக்குப் பெறும் கடனாகும். அத்தகைய கடன் தொகை குறுகிய காலத்தில் அதிக வட்டியுடன் மீள் வழங்கப்பட வேண்டியது. அபிவிருத்திக் கடன் என்பது குறைந்த வட்டியில் நீண்ட காலத்திற்கு வழங்கப்பட வேண்டும். சில போது அது [illegible] செய்யப்படுவதுமுண்டு.

**அமெரிக்காவும் ஐரோப்பாவும் செய்வது சரியா என்பதை விட அவைகளின் கெடுபிடிகளில் இருந்து தப்பித்துக் கொள்ள என்ன செய்யவேண்டும் என்பதே கேள்வி**

இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பு திருப்தியடையும் விதமாக இல்லை. இதன் மொத்த ஏற்றுமதியில் 55% முக்கிய இரண்டு பொருட்களில் தங்கியுள்ளது. அவை தைத்த ஆடைகளும் தேயிலையுமாகும். 2012 இல் 55% இருந்தது, 2013 இல் 58% வீதமாக உயர்ந்துள்ளது. ஏற்றுமதி பல்வகையின்மை பிரதான குறைபாடாகும். 55% இல் 40% தைத்த ஆடை ஏற்றுமதியாகும். இந்த தைத்த ஆடை ஏற்றுமதியில் 50% ஐரோப்பிய நாடுகளுக்கும் 40% அமெரிக்காவுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதிலிருந்து விளங்குவது, இலங்கையின் வெளிநாட்டு வருமானத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் நிலையில் ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் இருப்பதாகும். ஏற்றுமதிக் கட்டமைப்பில் தங்கியிருக்கும் நிலைமையும் ஏற்றுமதி பல்வகையின்மையும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்குப் பெரும் அச்சுறுத்தலாகும் என்பதை விளங்கிக்கொள்வது சிரமமாக இருக்காது. குறிப்பாக, அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கைக்கு எதிரான ஒரு பிரேரணையை கொண்டு வந்துள்ளன. இதுபோன்ற தருணத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் ரஷ்யாவும் சீனாவும் பாதுகாக்கும் என்ற மந்திரம் மட்டும் போதுமானதாக இருக்குமா என்ற கேள்வி எழுகின்றது.

இலங்கையின் கீழ் கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பிலும் பாரிய சர்ச்சைகள் உள்ளன. ஹம்மாந்தோட்டை மத்தளை சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டமையால் கட்டுநாயக்கவிற்கு வரும் விமானங்கள் அங்கு திருப்பப்படுமானால் வருமானம் அதிகரிக்க வழியில்லை. அத்தோடு கட்டுநாயக்கவில் இட நெருக்கடி காரணமாக மத்தளை அமைக்கப்பட்டிருந்தால் பறவாயில்லை. ஆனால், கட்டுநாயக்க வரவேண்டிய விமானங்கள் மத்தளைக்குத் திருப்பப்படுவதால் அதனை அமைப்பதற்கு சீனாவில்

➡ 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்

மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 38)



கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

சுன்னாவில வந்துள்ள மருத்துவ விவரணங்கள் குறித்த அறிவிப்புகளும் இவ் வகைக்குள்ளேயே அடங்கும் அரபுகளின் வழக்காறுகளாக இருந்த விடயங்களே அதில் சொல்லப்பட்டுள்ளன. இயல்பு மற்றும் வழக்காறு என்ற வகையிலேயே அண்ணலாரின் அந்நிலைமைகள் (மருத்துவ விவரணங்கள்) எமக்கு சொல்லுகின்றன. அவற்றில் எதுவும் ஷரீஆ என்ற வகையில் சொல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மருத்துவத்தையோ அல்லது வேறு வழக்கங்களையோ அறிமுகப்படுத்துவதற்காக, தூதராக அனுப்பப்படவில்லை. மாறாக, எங்களுக்கு ஷரீஆ சட்டங்களை போதிப்பதற்காகவே தூதராக அனுப்பப்பட்டார்கள். பேரீத்த மகரந்த சேர்க்கை விவகாரத்தில் என்ன நடந்தது என்பது உங்களுக்கு தெரியும். ஈற்றில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்,

"உங்களது உலக விவகாரங்கள் குறித்து நீங்களே நன்கறிந்தவர்கள்" என்று கூறினார்கள்.

ஸஹீஹான ஹதீஸ்களில் அறிவிக்கப்படுகின்ற மருத்துவ விவரணங்களை நாம் பின்பற்றி ஒழுகுவதற்காக சொல்லப்பட்ட மார்க்க விடயங்களாக கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அதற்கான ஆதாரம் எதுவுமில்லை. ஆயினும் பரக்கத்திற்காக (பாக்கியம்) அல்லது ஈமானில் உண்மை நிலையை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக மருத்துவ விவரணம் சொல்லப்பட்டிருந்தால் அதன் பயன் மகத்தானதாக அமைந்திருக்கும் என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது. என்றாலும் அது இயல்பான மருத்துவமாகக் கொள்ளப்படமாட்டாது. மாறாக இறை நம்பிக்கையின் விளைவுகளில் ஒன்றாகவே கொள்ளப்படும். வயிற்றோட்ட நோயினால் அவதிப்பட்டோருக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தேன் மூலம் மருத்துவம் செய்ததை இதற்கு உதாரணமாகக் கூறலாம். சரியான விடயத்தின் பால் அல்லாஹ்வே வழிகாட்டுகின்றான். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. முஹத்திமது இப்னி கல்தூன் (அலி அப்தில் வாஹிதின் திறனாய்வுடன்) 3/1243.

### மனிதன் என்ற வகையில் நபிகளாரது நடவடிக்கைகள்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வானவர்களில் (மலக்குகள்) ஒருவராக இருக்கவில்லை. நிச்சயமாக அவர் மனிதர்களில் ஒருவராகவே விளங்கினார் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. அவருக்கு தூதுத்துவம் கிடைத்ததால் அவரது மனித இயல்பு மாற்றம் அடையவில்லை. அவரிடமிருந்து வெளிப்பட்ட சில வார்த்தைகளும் செயல்களும் மனிதத்தின் வெளிப்பாடாகவே விளங்கின. மார்க்க ரீதியான எப்பண்பும் அவற்றுக்கு இருக்கவில்லை. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஆட்டின் சந்துப் பகுதி இறைச்சி யையும் பரங்கிக்காயையும் விரும்பியதை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இவ் விரண்டின் மீதான விருப்பமும் வெறுப்பும் மனித இயல்பின் வேறுபாட்டுக்கமைய வித்தியாசப்படும். முஸ்லிம் ஒருவர் சந்துப் பகுதி இறைச்சியை விரும்பினால் அவர் மீது குற்றம் ஏதுமில்லை. அவ்வாறே பரங்கிக்காயை விரும்பாது வேறு மரக்கறி வகைகளை விரும்பினால் அவர் மீதும் குற்றம் ஏதுமில்லை.

அவ்வாறே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மனிதன் என்ற வகையில் திருப்தி காண்கின்றவராகவும் கோபமடைகின்றவராகவும் இருந்திருக்கின்றார்கள். அவர் கோபமுற்றிருக்கும் வேளை அவர் நாடாத வகையிலான வார்த்தைகளும் மக்களில் சிலருக்கு எதிரான பிரார்த்தனைகளும் வெளிப்பட்டிருக்கின்றன. எனவே அறிஞர்கள் அவற்றை கருத்திற்கொள்வது கட்டாயமாகும். இவ்வகையான விடயங்களை சட்டவாக்கத் துறைக்குள்ளோ, மூல வசனங்களிலிருந்து சட்டங்களை பெறும் பகுதிக்குள்ளோ நுழைக்காமலிருப்பது கட்டாயமாகும்.

இமாம்களான முஸ்லிம், அஹ்மது உட்பட பலர் பதிவு செய்திருக்கின்றனர்: "அல்லாஹ் அவரது வயிற்றை நிரப்பமாட்டான்" என முஆவியா (ரழியல்லாஹு அன்ஹு) குறித்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதை அறிஞர்கள் பலர் இந்த அடிப்படையிலேயே விளக்குகின்றனர்.

இமாம் முஸ்லிம் பதிவு செய்துள்ளவாறு ஹதீஸ் குறித்த கதையை உங்களுக்கு தருகின்றோம்:

"இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) கூறுகின்றார், நான் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அங்கு வந்தார்கள். நான் உடனே கதவுக்குப் பின்னால் மறைந்து கொண்டேன். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எனது முதுகில் அவரது கையால் தட்டினார்கள். சென்று முஆவியாவை நான் வரச்சொன்னதாக கூறுங்கள் என்று சொன்னார்கள். நான் முஆவியாவிடம் சென்று திரும்பி வந்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம், அவர் சாப்பிடுகின்றார் என்று கூறினேன். சிறிது நேரத்தின் பின்னர் முஆவியாவை நான் வரச்சொன்னதாகக் கூறுங்கள் என்று மீளவும் சொன்னார்கள். நான் முஆவியாவிடம் திரும்பவும் சென்று வந்து, அவர் சாப்பிடுகின்றார் என்று கூறினேன். அப்பொழுது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், அல்லாஹ் அவரது வயிற்றை நிரப்பமாட்டான் என்று கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்: 2604 ஆவது ஹதீஸ்)

# துஆவும் அதற்கான ஒழுங்குமுறைகளும்



அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையில் இறுக்கமான தொடர்பை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளுள் துஆ மிகப் பிரதானமானது. 'துஆ' என்ற அரபுச் சொல்லுக்கு அழைத்தல், பிரார்த்தனை புரிதல், வணக்கம் செய்தல் எனப் பல பொருள்கள் உள்ளன. துஆ என்பது ஒரு வணக்கமாகும். வணக்கத்தின் அத்திவாரமும் துஆவே. இதுபற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்: "துஆ என்பது ஓர் இபாதத் ஆகும்" (அபூதாவுத்) என்று குறிப்பிட்டுள்ளார்கள். பிறிதொரு ஹதீஸில், "துஆவானது இபாதத்தின் அடிப்படை" (திர்மிதி) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையேயான தொடர்பை வலுவாக்கிக் கொள்வதற்கு துஆ எந்தளவு அவசியமானதென்பதை நாம் விளங்கலாம்.

அடியான் ஒருவன் அல்லாஹ்வை திருப்திப்படுத்தக் கூடிய அமல்களுள் துஆ பிரதான இடம் வகிக்கிறது. துஆக் கேட்காத அடியான் மீது அல்லாஹ் அதிருப்தி கொள்கிறான்.

"துஆக் கேட்காத அடியான் மீது அல்லாஹ் கோபமடைகிறான்" (திர்மிதி, அஹ்மத்) எனும் ஹதீஸ் அதனைத் தெளிவுற விளக்குகின்றது.

நாம் அல்லாஹ்விடமே துஆக் கேட்க வேண்டும். இதையே புனித அல்குர்ஆனின் ஸூரத்துல் பாத்திஹாவின் நான்காவது ஆயத், "உன்னிடமே உதவி தேடுகிறோம்" என்று சுட்டி நிற்கின்றது. "நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் தேவைகள் அனைத்தையும் உங்கள் எஜமானாகிய அல்லாஹ்விடமே கேட்கவும். அது தனது பாதணியின் வார் அறுந்திருப்பினும் சரி" (திர்மிதி) எனும் நபிமொழியும் இதையே வலியுறுத்துகிறது.

துஆக் கேட்பதற்கான ஒழுங்குமுறைகளை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எமக்கு கற்றுத்தந்துள்ளார்கள்.

**துஆ கேட்பதற்கான சில ஒழுங்கு முறைகள்:**

- துஆவை ஆரம்பிக்கும் போது அல்ஹம்துடன் ஆரம்பிப்பதும் அதையடுத்து ஸலவாத்துச் சொல்லுவதும் ஸுன்னத்தாகும். துஆவை முடிக்கும்போதும் இவற்றைக் கடைப்பிடித்தல் ஸுன்னத்தாகும்.
- வுழுவுடன் துஆக் கேட்டல்
- கிப்லாவை முன்னோக்கி துஆக் கேட்டல்
- இரு கைகளையும் அல்லாஹ்விடம் ஏந்தியவாறு துஆக் கேட்டல்
- மனதை ஒருநிலைப்படுத்தி, பய பக்தியுடன் உள்ளம் உருகி துஆக் கேட்டல்
- பொருள் உணர்ந்து துஆக் கேட்டல்
- அஸ்மாஉல் ஹுஸ்னாக்களைச் சொல்லி துஆக் கேட்டல்
- அல்லாஹ்வின் மீது பூரண நம்பிக்கை வைத்து துஆக் கேட்டல்

நபி அவர்கள் கற்றுத்தந்த வழிகாட்டல்களின் மூலம் சரியான முறையில் துஆக் கேட்கும்போது அதற்கான கூலியை பெற்றுக்கொள்வது இலகுவாக இருக்கும்.

**சிலரின் துஆ விரைவாக ஏற்றுக் கொள்ளப்படுவதாக ஹதீஸ்கள் கூறுகின்றன. அவர்களுள் சிலர்:**

- அநீதி இழைக்கப்பட்டவர்
- ஹஜ் செய்பவர்
- ஜிஹாத் செய்பவர்
- பிள்ளைகளுக்காக துஆக் கேட்டகும் பெற்றோர்
- பெற்றோருக்காக துஆக் கேட்கும் பிள்ளை
- பிரயாணி
- நோயாளி
- நீதியான தலைவன்
- தனது முஸ்லிம் சகோதரனுக்காக துஆக் கேட்கும் மற்றைய சகோதரன்

எனினும், ஹராமான உணவினால் உடலை வளர்த்திருப்பவர், உறவுகளைத் துண்டித்து நடப்போர் ஆகியோரின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**துஆக்கள் விரைவாக அங்கீகரிக்கப்படும் சந்தர்ப்பங்கள்**

- அதான் முடிந்தவுடன்
- அதானுக்கும் இகாமத்துக்குமிடையில்
- ஸுஜூதின்போது
- பின்னிரவின்போது
- பர்ளுத் தொழுகை முடிந்தவுடன்
- நோன்பாளி நோன்பு துறக்கும்போது
- யுத்தம் உக்கிரமடையும் போது
- நற்கிரிகைகளை முன்வைத்துக் கேட்கும்போது

ஆயினும், இந்த ஒழுங்கு முறைகளைப் பின்பற்றி துஆக் கேட்கும் போதிலும், அதற்கான பிரதிபலன் கிடைப்பதில்லை என்று சிலர் அங்கலாய்ப்பதுண்டு. அது தவறானது. ஏனெனில், ஒரு துஆவிற்குரிய பலனை மூன்று வழிகளில் அல்லாஹ் அடியானுக்கு வழங்குவதாக நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஒரு முஸ்லிம் பாவமின்றியும் இனபந்துக்களைப் பகைக்காதவாறும் கேட்கும் துஆவுக்கு அல்லாஹ் பின்வரும் மூன்றில் ஒன்றைக் கொடுக்காது விடுவதில்லை:

1. உடனடியாக வேண்டுகோளை நிறைவேற்றல்

2. மறுமையில் அவனுக்காக அதனைப் பாதுகாத்து வைத்தல்

3. அவனுக்கு ஏற்படவிருந்த ஓர் ஆபத்தை நீக்குதல் என்பனவாகும். " (அஹ்மத்)

எமது தினசரி வாழ்வில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஓதவேண்டிய துஆக்களை நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கற்றுத்தந்துள்ளார்கள். எனவே, நாமும் அவ்வாறான துஆக்களை அறிந்து, ஓதி நற்பயன் பெறுவோமாக!

என்.எப். அய்மா – மருதமுனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA




# மே தினம்: சங்க முதலாளிமார் உருவில் அன்றைய கங்காணிமார்

-மலைஞானி



மே தினம் என்பது தொழிலாளர்களுக்கான தினம். ஒரு தொழிலாளி அல்லது வேதனத்துக்கு வேலை செய்யும் ஒருவர் தினமொன்றுக்கு எட்டு மணித்தியாலயங்கள் மட்டுமே வேலை செய்ய வேண்டும் என்பதை உலகெங்கும் நடைமுறைப் படுத்தியதை ஞாபகப்படுத்தும் தினம். தொழிலாளர் மேல் நூற்றாண்டுகளாக படிந்திருந்த அடக்குமுறை மற்றும் சுரண்டல்களுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தை திரண்டெழச் செய்த தினம். ஏற்றத் தாழ்வு, சாதி, சமய வேறுபாடு என சகல சமூக மேடு பள்ளங்களையும் சமப்படுத்தி, தொழிலாளர் வர்க்கம் என்ற ஒரு கூட்டு சக்தியை அது சாத்தியம்தான் என அடையாளப்படுத்திய தினம்.

தொழிலாளர் சமூகம் இன்று அனுபவிக்கும் உரிமைகள், சலுகைகளை அவர்களுக்கு பற்றுத்தருவதற்கு எவ்வளவு தியாக சிந்தனையுடன் அடக்குமுறைக்கு எதிராகப் போராடி உயிர்த்தியாகம் செய்ய நேரிட்டது என்பதை இன்றைய இளம் தொழிலாளர்களில் பெரும்பாலானோர் அறிய மாட்டார்கள்.

இந்த உரிமைப் போராட்டங்களில் இலங்கை மற்றும் இந்திய துணைக்கண்டத்து தொழிலாளர் சமுதாயம் நேரடியாக ஈடுபடவில்லை. இப்படி ஒரு விஷயம் இருக்கிறது என்பதை அறிந்தும் இருக்கவில்லை. இப்போராட்டங்கள் மட்டுமல்ல, முதலாளித்துவத்தின் பயங்கர அடக்கு முறைகள், தொழிற்புரட்சி நிகழ்ந்த மேற்கத்திய பூமியிலேயே நடைபெற்றன. மக்கள் சீரழிக்கப்பட்டனர். ஏறக்குறைய அடிமைகள்போல அவர்கள் வாழ நேரிட்டது.

முதலாளித்துவத்தின் இக்கொடுங்கோன்மையே கார்ல் மார்க்ஸ் போன்ற நவீன சமூகப் பொருளாதார சிந்தனையாளர்களை தோற்றுவித்தது என்றால் அது மிகையாகாது. சமூக பொருளாதார அமைப்பில் கடுமையான ஏற்றத் தாழ்வுகள் காணப்பட்டதால்தான், இதை நிவர்த்தி செய்வது எப்படி என்ற சிந்தனை தோன்றியது. முதலாளி வர்க்கத்தினர் அரசு அதிகாரத்தையும் மதத்தையும் தமது கைகளில் தொழிலாளர்களுக்கு எதிரான ஆயுதங்களாக வைத்திருந்தனர். சமூக புரட்சியை தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலை மூலம் ஏற்படுத்த விரும்பியவர்கள் மதத்தை எதிர்க்க நேரிட்டதன் காரணமும் இதுவே.

இந்தப் புரட்சிகள் எல்லாம் நிகழ்ந்து, ஒய்ந்து ஒரு சமூக ஒற்றுமைக்கான தளம் மேலைத் தேசங்களில் போடப்பட்ட பின்னரேயே தாமதமாக நாம் இவை பற்றி அறிந்து கொள்கிறோம். இங்கிருந்து ஐரோப்பிய நாடுகளில் கல்விகற்கச் சென்ற இளைஞர்கள், அவர்கள் செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இலங்கை, இந்திய நாடுகளில் சோஷலிச இயக்கங்களைத் தோற்றுவிக்கின்றார்கள். அவர்களுக்கு சாமானியர்களின் ஆதரவு அணியாகத் திரள்கிறது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் நடைபெறும் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி நேருவின் தலைமையில் அமோக வெற்றி பெறுகிறது. அப்போது எதிர்க்கட்சியாக லோக்யாவில் அமர்கிறது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. அதன் தலைவர் டாங்கேதான் எதிர்க்கட்சித் தலைவர். அந்நேரத்தில் வாக்காளர்களிடம் மதவாதம், இனவாதமெல்லாம் இருக்கவில்லை. உழைக்கும் வர்க்கத்தின் தோழர்களையே வாக்காளர்கள் தமது பிரதிநிதிகளாக நியமித்தார்கள்.

இலங்கையில் முதலாளிகளின் பிரதிநிதிகளாக ஆட்சிக்கு வந்த டி.எஸ். சேனாநாயக்கவின் தலைமையிலான அரசுக்கு சவால்விடுக்கும் எதிர்க்கட்சிகளாக விளங்கியவை சோஷலிசக் கட்சிகளான சம சமாஜ கட்சியும் எம்.ஈ.பி. என அழைக்கப்பட்ட மக்கள் ஐக்கிய முன்னணியும்தான். அன்று சாதி, மத, பேதங்களுக்கு அப்பால் சாதாரண மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர்கள், என்.எம். பெரேரா, பீட்டர் கெனமன், வி. பொன்னம்பலம், கொல்வின் ஆர்.டி. சில்வா, எஸ்.ஏ. விக்கிரம சிங்க, பிலிப் குணவர்தன போன்ற சோஷலிசத் தலைவர்களே. நாட்டின் சுதந்திரத்துக்காக மக்களுடன் நின்று போராடியவர்களும் மக்களின் பிரச்சினைகளுக்காக 'சூரியமல்' போன்ற இயக்கங்களை நடத்தி சமூகக் கவனஈர்ப்பை ஏற்படுத்தியவர்களும் இவர்கள்தான்.

இந்த வரிசையில், அறுபதுகளில் மலையக மக்களின் நாடற்றவர் பிரச்சினையை முன்னிலைப்படுத்தி போராடிய தோழர் இளஞ்செழியனையும் கட்டாயம் குறிப்பிட்டாக வேண்டும். உரிமைகள் எனும் போது அவை வெறுமனே தொழிலாளர் உரிமைகளாக மட்டும் இருக்கக்கூடாது. அரசியல் உரிமைகளுக்காகவும் சம உரிமைக்காகவும் போராட வேண்டும் என்ற சிந்தனையை மலையகத்தில் முதலில் வெளிப்படுத்தி அதை முன்னெடுத்துச் சென்றவரே அமரர் இளஞ்செழியந்தான். மேலும் மலையகத் தமிழர்களின் விடிவுக்கான போராட்டத்தை சிங்கள சோஷலிச அமைப்புகளுடனும் வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகளுடனும் இணைந்து அதை ஒரு தேசிய இயக்கமாக

➡ 17



# யாழ்ப்பாண நூலகம் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையா?

வடபுலத்தான்

யாழ்ப்பாணத்தில் உள்ள வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்குப் போயிருக்கிறீர்களா? என்று கேட்டார் ஒருவர். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தேன்.

அவர் சொன்னார்; வெள்ளையடிக்கப்பட்ட அந்தக் கல்லறையைப் பார்ப்பதற்காக தினமும் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் என்று கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்கிறது. நீங்கள் இதைப் பற்றித் தெரியாமல் இருக்கிறீங்களே?

அப்பொழுதான் எனக்கு விவரம் புரிந்தது, அவர் குறிப்பிட்டது யாழ்ப்பாண பொது நூகலத்தையே என்று. யாழ்ப்பாண பொது நூலகம் இப்போது அப்படித்தான் மாறியுள்ளது. மாறியுள்ளது என்று சொல்வதை விட, அப்படி மாற்றப்பட்டுள்ளது. இப்படி மாற்றி சாதனை செய்தவர்கள் வேறு யாருமல்ல, யாழ்ப்பாணச் சமூகத்தினரே!

முன்பெல்லாம் நூலகத்துக்கு படிப்பதற்காகவே ஆட்கள் வருவார்கள். இப்பொழுது படிப்பதற்காக வருகின்ற கூட்டம் மிகக் குறைவு; வேடிக்கை பார்க்கவாருகின்ற கூட்டந்தான் அதிகம். இதிலும் தென்பகுதி ஆட்களே அதிகம். யாழ்ப்பாணத்து வாசிகளில் சிலர் பழக்கதோசத்தால் ஏதோ வந்து போவதைப்போல இன்னும் வந்து போகிறார்கள். மற்றும்படி அதிகமானவர்கள் நூலகத்தை நாடுவது குறைவு. இளைய தலைமுறை நூலகத்திலுள்ள கணினிகளைப் பயன்படுத்துவதற்காக வருகிறது. இந்தச் சிறப்பில் சிங்கப்பூர்க்காரர்களும் வந்து யூத் கோணர் ஒன்றை, இளைய தலைமுறையினருக்காகத் திறந்திருக்கிறார்கள். ஆனால், இதை யார், எத்தனைபேர், எப்படியெல்லாம் பயன்படுத்தப் போகிறார்கள்?

ஏற்கனவே யாழ்ப்பாண நூலகத்தின் கணினியில் இருந்து யாழ்ப்பாண கொஸிப் கலாசாரத்தை மேம்படுத்தும் பணியாக தமிழ் இணையதளப் பண்பாட்டின் அடிப்படையில் தாராளமான புனைவுகளோடும் அவதூறுகளோடும் ஓர் இணையதளம் உத்தியோகப்பற்றற்ற முறையில் நடத்தப்பட்டது.

அதைப்போல இந்த யூத் கோணரையும் நம்மவர்கள் (போலி) தேசியப் பணிக்காக பயன்படுத்தலாம் (நாசமறுக்கலாம்).

*1981* இல் இந்த நூலகம் எரிக்கப்பட்டபோது, யாழ்ப்பாணச் சமூகம் கண்ணீர் விட்டது. தாவீது அடிகள் உயிரை விட்டார். உலகெங்குமுள்ள தமிழ் மக்கள் இந்த நூலக எரிப்பை அறிந்து கொதித்தார்கள். தமிழர்களின் ஆன்மா வேதனையால் விம்மியது. பல கவிஞர்கள் இந்த நூலக எரிப்பை எதிர்த்துக் கவிதை யாத்தனர். பல எழுத்தாளர்கள் நூலக எரிப்பை எதிர்த்து எழுதினார்கள். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் சோமிதரன் என்பார் இந்த நூலக எரிப்பை ஒரு வன்கொடுமையாக உணர்ந்து, ஆவணப்படமாக்கியிருந்தார்.

அந்தளவுக்கு எல்லோருடைய ஆன்மாவையும் இந்த நூலக எரிப்பு வாட்டி வதைத்தது.

அன்று யாழ்ப்பாண நூலகம் யாழ்ப்பாண மக்களின் வாழ்வோடு அப்படிப் பின்னிப் பிணைந்திருந்தது. யாழ்ப்பாண நகரத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, அதற்கு அப்பால் மிகத் தொலைவிருக்கும் காங்கேசன் துறை, அச்சுவேலி, பருத்தித்துறை, காரை நகர், பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை உள்ளிட்ட தீவுப்பகுதிகளில் இருந்தெல்லாம் இந்த நூலகத்திற்கு சைக்கிள் மிதித்து வந்தார்கள்.

யாழ்ப்பாணத்தாரின் கல்விச் சொத்து, முதுசம் என்ற உணர்வு எல்லோரிடமும் இருந்தது. அப்படித்தான் அவர்கள் நூலகத்தை நேசித்தார்கள்; அதைப் பயன்படுத்தினார்கள். அப்படிப் பயன்படுத்தியதால் தான், அது எரியூட்டப்பட்டபோது அவர்களுடைய ஆன்மா துடித்தது.

ஆனால், இன்று தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் அது ஒரு வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை மட்டுமே. அப்படி நினைத்துக் கொண்டே அதைப் பார்க்க வருகிறார்கள். புலம்பெயர்ந்தவர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வரும்பொழுது தப்பாமல் பார்ப்பதும் பார்க்க விரும்புவதும் இந்த நூலகத்தையே. ஆகவே இப்பொழுது நூலகம் ஒரு வேடிக்கைப் பொருளே!

முப்பது ஆண்டுகளுக்கு முன்னே எரித்து அழிக்கப்பட்ட பிறகும் இந்தக் கட்டிடம், இந்த நூலகம் மிஞ்சியிருக்கிறது என்றால், யாருக்குத்தான் ஆச்சரியம் வராது? எனவே, எல்லோரும் அதைப் பார்க்கத் தான் வருகிறார்களே தவிர, அதைப் பயன்படுத்தவல்ல.

ஒரு காலம் நூலகத்தை இனவாதிகள் எரித்தார்கள். இன்றொ நாமே அதைக் கல்லறையாக்கியிருக்கிறோம். வாசிக்கப்படாத நூல்களும் படிப்புக்குப் பயன்படாத நூலகமும் கல்லறையன்றி வேறென்ன?

யாழ்ப்பாண நூலகத்திற்கு ஆண்டு தோறும் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியான புத்தகங்களை பல நாடுகளும் அமைப்புகளும் அன்பர்களும் கொடுக்கிறார்கள், அன்பளிப்பாக வழங்குகிறார்கள்.

புத்தம் புதிய நூல்கள் வகை வகையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. பல புத்தகங்கள் ஒரு தடவைகூட பிரித்துப் பார்க்காமல் உள்ளன. இப்படிப் புத்தகங்களை பிரித்துப் பார்க்காமலேயே சாதனை படைக்கும் நூலகங்களும் மக்களும் உலகில் வேறு எங்கும் இல்லை என்று தமிழர்கள் வழமையைப்போல தங்கள் முதுகில் தாங்களே தட்டிக்கொள்வார்கள்.

இதில் மக்களைக் குறை சொல்லி என்ன பயன்?


இந்த நூலக எரிப்பை வைத்தும் பிறகு இந்த நூலகம் புனரமைக்கப்பட்ட போது அதை வைத்தும் பிறகு அதைத் திறக்க முற்பட்டபோது அதை வைத்தும் அரசியல் பண்ணிய, இன்னும் அரசியல் பண்ணிக் கொண்டிருக்கிற ஓர் அரசியல்வாதியாவது சொல்லட்டும், தான் கடைசியாக இந்த நூலகத்துக்கு எப்பொழுது சென்றேன்? அங்கே தன்னுடைய அங்கத்துவ இலக்கம் என்ன? எத்தனை புத்தகங்களை எடுத்துப் படித்திருக்கிறேன்? இந்த நூலகத்தின் வளர்ச்சிக்கு என்னமாதிரியான பங்களிப்பைச் செய்திருக்கிறேன், என்று.

சிங்களச் சனங்களாவது வந்து வேடிக்கையாவது பார்த்திட்டுப் போகிறார்கள். இவர்கள் அப்படியாவது... சீ...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை விட்டு வெளியேறினால் முஸ்லிம்களுக்கு என்ன நன்மையிருக்கிறது?

## –அமைச்சர் பஷீர் சேகுதாவூத்–



முஸ்லிம்கள் சம்பந்தமான விடயங்களில் சரியான நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என்பதற்காக அரசாங்கத்தைவிட்டு வெளியேறலாம். இவ்வாறு வெளியேறு வதையே ஏனைய அரசியல் சக்திகளும் எதிர்பார்த்திருக்கிறது.ஒட்டுமொத்தமாக இது தனிச் சிங்கள அரசுதான் என்று விட்டு வந்தால் இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் களுக்கு என்ன நன்மையிருக்கிறது? என்பதையும் சிந்திக்க வேண்டும். இதற்குத் தான் முஸ்லிம் அரசியல் சமூகமும் குடிமைச்சமூகமும் வர்த்தசமூகமும் ஒன்றிணை ந்து ஒரு முடிவை எடுப்பது பொருத்தமாக இருக்கும். இலங்கைமுஸ்லிம்கள் விடயத் தில் அரசியல் சமூகம் தனித்துமுடிவெடுப்பது இனிமேல் பொருத்தமற்றதாகத் தான் இருக்கப்போகிறது என உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகு தாவூத் தெரிவித்தார். எங்கள் தேசத்திற்கு வழங்கிய செவ்வியின்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் வழங்கிய செவ்வியின் முழு விபரமும் இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

**கேள்வி: இலங்கையில் முஸ்லிம்களுக்கு காணி தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸினால் ஏதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா?**

**பதில்:** பொதுவாகவே முஸ்லிம்கள் இலங்கையில் குடியேற்ற அடிப்படையில் வஞ்சிக்கப்பட்ட ஓரினம். வடகிழக்கு மாத்திரமல்ல, இலங்கை முழுவதிலும் முஸ்லிம் களுக்கு ஆங்காங்கே காணிப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அண்மையில்கூட மறிச் சுக்கட்டி தொடர்பான காணிப் பிரச்சினை யும் தலைதூக்கியுள்ளது. புலிகளால் வடக்கு முஸ்லிம்கள் பலாத்காரமாக வெளியேற் றப்பட்ட காலகட்டத்தில் மறிச்சுக்கட்டி பிர தேசத்தில் சுமார் 65 குடும்பம் அளவில் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால், இப்பொ ழுது இயல்பாகவே குடிசன மதிப்பீட் டின் அடிப்படையில் பெருக்கம் காணப்படு கிறது. கிட்டத்தட்ட 350 குடும்பங்களாக மாறியிருக்கிறார்கள். இச்சூழலில் சிங்கள பௌத்த பெருந்தேசிய அடிப்படையில் யுத்தத்தின் பின்னரான காணிப்பார்வையும் அதைப் பார்க்கின்ற கண் பரப்பும் வித்தி யாசமாக விரிவடைந்திருக்கின்றன. இதே போன்று தமிழ்ப் பெருந் தேசிய அடிப் படையிலான பார்வையும் இருக்கிறது.

புதிதாக, இலங்கையில் ஒரு பௌத்த தூய்மைவாத அடிப்படையிலான எழுச்சி யைக் கோருகிறவர்கள் எல்லா அடிப்படை யிலும் தங்களுடைய ஆதிபத்தியத்தை நிலை நிறுத்த முற்படுகிறார்கள். மத விவகாரம், கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள், இன மற்றும் அரசியல் விவகாரங்கள் என்று விரிந்துபோகின்ற அவர்களது பார்வையில் காணி விடயமும் முக்கியமானதாக காணப் படுகின்றது. விசேடமாக முஸ்லிம்கள் பற்றி யும் அவர்களது இருப்பு பற்றியும் வெறுப் புத் தொழிற்சாலை ஒன்றையே உற்பத்தி செய்து வைத்திருக்கிறார்கள். அந்த அடிப் படையில்தான் முஸ்லிம்களின் குடியேற் றத்திற்கு எதிராக செயற்படுகிறார்கள்.

இவ்வாறு நிறைய சூழலியல் தொடர் பான பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த பிரச்சினைகளை முஸ்லிம் காங்கி ரஸ் சரியாக உணர்ந்திருக்கிறது. அரசியல் ரீதியானநடவடிக்கைகள்எடுக்கப்படவேண் டும் என்பதற்காக முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்றக் குழுவும் கூடிப் பேசியுள்ளது டன் அதியுயர் பீடத்தையும் அவசரமாகக் கூட்டி இதனை ஒரு செயற்பாடாக விரிவு படுத்த வேண்டும் எனவும் காங்கிரஸ் தீர் மானித்துள்ளது.

**கேள்வி: பொதுபல சேனாவின் முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துக் கொண்டே வருகிறது. அவர்களது செயற்பாடு குறித்து உங்களது கருத்து என்ன?**

**பதில்:** இவர்களுடைய முதுகுகளில் மணிக்கூட்டுப் போட்டு வைன் பண்ணி திருப்புகின்ற திறப்பு வேறுயாரிடமோ இருப்பதாக நான் நம்புகின்றேன். இவர்கள் ரோபோக்கள்; இவர்களை இயக்குகிற கர மும் மூளையும் வேறு எங்கிருந்தோ வரு கின்றன.

இலங்கையில் ஓர் இஸ்லாமிய அடிப் படைவாத சிந்தனை மேலோங்கி வருகிறது என்று கருதும் ஒரு புவிசார் நலன் கருதிய சர்வதேச புலனாய்வுத் துறையினரின் கை கள் இருக்கக்கூடும். ஏனென்றால் இலங்கை யிலுள்ள பௌத்தம் என்பது அடிப்படை யிலே அமைதியானது. இலங்கையில் இன அடிப்படையிலான செயற்பாடு வந்தபோது இராணுவத் தன்மையும் வன்முறையும் கொடுக்கப்பட்ட போதிலும் கூட பௌத்த வாதம் பௌத்தத்தை காப்பாற்ற வேண்டும், அதற்கு வழிவகுக்க வேண்டும் என்று எந்தத் தருணத்திலும் கத்தியதில்லை. இங்கே, இப் போது பௌத்தத்திற்கு முஸ்லிம்களால் பிரச்சினை வந்துவிட்டது என்று கருது வது திடீரென இலங்கைக்கு வந்த செயற் பாடும் சிந்தனையுமாகும். ஆகவே இது காலா காலமாக, இயற்கையாக வந்த ஒரு விஷயமல்ல; செயற்கையாக உருவாக்கப் பட்ட ஓர் அமைப்பாகத்தான் பொதுபல சேனாவை நான் கருதுகிறேன். இதனுடைய செயற்பாடு எவ்வளவு காலத்திற்கு இருக்கும் என்பதை அனுமானிக்க முடியவில்லை.

1915 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதி ராக கட்டவிழ்த்து விடப்பட்ட அந்தக் கல வரத்தை விடுதலையாகக் காட்டி அதில் பங்கு கொண்டவர்களை கௌரவிப்பதற் கும் அந்நிகழ்வினை கொண்டாடுவதற்கு மான முயற்சி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அப்படிக் கொண்டாடு கின்ற போது முஸ்லிம்களுக்கு எதிராக சில விடயங்களை செயற்படுத்துவதற்கான வாய் ப்பை எற்படுத்தும் என்ற சந்தேகங்கள் இருக் கின்றன.

அரசும் அரச படைகளும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுகின்ற விஷயத்திலே சில சில பின்னடைவுகள் இருந்தபோதிலும் எதிர்காலத்திலே அவ்வாறு தொடர்ந்தேர்ச்சி யான சட்டத்திற்கு புறம்பான விடயங்களை பராமுகமாக இருக்கக்கூடிய அரசியல், பொருளாதார, சமூக, சர்வதேசநிலைமைகள் இலங்கையைப் பொறுத்தவரையில் இல் லை. எனவே, பொதுபல சேனாவின் செயற் பாடு கட்டுப்பாட்டுக்குள் வரும். இவ் வமைப்பின் செயற்பாடு, குறிப்பிட்ட காலத் துக்குள் முடிக்கப்படுவதற்காக கொடுக்கப் பட்ட கொந்தராத்து வேலையாக நான் கருதுகின்றேன்.

**கேள்வி: பொதுபல சேனாவின் முஸ் லிம் எதிர்ப்பு செயற்பாடுகளை தடுப்ப தற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறுகிறது என்ற விமரிசனம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. நீங்கள் அமைச்சு அந்தஸ்துள்ளவர் என்ற வகை யில் இதற்கு என்ன பதில் கூற விரும்பு கிறீர்கள்?**

**பதில்:** இலங்கை அரசாங்கங்களிடத்தில் ஒவ்வொரு தன்மை காணப்படுகிறது. அதாவது கட்சி மற்றும் அதன் அரசியல் தலைவர்களை உள்ளடக்கிய அரசாங்கங் களின் தன்மையானது அரசுகளுக்கிடையே வேறுபட்டுக் காணப்படுகிறது. இப்போ திருக்கும் அரசினது தன்மையும் ஒரு வித்தி யாசமான நிலைப்பாட்டைக் கொண்டது.

கடந்த பல ஆண்டுகளாக நாங்கள் கையாண்டு வந்த முறைகளைப் போன்று இந்த அரசில் கையாள முடியாது. ஒரு சொற்ப காலத்திற்கு முஸ்லிம் அரசியலில் பேரம் பேசும் தன்மை மேலோக்கி வந்தது. நாங் கள் இன்று வரைக்கும் இந்த அரசாங் கத்தோடு அந்தப் பேரம்பேசும் அரசியலை சாத்தியமாக்கலாம் என்று காத்திருக்கிறோம். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், அது சாத்தியமில்லை. இந்த அரசோடு நட்பு அரசியலைத்தான் செய்ய முடியும். அந்த நட்பு அரசியல் செய்கின்ற தகுதியை பெரும்பா லும் முஸ்லிம் அமைச்சர்கள் இழந்தி ருக்கிறார்கள்.

முஸ்லிம்கள்சம்பந்தமானவிடயங்களில் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதற்காக அரசாங்கத்தை விட்டு வெளி யேறலாம். இவ்வாறு வெளியேறுவதையே ஏனைய அரசியல் சக்திகளும் எதிர்பார்த்தி ருக்கின்றன.

ஒட்டுமொத்தமாக இது தனிச் சிங்கள அரசுதான் என்று விட்டு வந்தால் இலங்கை யில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு என்ன நன்மையிருக்கிறது? என்பதையும் சிந்திக்க வேண்டும். இதற்குத்தான் முஸ்லிம் அரசி யல் சமூகமும் குடிமைச் சமூகமும் வர்த்தக சமூகமும் ஒன்றிணைந்து ஒரு முடிவை எடுப் பது பொருத்தமாக இருக்கும். இலங்கை முஸ்லிம்கள் விடயத்தில் அரசியல் சமூகம் தனித்து முடிவெடுப்பது இனிமேல் பொருத் தமற்றதாகத்தான் இருக்கப்போகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர் களின் தலைமையிலான இந்த அரசாங்கத் திற்கு முஸ்லிம்களது பாரிய பங்களிப்பு எது வும் இருக்கவில்லை என்றும் தனிச் சிங்கள வாக்குகளால் தேர்தலில் வெல்ல முடியும் என்றும் இவர்கள் நம்புகிறார்கள். அந்த அர சியல் சூழ்நிலையைத்தான் இவ்வாறான சிறு குழுக்கள் பயன்படுத்துகின்றன.

ஏனைய அரசுகள் தனியே சிங்களவர் களால் உருவாக்கப்பட்டது மிகவும் குறைவு. மிகச்சொற்பமான முஸ்லிம்களினதும் அதை விடவும் குறைவான தமிழர்களினதும் ஆதர வினால்தான் இந்த அரசு உருவானது. இந்த இரண்டு இனத்தவர்களின் ஆதரவு இல்லா விட்டாலும் இந்த அரசு நிலைக்கும்.

இந்த ஜனநாயக அரசியலில் மதம் மற் றும் இனங்களுக்கு சம உரிமை வழங்குவது போன்ற எல்லாக் குறைபாடுகளும் இருக் கின்றன. இந்நிலையில் முஸ்லிம்களுக்குள் ளிருக்கும் எல்லா நிறுவனங்களும் ஒரு குடை யின் கீழ் ஒன்றிணைவதன் மூலந்தான் இப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

**கேள்வி: இலங்கை முஸ்லிம்களின் அரசியல் போக்கு எவ்வாறுள்ளது?**

**நேர்காணல்: ஏ. முஹம்மத் பாயிஸ், அப்ரார் ஷாபி**

**பதில்:** இலங்கையில் அஷ்ரஃப் ஆரம் பித்து வைத்தது, முஸ்லிம்களினுடைய ஒற் றுமை சம்பந்தமான அடையாள அரசியல். இலங்கையைப் பொறுத்தவரையில் இன் றும் முஸ்லிம்களும் தமிழர்களும் அடை யாள அர்சியலை செய்தேயா்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கத்தான் செய்கிறது.

ஆனால், நேரடியாக அரசியல் களத்திலே அரசியல் கட்சிகள் முஸ்லிம்களுக்கு இருப் பதுபோல மறைமுகமான இஸ்லாமிய அரசி யல்அமைப்புகளும்இருக்கின்றன. முஸ்லிம் அரசியல் போக்கில் இன்னும் ஐந்து ஆண்டு களில் பிரகாசமான போக்கு காணப்படும் என்று நான் நினைக்கிறேன்.

ஏனென்றால், முஸ்லிம்களுக்கான குரல் ஒன்று தேவை என்ற போதுதான் முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்றது. அந்தக் குரல் அரசியலை, அபிவிருத்தி அரசியலாகவும் மாற்றுகிற போக்கை முஸ்லிம் காங்கிரஸி லிருந்து பிரிந்து வந்த அரசியல் தலைவர் கள் செய்தார்கள். இப்பொழுது முஸ்லிம் காங்கிரஸ் கொடுக்கின்ற குரலை நம்பகத் தன்மையுள்ள குரலாக மக்கள் அங்கீகரிக்க வில்லை என்பதைத்தான் எல்லாத் தேர்தல் முடிவுகளும் காட்டுகின்றன.


➡ 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு எதிராக புலிகள்

## கேணல் கருணாவின் தலைமையில் நடைபெற்ற புரட்சியின் 10 வது ஆண்டு நிறைவு

டி.பி.எஸ். ஜெயராஜ்



தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு முறை பெரிதும் அச்சமடைந்த, முன்னாள் கிழக்குப் பிராந்திய தளபதியாக இருந்த கேணல் கருணா என்கிற விநாயகமூர்த்தி முரளீதரன் தலைமையில் இடம்பெற்ற ஓர் உள்ளக அரசியல், இராணுவ புரட்சி அனுபவம் நடைபெற்று பத்து வருடங்கள் கடந்துவிட்டன. 2004ஆம் ஆண்டு மார்ச் 3 முதல் ஏப்ரல் 11 வரையான ஆறு வாரங்கள் இடம்பெற்ற அந்த கிளர்ச்சி புலிகளின் உயர்மட்டத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையிலுள்ள பிரதான பகுதி, எல்.ரீ.ரீ.ஈ. இனரால் இராணுவ வழிமுறைகளூடாக அடக்கி ஒடுக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான கிழக்குப் பகுதி எல்.ரீ.ரீ.ஈ. அங்கத்தவர்கள் அந்த உட்பூசலால் ஏற்பட்ட யுத்தத்தில் கொல்லப்பட்டது எல்.ரீ.ரீ.ஈ. யை கணிசமான அளவு வலுவிழக்கச் செய்தது.

கருணாவே பாதுகாப்புத் தேடி தென் பகுதியான சிங்களப் பகுதிக்கு தப்பி ஓடினார். கருணாவின் சொந்த சகோதரர் உட்பட அநேகமான, அவரது விசுவாசமான அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் புலிகளினால் வேட்டையாடப்பட்டார்கள். கருணாவுக்கு எதிராக ஒரு தொடர்ச்சியான அழிப்பு நடவடிக்கையை இறுமாப்புள்ள புலிகள் தொடர்ந்து நடத்தினர். ஸ்ரீ லங்கா அரசதரப்பு பாதுகாப்பு இயந்திரங்களிடம் பாதுகாப்பு தேடுவதைத்தவிரகருணாவுக்குவேறு தெரிவை விட்டு வைக்கவில்லை. இதனால் போர் விரிவடைந்ததை தொடர்ந்து, கருணா மற்றும் அவரால் வழிநடத்தப்பட்ட கிழக்குப் பிரிவான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு (ரி.எம்.வி.பி) என்பன பிரதான பகுதி எல்.ரீ.ரீ.ஈ. இற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் தங்களையும் இணைத்துக்கொண்டு பல வழிகளிலும் சாதகமான பங்களிப்பினை அரசாங்கத்துக்கு நல்குவதற்கு வழியேற்பட்டது.

நாளடைவில் நிலைமை எல்.ரீ.ரீ.ஈ. இற்கு எதிராக வேகமாக மாறத் தொடங்கியது. கிழக்கு மாகாணத்தில் எல்.ரீ.ரீ.ஈ. நிலைகொண்டிருந்த பகுதிகளில் இருந்து அது விரட்டியடிக்கப்பட்டது. கிழக்குப் பகுதியில் இருந்து புலிகளை சுத்தம் செய்த பின்னர் அங்கு 2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் நடத்தப்பட்டது. விதியின் விசித்திரமான சுழற்சியினால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பன் ஒரு பகுதியாக ரி.எம்.வி.பி. போட்டியிட்டது. அதன் தலைமை வேட்பாளரான கருணாவின் முன்னாள் பிரதித் தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கிழக்கு மகாணத்தின் முதல் முதலமைச்சராகத் தெரிவானார்.

**எல்.ரீ.ரீ.ஈ. இல் உள்ள 32 துறைகளில் எதிலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தலைவராக இல்லை என கருணா குற்றஞ்சாட்டினார். 15 பேரைக் கொண்ட மத்தியகுழுவில் இரண்டு பேர் மட்டுமே கிழக்கை சேர்ந்தவர்களாக உள்ளனர்.**


கிழக்கு முற்றாக திரும்பிக் கைப்பற்றப்பட்டு தேசிய அரசியல் அங்கத்தில் மீள ஒருங்கிணைக்கப்பட்டதும் ஆயுதப் படையினர் வடக்கில் முன்னேறத் தொடங்கினார்கள். அதே சமயம், எல்.ரீ.ரீ.ஈ. பின்வாங்கத் தொடங்கியது. இறுதியில் புலிகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் காரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குள் வளைத்துக் கொள்ளப்பட்டனர். கடைசியில் எல்.ரீ.ரீ.ஈ. இனர் முள்ளிவாய்க்கால் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டனர். நந்திக்கடலேரிக் கரையில் வைத்து பிரபாகரன் கொல்லப்பட்டார். அந்த இடத்துக்கு தனது முன்னாள் தலைவரின் உடலை அடையாளம்காட்டுவதற்காககருணாஅழைத்து வரப்பட்டார். கசப்பான ஒரு முரண்பாட்டின் எடுத்துக்காட்டாக உயிரற்ற பிரபாகரன் உடலை கருணா வருத்தத்துடன் வெறித்துப் பார்ப்பதை அப்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் காண்பித்தன.

இன்று ராஜபக்ஷ அரசாங்கத்தில் கருணா ஒரு பிரதி அமைச்சர். அத்தோடு அவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவராகவும் உள்ளார். இதுதான் எல்.ரீ.ரீ.ஈ. உடன் அவர் விரோதித்துக் கொண்டதுக்கும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்ததுக்கும் அவருக்கு கிடைத்த நன்மைகள். கருணாவின் தலைமையில் கிழக்கில் உதயமான கிளர்ச்சி எல்.ரீ.ரீ.ஈ. இற்கு எதிரான நீண்ட போராட்டத்தில் ஒரு மிகப் பெரிய திருப்புமுனை. உண்மையான சண்டையில் கருணா தோற்றிருந்தாலும்கூட, அதைத் தொடர்ந்து உருவான முன்னேற்றங்கள் அவர் மேல் நிலைக்கு உயர்வதைக் காண்பித்தன. கிழக்கில் இடம்பெற்ற எல்.ரீ.ரீ.ஈ. இன் இந்த உள்ளக மோதல்களின் பத்தாவது நினைவு தினம் நடைபெறும் இந்த முக்கியமான தருணத்தில் அந்த மோதல்கள் பற்றி இந்தப் பத்தி சற்றுக் கவனம் செலுத்த விரும்புகிறது.

### யுத்த நிறுத்தம்

புலிகளின் உயர்மட்டத் தளமாகிய வன்னிக்கும் அதன் மட்டக்களப்பு, அம்பாறை பிராந்திய தளபதி கேணல் கருணா என்கிற விநாயகமூர்த்தி முரளீதரனுக்கும் இடையே எல்.ரீ.ரீ.ஈ. இற்குள் கொந்தளிக்கும் உள்ளக முறுகல்களின் விளைவாக கிழக்குப் பகுதியின் தீவிரமான தளபதியால் உருவான ஒரு வெளிப்படையான கிளர்ச்சியை 2004 மார்ச் 3 இல் உலகம் அறிய நேர்ந்தது. தொழிநுட்ப ரீதியாக அப்போது நோர்வேயின் அனுசரணையுடன் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் எல்.ரீ.ரீ.ஈ. இற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தம் அமுலில் இருந்தது. ஸ்கன்டிநேவிய யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்களிடம் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட எல்.ரீ.ரீ.ஈ. பிரிவு ஒரு சுயாதீனமான போக்கில் செல்லவிருப்பதால் கொழும்புக்கும் மட்டக்களப்புக்கும் இடையே ஒரு தனியான சமாதான ஏற்பாட்டை ஒஸ்லோ ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கருணா கேட்டுக்கொண்டார்.

நோர்வேயிடத்தில் இதை அறிவித்த பின்னர், கரடியனாற்றில் உள்ள தேனகம் செயலகத்தில் கருணா ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை 2004 மார்ச் 3 இல் நடத்தினார். அதில், வன்னியை தளமாக் கொண்ட எல்.ரீ.ரீ.ஈ. இனரிடமிருந்து கிழக்குப் புலிகள் சுதந்திரம் அடைந்திருப்பதாக அறிவித்தார். மட்டக்களப்பு மற்றும் அம்பாறை பகுதியை சேர்ந்தவர்கள் ஆற்றியுள்ள பங்களிப்புக்கும் தியாகத்துக்கும் மாறாக எல்.ரீ.ரீ.ஈ. உயர்மட்டம் கிழக்கு பிரிவினருக்கு எதிராக பாகுபாடு காட்டுவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.



எல்.ரீ.ரீ.ஈ. இல் உள்ள 32 துறைகளில் எதிலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தலைவராக இல்லை என கருணா குற்றஞ்சாட்டினார். 15 பேரைக் கொண்ட மத்தியகுழுவில் இரண்டு பேர் மட்டுமே கிழக்கை சேர்ந்தவர்களாக உள்ளனர் (கேணல் பதுமன் மற்றும் கேணல் கருணா). அதுவும் அவர்கள் முறையே திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு, அம்பாறை பகுதி தளபதிகளாக இருப்பதனால் தற்செயலாக இடம்பெற்றது. கருணா இதை இராணுவ நிலைகளுடன் ஒப்புநோக்கிக் காண்பித்தார். அதில் கிழக்குப் புலிகள் விகிதாசார ரீதியில் அதிக தியாகம் புரிந்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். அந்த நேரத்தில் 4,543 வரையான கிழக்குப் புலிகள் ஆயுதப் போராட்டத்தில் தங்கள் உயிர்களை இழந்திருந்தார்கள். இதில் 2,302 பேர் வடக்கில் நடந்த சண்டைகளில் உயிர் நீத்துள்ளார்கள். கிழக்கு பகுதி நடவடிக்கையில் 2,241 பேர் மட்டுமே பலியாகியிருந்தார்கள். இந்த தியாகங்களுக்கு கைமாறாக கிழக்குப் புலிகள் சமாதானத்துக்குப் பறகு நியாயமான தீர்வினை பெறவில்லை என கருணா குற்றஞ்சாட்டினார். இந்த நடவடிக்கையுடன் எல்.ரீ.ரீ.ஈ. இன் கிழக்குப் புரட்சி சம்பந்தமான செய்தி காட்டுத்தீ போல பரவத் தொடங்கியது.

தனது கிளர்ச்சி சமயத்தின்போது கருணா, கொழும்பிலுள்ள அதிகார சக்திகளுடன் ஒரு தனியான புரிந்துணர்வை பதியவைக்க முயற்சி மேற்கொண்டார். தனக்கும் கொழும்புக்கும் இடையே தனியான ஒரு புரிந்துணர்வு குறிப்பாணையை மேற்கொள்ள நோர்வே அனுசரணை வழங்கவேண்டும் என அவர் விரும்பினார். பிரபாகரன் கையொப்பமிட்ட யுத்த நிறுத்தம் தன்னைக் கட்டுப்படுத்தாது என கருணா அறிவித்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமாஸ் - பதாஹ் உடன்படிக்கை பேச்சுவார்த்தையிலிருந்து இஸ்ரேல் விலகல்



பலஸ்தீனில் ஹமாஸும் ஃபத்ஹும் நல்லிணக்க உடன்படிக்கை செய்து கொண்டதை தொடர்ந்து இஸ்ரேல் பலஸ்தீன் அமைதிப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகியது. கடந்த வியாழக்கிழமை ஐந்து மணிநேரம் நீண்ட இஸ்ரேலின் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. பேச்சுவார்த்தையிலிருந்து இஸ்ரேல் விலகியதைத் தொடர்ந்து அமெரிக்க வெளியுறவு செயலாளர் ஜான் கெர்ரியின் முயற்சியில் துவங்கிய பலஸ்தீன் - இஸ்ரேல் இடையேயான பேச்சுவார்த்தை சீர்குலைந்தது. பலஸ்தீன் - இஸ்ரேல் பேச்சுவார்த்தையின் கால அவகாசத்தை நீட்டிப்பதற்கு பலஸ்தீனும் இஸ்ரேலும் முயற்சிக்கின்றன.

ஏழு ஆண்டுகளுக்கு பிறகு கருத்து முரண்பாடுகளை மறந்து ஒன்றிணைந்து செயற்பட காஸாவை ஆளும் ஹமாஸும் மேற்கு கரையை ஆளும் ஃபத்ஹும் உடன்படிக்கை செய்துகொண்டது இஸ்ரேலுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. ஹமாஸுடன் உடன்படிக்கை செய்துகொண்ட ஃபத்ஹின் நடவடிக்கையை அமெரிக்காவும் கண்டித்துள்ளது.

அதேநேரத்தில், பலஸ்தீன் அமைப்புகளின் ஒற்றுமையை அரபுலீகும் வளைகுடா நாடுகளும் வரவேற்றுள்ளன. முக்கியத்துவம் வாய்ந்த சூழலில் இரண்டு அமைப்புகளும் ஒருங்கிணைந்து தனி ஐக்கிய பலஸ்தீன் நாடு உருவாக ஊக்கமளிக்கும் என்று அரபுலீகின் பொதுச் செயலாளர் நபீலுல் அரபி தெரிவித்தார். மோதலை கைவிட்டு ஒன்றிணைந்து செயற்படுவதற்கான முடிவு நேரான திசையை நோக்கியது என்று வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலின் (ஜி.சி.சி) பொதுச் செயலாளர் அப்துல் லத்தீஃப் அல் ஸயானி தெரிவித்தார். பலஸ்தீனுக்கு அளித்து வரும் ஆதரவு தொடரும் என்று அரபுலீகும், ஜி.சி.சி. யும் அறிவித்துள்ளன.


## மது, புகைத்தலினால் ஐரோப்பாவில் ஏழு நிமிடத்துக்கு ஒருவர் மரணம்

ஐரோப்பிய நாடுகளில் ஏழு நிமிடத்துக்கு ஒருவர் மது அருந்தும் பழக்கத்தாலும் புகைக்கும் பழக்கத்தாலும் இறப்பதாக புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கின்றது. சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்ட மதுவும் புகையிலையும் மனித உயிர்களைக் குடிப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வாய்ப்பகுதி, சுவாசத் தொகுதி, ஈரல், கணையச் சுரப்பி போன்ற உறுப்புகளில் புற்றுநோய் கண்டு இறக்கும் வீதம் அதிகரித்துள்ளதாகவும் நீரழிவு நோய், இருதய நோய் மூச்சுத்தொகுதி நோய்களெனப் பலவித நோய்கள் மனிதர்களை வருத்தி இறக்க வைப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகைப்பழக்கம் உள்ளவர்கள் மத்தியில் ஏற்படும் இரத்த ஓட்டக் கோளாறு, Smoker's Leg எனப்படும் இயக்கமற்ற பாரமான காலின் ஒரு வகை வியாதிக்குக் காரணமாகி, அவற்றை அழுகும்படி செய்து அறுவைச் சிகிச்சை மூலம் கால்களை அகற்றும் நிலைக்கும் இருதய நோய் ஏற்படுவதற்கும் மூல காரணமாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வட கொரியாவுக்கு ஒபாமா எச்சரிக்கை



வட கொரியா தொடர்ந்து அதன் அயல் நாடான தென் கொரியாவிற்கு பிரச்சினைகளைத் தருமாயின், அமெரிக்கா தன் இராணுவப் பலத்தை பயன்படுத்தவும் தயங்காதென மிகவும் தெளிவான வார்த்தைகளால், வட கொரிய ஜனாதிபதியை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மிரட்டியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டுள்ள நாடுகளின் அமைதியையும் அதன் வாழ்வியல் முறைமைகளையும் சிதைக்க முயலின், தாம் இராணுவ பலத்தைப் பயன்படுத்த என்றும் பின்வாங்கப் போவதில்லை எனத் தெரிவித்தார். நான்கு நாடுகளுக்கான தனது ஆசியப் பயணத்தில் ஒபாமா தென் கொரியாவுக்கு சென்றிருந்தார். தென் கொரியாவில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்க இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றும் போது ஒபாமா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். வட கொரியா தன் அணுவாயுத நிகழ்ச்சி நிரலைத் தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றமை, உலக நாடுகளின் எதிர்ப்பை சம்பாதித்து, அந்நாட்டை இன்னும் தனிமைப்படுத்தும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சிரியாவில் ஜனாதிபதி தேர்தல்



சிரியாவில் மிக விரைவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சிரியா நாட்டு ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக கடந்த 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கிய போராட்டம் இன்னும் முடியாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அப்பாவி மக்களையும் போராட்டக்காரர்களையும் சிரியா அரசு கொன்று குவித்து வருகிறது.

அமெரிக்கா வற்புறுத்தியும் ஜனாதிபதி ஆசாத் பதவி விலகாததால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் போராட்டக்காரர்களுக்கு ஆயுத உதவி அளித்து வருகின்றன.

இந்நிலையில் வருகிற ஜூன் மாதம் 3 ஆம் திகதி சிரியாவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்றும் இதற்கான வேட்புமனு தாக்கல் இம்மாதம் 22 முதல் துவங்குவதாகவும் சிரியாவின் சபாநாயகர் முஹமது லகாம் அறிவித்துள்ளார்.

## உக்ரைன் எல்லையில் ரஷ்ய இராணுவ நடவடிக்கை



உக்ரைனில் அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்திவருவதன் மூலம் அந்நாட்டுக்கு எதிராக மாபெரும் தவறு இழைத்து வருவதாக ரஷ்யா மீது அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜான் கெர்ரி: உக்ரைன் எல்லையில் ரஷ்யா கூடுதலாக தனது இராணுவத்தை குவித்து அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் பயிற்சியை மேற்கொண்டு வருகிறது. வெளியிலிருந்து கொண்டே உக்ரைனின் உள்நாட்டு நடவடிக்கையில், நாச வேலைகளில் ரஷ்யா ஈடுபட்டு வருகிறது. இந்நிலையை ரஷ்யா தொடர்ந்து கடைப்பிடிக்குமானால், அதிக விளைவுகளை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார்.

உக்ரைனின் கிழக்கு பகுதியான ஸ்லாவ்யான்ஸ்க் நகரில் ரஷ்யா ஆதரவாளர்கள் மீது உக்ரைன் இராணுவம் அதிரடி தாக்குதலில் ஈடுபட்டதால் அந்த எல்லையில் ரஷ்யா புதிய படைவீரர்களை குவித்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. இதையொட்டி ரஷ்யாவுக்கு கண்டனம் தெரிவித்துள்ள உக்ரைன் அதிபர் அலெக்சாண்டர் தூர்ச்சினோவ், உக்ரைன் விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்த வேண்டும். உக்ரைனை, தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் களமாக மாற்ற முடியாது என்று தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க அதிபர் ஒருவர் முதல் தடவையாக மலேசியா பயணம்



கடந்த 50 ஆண்டுகளில் பதவியிலுள்ள அமெரிக்க அதிபர் ஒருவர் மலேசியாவுக்கு சென்றுள்ளமை இதுவே முதல் தடவை.

பசுபிக் பிராந்திய வணிக ஒப்பந்தம் ஒன்றில் மலேசியா அரசாங்கத்தை கையொப்பம் இடுமாறு ஒபாமா வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மலேசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் எல்லாக் காலங்களிலும் நல்லவிதமாக இருந்ததில்லை.

குறிப்பாக, மஹதிர் மொஹமட் பிரதமராக இருந்த காலத்தில் இருதரப்பு உறவுகளில் சிக்கல்கள் இருந்தன. அமெரிக்க கொள்கைகளை அவர் பெரும்பாலும் கடுமையாக விமர்சித்து வந்துள்ளார்.

## கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த உலக வயதானவர் மரணம்



இத்தாலி நாட்டைச் சேர்ந்த அர்த்ரோ லிட்டிகோ என்பவர் கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி உலக கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்து உலகின் மிக அதிக வயதுடைய ஆண் என்ற பெருமை பெற்றார்.

அர்த்ரோ லிட்டிகோ இத்தாலியில் மே 2/1902 ல் பிறந்தார். 19 வயதில் இராணுவத்தில் சேர்ந்தார். 1939 இல் இராணுவ வாழ்க்கையை நிறைவு செய்து வணிகத்தில் இறங்கினார். சென்ற மாதம் 24 ஆம் திகதி இவருக்கு மரணம் நேர்ந்தது. மே மாதத்துடன் இவருடைய வயது 112 ஆக இருக்கும் என்று உலக கின்னஸ் புத்தகத்தின் தலைமை ஆசிரியர் கிரேக் க்ளெண்டே தெரிவித்துள்ளார்.

**தொகுப்பு:**
**எஸ். ஸஜாத் முஹம்மத் (இஸ்லாஹி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பத்ஹுல்லாஹ் குலனின் மீது விழுந்த உஸ்மானிய அறை



ஸகி பவ்ஸ் (நளீமி)

பென்சில்வேனியாவிலிருக்கும் மனிதனுக்கும் அவரது கூலிப்படைக்கும் துருக்கிய மக்கள் தலைசாய்க்க மாட்டார்கள். ஜனநாயகத்தை நேசிப்பதாகவும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே எங்களுடைய பணிகளின் ஒரே இலக்கு எனவும் கத்தித் திரிந்தார்களே! இதோ துருக்கிய மக்கள் ஜனநாயகத்தை செயற்படுத்தி விட்டனர். நீங்கள் போலியாக தம்பட்டமடித்த ஜனநாயகத்தினூடாகவே ஆளும் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட்டது. இப்போது நீங்கள் துருக்கிய அரசியலில் எங்கிருக்கிறீர்கள் என்பதை சொல்லுங்கள்?

இவை வெற்றியுரையின் போது துருக்கியின் பிரதமர் ரஜப் தையிப் அர்துகான் பேசிய வார்த்தைகள்.

சென்ற மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் துருக்கியில் இடம்பெற்றன. இவை சாதாரண உள்ளூராட்சி சபைத் தேர்தல்களாக இருந்தபோதிலும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களை விட சூடானதாக காணப்பட்டது.

இந்த வருடம் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் ரஜப் தையிப் அர்துகான் வேட்பாளராக களமிறங்கப் போவதாக பரவலாகப் பேசப்பட்டன. எனவே, தற்போது துருக்கிய அரசியல் களத்தில் பிரதமர் ரஜப் தையிப் அர்துகான் பெற்றிருக்கும் பாராட்டுக்களும் புகழ் மாலைகளும் சாதனைகளும் மறுபுறத்தில், கடந்த தசாப்தம் முழுவதும் மதச்சார்பற்ற எதிர்க்கட்சிகள் அனுபவித்த அவமானங்களும் இலகுவில் ஜனாதிபதித் தேர்தலில் அர்துகானை வெற்றிபெறச் செய்யலாம் என ஆறு வருடங்கள் பலமாக அலைமோதின. இந்தப் பின்புலத்தில் துருக்கிய அரசின் எதிரிகளான அறிஞர் பத்ஹுல்லாஹ் குலன் அமைப்பினரும் மதச்சார்பற்ற எதிர்க்கட்சிகளும் இணைந்து நடப்பு நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் முன்னணி உறுப்பினர்களுக்கும் பிரதமர் ரஜப் தையிப் அர்துகானுக்கும் எதிராக பணமோசடி குற்றச்சாட்டுகளை அவிழ்த்துவிட்டன. இதனூடாக பிரதமரின் புகழுக்கும் சாதனைகளுக்கும் சேறு பூசுவதோடு, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரை தோல்வியடைச் செய்வதே எதிர்க்கட்சிகளின் நோக்கமாகும். எனவே, பிரதமரின் அரசியல் தூய்மையை நிறுவுதற்கான களமாக இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கருதப்பட்டன.

இரண்டாவது, கடந்த ஒரு தசாப்த காலமாக துருக்கியின் சமூக சேவை அமைப்பாக அடையாளப்படுத்தப்பட்ட உஸ்தாத் பத்ஹுல்லாஹ் குலன் அணியினர் அரசின் அனைத்து நிறுவனங்களிலும் நுழைந்து அரசுக்குள் அரசாக தொழிற்பட்டு வந்தனர். பிரதமர் ரஜப் தையிப் அர்துகான் பல முறை எச்சரித்தும் இவர்கள் அரசுக்கு எதிராகவே நின்றனர். இதனால் துருக்கியின் உள்நாட்டு அரசியல் களத்திலும் அதன் வெளிநாட்டு அரசியல் நகர்வுகளிலும் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டன. குறிப்பாக, குர்திஷ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கோடு நடப்பு அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை மறைகரம் கொண்டு தோல்வியடையச் செய்யும் பல கீழ்த்தரமான முயற்சிகளை குலன் அமைப்பினர் மேற்கொண்டனர். மாத்திரமல்லாமல், சமீபத்திய துருக்கியின் சிரியா மற்றும் எகிப்திய இராணுவச் சர்வதிகாரம் தொடர்பான நிலைப்பாடுகளை சர்வதேச மட்டத்தில் விமர்சிக்கும் அளவுக்கு குலன் அமைப்பினர் செயற்பட்டனர். எனவே, பிரதமர் ரஜப் தையிப் அர்துகான் இவர்களை களை பிடுங்கப் போவதாக சூளுரைத்தார். இதனைத் தொடர்ந்து குலன் அமைப்பினர் எதிர்க்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் அரசைப் பழிவாங்கப் போவதாக அறிவித்தனர். மறுபுறத்தில், அவ்வாறு தனது கட்சியை தோல்வியடையச் செய்தால், தான் அரசியல் களத்திலிருந்து விலகத் தயார் என பிரதமர் சவால் விட்டார். இதனால், அர்துகானின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தலாகவும் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கருதப்பட்டன.

மூன்றாவதாக, துருக்கிய அரசின் சமீபத்திய அரசியல் நகர்வுகள் சர்வதேச மட்டத்தில் பலத்த கண்டனத்துக்கு உட்பட்டமை உண்மை. குறிப்பாக, சமூக இணையத்தளங்களை அரசு கட்டுப்படுத்தியமை உட்பட, எகிப்து மற்றும் சிரியா தொடர்பாக மேற்கு நாடுகளையும் அமைப்புக்களையும் ரஜப் தையிப் அர்துகான் கடுமையாக சாடியிருந்தார். ஜனநாயகத்தின் பெயரால் சர்வதிகார ஆட்சியை அர்துகான் நடத்துவதாகவும் துருக்கியை ஐரோப்பிய யூனியனுடன் இணைப்பதாக சொல்லிவிட்டு இஸ்லாமியவாதிகளை அரவணைப்பதாகவும் மேற்கத்தேய மீடியாக்கள் ஆர்ப்பரித்தன. இந்தப் பின்புலத்தில், துருக்கிய மக்கள் தற்போது நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சிக்கான ஆதரவை குறைத்துக் கொண்டுள்ளதாக பரவலாகப் பேசப்பட்டது. எனவே, நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி தொடர்ந்தும் துருக்கிய அரசியல் களத்தில் உற்சாகத்தோடும் மக்களாதரவோடும் பணியாற்றுகிறது என்பதை நிறுவுவதற்கான சந்தர்ப்பமாகவும் இவ்வுள்ளூராட்சித் தேர்தல்கள் நோக்கப்பட்டன.

துருக்கியின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் எதிர்க்கட்சிகளின் அதிகாரக் கனவுகளை சுக்குனூறாக்கியது. காரணம், ஆளும் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் வாக்குகளை எப்படியாது 35 வீதத்திற்கு குறைக்கவேண்டும் என எதிர்க்கட்சிகள் கடும் பிரயத்தனங்களை எடுத்துக்கொண்டன. ஆனால், சென்ற வருடத்தை விட 7 வீதம் வாக்குகளை (45 வீதம்) அதிகம் பெற்று ஆளுங் கட்சி பெரு வெற்றியீட்டியது. அதற்குமப்பால், பல தசாப்த காலங்களாக மதச்சார்பற்றவாதிகளின் கோட்டையாக கருதப்பட்டு வந்த கமால் அதாதுர்கின் அனடோலியா பிரதேசம் இம்முறை ஆளும் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி வசமாகியது. மேலும், பல ஹிஜாப் அணிந்த பெண்கள் மேயர்களாக தெரிவாகியுள்ளமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய இன்னோர் அம்சமாகும். அறிஞர் பத்ஹுல்லாஹ் குலன் ஆதரவளித்த பிரதான எதிர்க்கட்சியான மதச்சார்பற்ற குடியரசுக் கட்சி வெறும் 27 வீத வாக்குகளை மாத்திரமே பெற்றது. இத்தேர்தல் முடிவுகளுக்கூடாக எதிர்க்கட்சியினருக்கும் குலன் அமைப்பினருக்கும் உஸ்மானிய அறையை துருக்கிய மக்கள் கொடுத்துள்ளதாக அர்துகான் குறிப்பிட்டார். நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வாக்களிப்பில் மக்கள் பங்குபற்றல் 90 வீதமாகக் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

எவ்வாறு எதிர்க்கட்சியினதும் பத்ஹுல்லாஹ் குலன் அமைப்பினதும் பலமான எதிர்ப்புப் பிரசாரத்திற்கு மத்தியிலும் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி வெற்றியீட்டியது? என்ற கேள்விக்கு விடை காணுவது மிக முக்கியமானதாகும். அதற்கான மூல நியாயங்கள் இரண்டை சர்வதேச அரசியல் விற்பன்னர்கள் முன்வைக்கின்றனர். முதலாவது, கடந்த தசாப்தத்தில் துருக்கிய சமூகம் அனுபவித்த பாரிய பொருளாதார அபிவிருத்தியை குறிப்பிடலாம். வெறும் 3000 டொலர்களாகக் காணப்பட்ட தலாவருமானம், 2013 இல் 10,000 டொலர்களாக உயர்ந்துள்ளது. இன்னும், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்ற அனைத்து கடன்களையும் துருக்கிய அரசு திருப்பிச் செலுத்தி நிறைவு செய்துள்ளது. மாத்திரமன்றி, 2023 இல் துருக்கியின் பொருளாதாரத்தை உலகின் பத்து சிறந்த பொருளாதார வளமுள்ள நாடாக மாற்றுவதற்கான பாதையில் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி பயணிக்கிறது. இரண்டாவதாக, துருக்கிய மக்கள் மதச்சார்பற்ற எதிர்க்கட்சிகளை நம்பவில்லை. காரணம், அவர்கள் ஆளுங்கட்சியின் செயற்பாடுகளுக்கு எதிராக செயற்படுகின்றனரே தவிர, நியாயமான அபிருத்தித்திட்டங்கள் எதனையும் மக்களுக்கு முன்னால் காட்சிப்படுத்தவில்லை. பிரதமர் ரஜப் தையிப் அர்துகான் துருக்கிய மக்களை தனது திட்டங்களால் கவர்ந்தளவுக்கு, மதச்சார்பற்ற எதிர்க்கட்சிகளால் முடியவில்லை.

→ 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Facebook அறிமுகம்




கடந்த இதழ் தொடர்...

## Right Menu

இதில் Facebook இல் உள்ளடங்கும் விடயங்கள் அனைத்தும் பட்டியலிடப் பட்டிருக்கும்.

### Profile

உங்கள் profile ஐப் பாப்பதற்கும் அதனை Edit செவ்வதற்கும் இதனை Click செய்யலாம்.

### Favorites

அதன் கீழ் காணப்படும் பகுதியில் Message, Events, Photo, Browse என்பன Default ஆக Favorites எனப் பட்டியலிடப்பட்டிருக்கும். மேலும், எமக்குத் தேவையானவற்றையும் Favorites ஆக இணைத்துக் கொள்ளலாம். அல்லது ஏலவே Default ஆக உள்ளவற்றை நீக்கலாம்.

### List

குடும்பம், தொழில் புரியும் இடம், கல்விகற்ற இடம், வசிக்கும் இடம் என்று Facebook இல் நாம் கொடுக்கும் விபரங்களுக்கு ஏற்ப நண்பர்கள் பட்டியல் படுத்தப்பட்டு இதில் வகைப்படுத்தப் பட்டிருப்பர். இது தவிர, நாமும் எமக்கு வேண்டியவாறு நண்பர்களின் பட்டியலைத் தயாரிக்க முடியும்.

### Interest

நாம் Follow பண்ணுபவர்களின் செயற்பாடுகள் இதில் காணப்படும்.

## Reminders & Advertisement




உங்கள் நண்பர்களின் பிறந்த நாள் மற்றும் உங்களுக்கு யாராவது ஏதாவது நிகழ்வுக்கு Invite பண்ணியிருந்தால் அவை Reminder ஆக இதில் காட்டப்படும். மேலும் அதன் கீழ் Facebook Advertisement காணப்படும்.


## Activity Feed & Chat




Activity Feed இல் உங்கள் நண்பர்களின் செயற்பாடுகள் காண்பிக்கப்படும். உங்கள் நண்பர்கள் லைக் பண்ணுவது கொமண்ட் பண்ணுவது Share பண்ணுவது போன்ற அனைத்து செயற்பாடுகளையும் இதில் காணலாம்.

அதன் கீழ் நண்பர்களுடன் Chat பண்ணுவதற்கான வசதி தரப்பட்டுள்ளது.

## Status update & Newsfeed




நீங்கள் Facebook இல் பதிவேற்ற விரும்புகின்றவற்றை இந்த Status update இல் பதிவேற்றலாம்.

Newsfeed இல் அனைத்துப் பதிவுகளும் காணப்படும்.

உதாரணம்:

நீங்கள் பதிவேற்றியவை Share பண்ணியவை

உங்கள் நண்பர்கள் பதிவேற்றியவை Share பண்ணியவை

உங்கள் நண்பர்களை யாராவது Tag பண்ணி ஏதாவது பதிவேற்றியிருந்தால், அவை.


நீங்கள் Like பண்ணிய பக்கங்கள் பதிவேற்றியவை

நீங்கள் இணைந்திருக்கும் குழுக்களால் பதிவேற்றப்படுபவை

இன்னும் பல...

இவ்வாறு பல பகுதிகள் இதில் காணப்படுகின்றன. மேலும், இவற்றின் பிரதான பகுதிகளை நாம் அடுத்துவரும் இதழ்களில் தனித்தனியே பார்ப்போம்.

ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org
azeemnaleemi@gmail.com




# மெகா ஃபிக்ஸல்ஸ் என்றால் என்ன?

மெகா ஃபிக்ஸல்ஸ் (Mega Pixels) என்ற வார்த்தையை தற்காலத்தில் அடிக்கடி கேட்டு வருகிறோம். முக்கியமாக டிஜிட்டல் கமரா வரவால் இவ்வார்த்தை சாமானியர்களிடமும் மிகவும் பிரபலமாகிவிட்டது.

ஒரு ஃபிக்ஸல் என்பது கணினி மொனிட்டர் அல்லது (டிஜிட்டல் ஸ்க்ரீனில்) காட்சித்திரையில் தெரியும் காட்சியில் ஒரு சிறிய சதுர புள்ளி ஆகும். இவ்வகை திரைகள்ள ஓர் உருப்பெருக்கி கண்ணாடி மூலம் நோக்கினால் அப்புள்ளிகளை நாம் எளிதாக காணலாம். ஸ்க்ரீனில் புள்ளிகள் அதிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்தால் காட்சி அல்லது படம் மிக தெளிவாக தெரியும்.

இதை நாம் உபயோகிக்கும் செல்போன்களில் தெளிவாக பார்க்கலாம். அதாவது விலை குறைந்த செல்போன் ஸ்க்ரீனில் இந்த கட்டங்கள் சாதாரண கண்களுக்கே தெளிவாக தெரியும். அதே வேளை, மிக விலை உயர்ந்த போன்களின் டிஸ்ப்ளேக்களில் இந்த புள்ளிகள் சாதாரண கண்களுக்கு புலப்படாது. ஆனால், ஓர் உருப்பெருக்கி கண்ணாடியை வைத்து பார்த்தீர்களானால் ஃபிக்ஸல்ஸ் எனப்படும் புள்ளிகளை காணலாம். அதாவது ஃபிக்ஸல் எனப்படும் அப்புள்ளிகள் அதிகரிக்க, அதிகரிக்க காட்சி அல்லது படம் பளிச் சென்றும் அதிக கவர்ச்சியுடனும் தெரிய ஆரம்பிக்கிறது.

எனவே, நாம் வாங்கும் டிஜிட்டல் கமராக்களில் ஃபிக்ஸல்கள் அதிகமாக இருப்பின் படங்கள் தெளிவாக இருக்கும். ஒரு மில்லியன் ஃபிக்ஸல்கள் ஒரு மெகா ஃபிக்ஸல் என்று அழைக்கப்படுகிறது. உதாரணத்திற்கு: *3.1* மெகா ஃபிக்ஸல்ஸ் கமராவில் *2048 - 1536* புள்ளிகள் கொண்ட போட்டோவை எடுக்கலாம். அதன் மொத்த புள்ளிகள் *3,145,728* ஃபிக்ஸல்ஸ் ஆகும். இந்த அளவே *3.1* மெகா ஃபிக்ஸல் என்று அழைக்கப்படுகிறது.




தொழிநுட்பம் வளர, வளர அதிக மெகா ஃபிக்ஸல்கள் கொண்ட கமரா உருவாக்கப் பட்டுக் கொண்டே வருகிறது. தற்போதைய நிலவரப்படி சாதாரண பயன்பாட்டிற்காக அதிகபட்சமாக 120 MP கமரா மார்க்கட்டில் கிடைக்கிறது. இதன் விலை சுமார் *37,000* அமெரிக்க டொலர்களாகும். ஆனால், ஆராய்ச்சிக்காக உருவாக்கப்பட்ட *570* மெகா ஃபிக்ஸல்ஸ் கொண்ட Fermi lab's digital camera தான் உலகின் மிக அதிகளவு மெகா ஃபிக்ஸல்ஸ் கமராவாகும்.




# மரியானா அகழி

உலகின் கடற்பகுதிகளில் உள்ள மிகவும் ஆழமான இடம் வடக்கு பசிபிக் பெருங்கடலில் உள்ள மரியானா தீவுகளுக்குத் தெற்கிலும் கிழக்கிலும் குவாமுக்கு அருகில் அமைந்துள்ள மரியானா அகழி (Mariana Trench) ஆகும்.

*31,614* அடிகள், அதாவது *9,636* மீற்றர் என்று *1872, 1876* களில் சேலஞ்சர் ஆய்வுப் பயணத்தின்போது அறிவிக்கப் பட்டது.

பின்னர் சேலஞ்சர் இரண்டாவது பயணத்தின்போது எதிரொலி மானியை பயன்படுத்தி துல்லியமாக அளந்து *10,900* மீற்றர்கள், (*35,760* அடிகள்) என அறிவிக் கப்பட்டது.

*1957* ஆம் ஆண்டில் வித்தியாசு எனப்படும் சோவியத் கடற்கலம், இதன் ஆழம் *11,034* மீற்றர்கள் (*36,200* அடிகள்) என அளவிட்டது.

இதுவரை எடுக்கப்பட்டவற்றுள் மிகத் திருத்தமானது எனக் கொள்ளத்தக்க அளவீடு *1995* ஆம் ஆண்டில் எடுக்கப் பட்டது. ஜப்பானின் இந்த ஆய்வுத்திட்டத்தில் கைக்கோ என்னும் ஆளில்லாக் கலம் *1995*, மார்ச் *24* ஆம் திகதி அகழியின் அடித்தளத்தில் இறங்கியது. இது அகழியின் ஆழத்தை *10,911* மீற்றர்கள் (*35,798* அடிகள்) என அளவிட்டது.

நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில், இந்த விபரங்கள் இதுவரை மனிதன் அறிவுக்கு உட்பட்டு கண்டுபிடித்ததே ஆகும். கடலில் ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்கு மேல் மனிதனாலோ, அவன் கண்டுபிடித்த உபகரணங்களாலோ செல்ல முடியவில்லை என்பதே உண்மை. காரணம் ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்கு மேல் வெளிச்சம் உட்புக முடியாததாலும் நீரின் அழுத்தம் குறைவதாலும் ஏற்படும் பாதிப்புகளை களைய இன்னும் உபகரணங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

இயல்பிலேயே அழகு, அலங்காரம் என்பவை பெண்களுக்குப் பிடித்தமான விடயங்கள்.

தன்னை அழகுபடுத்திக் கொள்வது அற்புதமான தொருவிடயம். அழகாக இருப்பதும் நேர்த்தியான உடையணிவதும் நிச்சயம் தன்னம்பிக்கையை வளர்ப்பன.

நம்மில் அநேகர் விரும்பியோ, வெறுத்தோ அழகை வெள்ளை நிறத்தோடு சம்பந்தப்படுத்தியே

## அழகுபடுத்தும் பாடு

### உயர்த்திவிட்ட கொண்டைகளும் வீதியில் இழுபடும் உடைகளுமாய் இந்த பெஷன் வளர்கிறது

பார்க்கப் பழக்கப்பட்டிருக்கிறோம். தோலை உரித்தாவது அந்த நிறம் பெறுவதற்காக ஆயிரம் அழகு சாதனப் பொருட்களை பாவிக்கிறோம். சிவப்பழகுக் கிரீம்கள் அதிகம் விற்பனையாவது இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஆகும்.

அதிக தண்ணீர், உடற்பயிற்சி, பழங்கள், பச்சைக் காய்கறிகள், தேவையான தூக்கம் போன்ற மாசுகளற்ற நல்ல உள்ளம் போன்றன உடலுக்கு அதிக வனப்பையும் ஆரோக்கியத்தையும் தருவதில் முதன்மையான விடயங்கள்.

சமீப காலத்தில், குறிப்பாக எமது முஸ்லிம் பெண்களிடையே, வட இந்திய சினிமா அல்லது சின்னத்திரை நாடகங்களின் பாதிப்பின் வெளிப்பாடுகளை அவதானிக்கலாம். உடையிலும் முகத்தில் அப்பியிருக்கும் மேக்அப் பூச்சுக்களிலும் பல பெண்களின் சுயம் தொலைந்து விட்டிருக்கிறது. யாரோ ஒருவரைப் போன்று ஆக வேண்டும் என்ற ஆசையில் மிதமிஞ்சிய, கண்மூடித்தனமான அலங்காரங்களில் எளிமையான அழகும் இனிமையும் தொலைந்து விட்டிருக்கின்றன.

இதேபோன்று எமது பெண்களின் அபாயா மற்றும் ஹிஜாப் உடைகளின் தேர்வும் அணியும் முறையும் முழுக்க முழுக்க மத்திய கிழக்கின் தழுவலாக மாறி விட்டிருக்கிறது. உயர்த்திவிட்ட கொண்டைகளும் வீதியில் இழுபடும் உடைகளுமாய் இந்த பெஷன் வளர்கிறது.

தனது சுயம், செய்யும் தொழில், பணி மற்றும் தேவைகளின் நிமித்தமான ஹிஜாப் உடைக்குப் பதிலாக ஏதோவொரு கலாசாரத்தின் தழுவலாக உடைகள் அணிவது வழக்கமாகி விட்டிருக்கிறது.

▸ அழகு வேறு ஆரவாரமான அலங்காரம் வேறு.

அழகை மெருகூட்டிக் கொள்வதில் பிழையில்லை. பொருத்தமற்று, வலிந்து மேற்கொள்ளும் ஒப்பனைகள் செயற்கையானவை.

▸ அழகுக்கும் வெள்ளை நிறத்திற்கும் நேரடி சம்பந்தம் கிடையாது. எமது உள்ளங்களில் காலங் காலமாய் வேரோடிப்போன ஓர் அசட்டு நம்பிக்கை அது. எந்த நிறமாயிருந்தாலும் சரி, மாசுகளற்ற சருமமே அழகாய் இருக்கும்.

▸ உடை தேர்வு செய்வதில் தனித்துவம் தேவை. ஒவ்வொரு சூழல், இடம், தொழில், தேவைகளை முன்னிட்டே அந்தத் தெரிவு இடம்பெறல் வேண்டும்.

▸ அழகாய் இருப்பதற்கு ஆரோக்கியமான வாழ்க்கை முறையும் நல்ல உள்ளமும் அத்தியாவசியமானவை.

▸ ஆபரணங்களாலும் வேறு அலங்காரங்களாலும் சோடிக்கப்பட்ட பெண்களை விட அறிவாலும் உறுதியான தன்னம்பிக்கையாலும் அலங்கரிக்கப்பட்ட பெண்களே காலத்தின் இப்போதைய தேவை. நமது அழகை மெருகூட்டுவது, அன்ன நடையைப் பழகப்போய் தன் நடையை இழந்துவிட்ட காக்கையின் கதையாகவிடக் கூடாது. சிந்திப்போமா?

சமீலா யூசுப் அலி




# அல்சரா?

## அலட்சியம் புற்றுநோயாகும்


*வாழ்க்கை* எவ்வளவு பரபரப்பாக மாறிக்கொண்டிருக்கிறதோ, அந்தளவு உடலும் பாதிப்புக்குள்ளாகிறது. இந்தப் பாதிப்புகளில் முதன்மையானது வயிற்றுப் புண் எனும் அல்சர்.

இன்றைய அவசர வாழ்க்கைச் சூழலில் நேரம் தவறிச் சாப்பிடுவதாலும் பட்டினி கிடப்பதாலும் காரம் நிறைந்த உணவுகளை அதிகம் ருசிப்பதாலும் வயிற்றுப் புண் ஏற்படுகிறது. அலட்சியம் காட்டினால், இது நாளடைவில் புற்றுநோயாக மாறுவதற்குக் கூட வாய்ப்புள்ளது.

**வயிற்றுப் புண் என்றால் என்ன?**

நாம் சாப்பிடும் உணவை செரிக்கச் செய்வதற்காக நம்முடைய வயிற்றில் ஹைட்ரோகுளோரிக் அமிலம் சுரக்கிறது. அதிக காரம் அல்லது எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகளை அதிகமாகச் சாப்பிடும்போது இந்த அமிலம் சுரக்கும். இந்த அமிலம், வயிறு மற்றும் முன் சிறுகுடலின் சுவர்களில் உள்ள மியூகோஸா படலத்தைச் சிதைப்பதால், புண் ஏற்படுகிறது. இதைத்தான் வயிற்றுப் புண் என்கிறோம்.

பொதுவாக, நமக்குப் பசி உணர்வு தோன்றியதுமே இந்த அமிலம் சுரக்க ஆரம்பித்துவிடும். பசி ஏற்படும்போது சாப்பிடாமல் இருந்தாலும் அல்லது நேரம் கழித்துச் சாப்பிட்டாலும் இவ்வாறு நிகழ்வதற்கு வாய்ப்புண்டு. குறிப்பாக, காலை உணவைத் தொடர்ந்து தவிர்ப்பவர்களுக்கு வயிற்றுப் புண் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். தவிர, கலப்பட உணவு, சுகாதாரமற்ற குடிநீர், மோசமான சுற்றுச்சூழல் ஆகியவற்றின் விளைவாலும் வயிற்றுப் புண் உண்டாகிறது. செரிமான மண்டலத்தைப் பொறுத்தவரை, வயிறு மற்றும் முன் சிறுகுடலில் புண் ஏற்படுகிறது. வயிற்றில் புண் ஏற்பட்டால், அதை கேஸ்ட்ரிக் அல்சர் என்றும் முன் சிறுகுடலில் புண் ஏற்பட்டால் அதை டியோடினல் அல்சர் என்றும் சொல்வோம்.




**வயிற்றுப் புண் அறிகுறிகள்**

வயிற்றின் மேற்பகுதியில் எப்போதும் வலி இருந்துகொண்டே இருக்கும். சாப்பிட்ட பின் இந்த வலி குறைந்தால், அது டியோடினல் அல்சர், சாப்பிட்டதும் வலி அதிகமானால், அது கேஸ்ட்ரிக் அல்சர். இவற்றைத் தவிர, வாந்தி, குமட்டல், வாயுக் கோளாறு, உடல் எடை குறைதல், சாப்பிடும் உணவின் அளவு குறைதல் போன்றவையும் குடல் புண்ணுக்கான அறிகுறிகளாக இருக்கலாம்.

குடல் புண் இருப்பதாகத் தோன்றினால், எண்டோஸ் கோப்பி பரிசோதனை மூலம் உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது.

**வயிற்றுப் புண் என்னென்ன பாதிப்புகளை ஏற்படுத்தும்?**

கேஸ்ட்ரிக் அல்சர் தொடர்ந்திருந்தால், அது புற்றுநோயாக மாறுவதற்கு அதிக வாய்ப்புண்டு. அதிலும், 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த வாய்ப்புகள் சற்று அதிகம்.

எனவே, அவர்கள் கவனமாக இருக்க வேண்டும். ஏற்கெனவே வயிற்றுப் புண் இருப்பவர்களுக்கு மேலும் அதிகமாக ஹைட்ரோகுளோரிக் அமிலம் சுரக்கும்போது புண்ணில் இரத்தக் கசிவு ஏற்பட்டு அது வாந்தியாகவும் வெளிவரலாம். மேலும், அதிக அமிலச் சுரப்பினால் குடலில் ஓட்டை விழுவதற்கான வாய்ப்புமுண்டு. அப்படி ஓட்டை விழுந்தால் அறுவைச் சிகிச்சை மூலம் மட்டுமே அதைக் குணப்படுத்த முடியும்.

**வயிற்றுப் புண் வருவதற்கு மன அழுத்தமும் ஒரு காரணம் என்கிறார்களே உண்மையா?**

ஓரளவு உண்மைதான். ஏதேனும் கவலையால் மனம் பாதிப்பு அடையும்போது, அமிலத்தின் சுரப்பும் அதிகமாகிறது. எனவே, இதன் தொடர்ச்சியாகக் குடல் புண் உருவாகலாம். அதனால், முடிந்தவரை மனதை அமைதியாக வைத்துக் கொள்வது நல்லது.

சில வலி நிவாரணிகளைத் தொடர்ச்சியாக எடுத்துக்கொள்ளும் போதும் வயிற்றுப் புண் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே இந்த மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

**வயிற்றுப் புண் வராமல் தவிர்க்க முடியுமா?**

நிச்சயமாகத் தவிர்க்க முடியும். முதலில் நேரத்துக்குச் சாப்பிட வேண்டும். புகை பிடிப்பவர்களுக்கும் மது அருந்துபவர்களுக்கும் வயிற்றுப் புண் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். எனவே, இந்தப் பழக்கங்களை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். காரம் நிறைந்த மற்றும் எண்ணெயில் பொரித்த உணவுகளை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவுக்குக் குறைப்பது நல்லது. எடையைக் குறைக்கிறேன் என்று பட்டினி கிடக்கக்கூடாது. உடல் இயக்க நிலையில் இருக்கும்போதுதான் உணவு எளிதில் செரிமானம் ஆகும். சாப்பிட்டதும் படுத்தால், உணவு செரிமானத்துக்கு நீண்ட நேரம் ஆகும். இதனால், வயிற்றுக்குள் அதிக நேரம் உணவு தங்கிருப்பதால், செரிமானத்துக்காக அமிலமானது அதிகமாகச் சுரக்கவேண்டி வரும். எனவே, சாப்பிட்டு இரண்டு மணிநேரம் கழித்தே உறங்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே தினம்: தொழிலாளர்களுக்கு...

(05 ஆம் பக்கத் தொடர்)

இவைகளுக்கும் அப்பால் அமெரிக்க தொழிலாளர்களின் 8 மணிநேர வேலைக்கான போராட்டமும் சிகாகோ தியாகிகளின் தியாகமும்தான் இன்றைய மே தினம் நம் முன் நிற்கக் காரணமாகியது.

அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து 'அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு' என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ் இயக்கம் 8 மணிநேர கோரிக்கையை முன்வைத்து 1886 மே 1 இல் நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இதன் மூலம் 1200 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களிலிருந்து அமெரிக்கா முழுவதுமாக 3,50,000 தொழிலாளர்கள் பங்கேற்ற மாபெரும் வேலைநிறுத்தம் நடைபெற்றது. அதே ஆண்டின் மே 3 ஆம் திகதி சிகாகோவில் நடைபெற்ற தொழிலாளர்களின் கண்டனக் கூட்டத்தில் 3000 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கு கொண்டனர். இக்கூட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக 4 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். இந்த இரண்டு பிரதான சம்பவங்களினாலும் ஏற்பட்ட தாக்கங்கள் இன்று உலகளவில் மே மாதம் முதலாம் திகதி பெரும்பாலான நாடுகளில் விடுமுறையாக அறிவிக்கப்பட்டு தொழிலாளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்வாறு விடுதலைக்கான போராட்டங்களையும் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தி வென்றெடுத்த எட்டு மணித்தியாலம் வேலை என்ற திட்டம், இன்று பெரும்பாலான நாடுகளில் எட்டு மணித்தியாலங்களாகவும் சில நாடுகளில் 10 மணித்தியாலங்களாகவும் மேற்கொள்ளப்படுகிறது. இந்த தொழிலாளர் போராட்டத்தின் மூலம், கிடைக்கப் பெற்ற உரிமையின் மூலம் 8 மணிநேரம் வேலை, எட்டு மணிநேரம் ஓய்வு, எட்டு மணிநேரம் பொழுதுபோக்கு என ஒரு தொழிலாளி தனது முழுநாள் வாழ்க்கையை திட்டமிட்டு செயற்படுத்த முடியும்.

இன்று உலகளவில் கொண்டாடப்படுகின்ற மே தினம் அரசியல் சாயம் பூசப்பட்டு நடத்தப்படும் துர்ப்பாக்கிய நிலைமையைக் கொண்டுள்ளது. இலங்கையில் மே தினம், அரசியல் கூட்ட மேடைகளாகவே மாறிவிட்டது. ஒவ்வொரு துறை சார்ந்த தொழிலாளரும் தமது தேவை, கோரிக்கைகளை முன்வைப்பதற்கு என தொழிலாளர் சங்கங்களை உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் தமது உரிமைகள், சலுகைகளை பெற்றுக்கொள்வதற்கு பணிப் பகிஷ்கரிப்பு போராட்டங்களை நடத்துகின்றனர். இதன் மூலம் தொழிலாளர்கள் தமது உரிமைகளை அரசிடம் கேட்டு பெற்றுக்கொள்ளப் பயன்படுத்தும் சாதனமாக தொழிற்சங்கங்கள் அமைகின்றன.

இலங்கையில் அண்மைக்காலமாக தொழிற்சங்கங்கள் கூட அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு நோக்குடைய தொழிற்சங்கம் தொழிலாளர் உரிமைப் போராட்டங்களின் போது எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி போன்றவற்றின் அரசியல் காய்நகர்த்தலுக்கு உட்படுவதை அவதானிக்க முடிகிறது. அத்தோடு கட்சிரீதியான தொழிற்சங்கங்களும் இலங்கையில் காணப்படுகின்றன. இவை தமது கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப தமது செயற்பாடுகளை அமைத்து இயங்குகின்றன.

இலங்கையில் இவ்வருட மே தினம் தொழிலாளர்களின் முழு வீச்சுடன் கூடியதாக அன்றி சோபையிழந்தே காணப்படக்கூடும். அவை பெருப்பித்துக் காணப்படுமாக இருந்தால் அரசியல் கட்சிகளின் செல்வாக்குடன் கூடிய ஓர் அணிதிரட்டலாகவேயன்றி அமைந்திருக்காது. இலங்கைத் தொழிலாளர்களின் மீது ஏற்றப்பட்டிருக்கும் வாழ்க்கைச் செலவு தொழிலாளர்களை சந்தோசத்துடன் கூடிய ஒரு மே தின அனுஷ்டிப்புக்கு கொண்டு செல்ல முடியாத நிலையை உருவாக்கியிருக்கின்றது.

இம்முறை மே தினத்தை அரசியல் கட்சிகள் நன்கு பயன்படுத்தும். எதிர்வரும் காலங்களில் அடுத்தடுத்து நடைபெறயிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் என்பன இம்மேதினத்தில் அரசியல் கட்சிகளை அதிகூடிய அக்கறை செலுத்துவதற்கு காரணமாக அமைந்துள்ளது. இவ்வாறான தேர்தல்களை எதிர்கொள்ள, மக்களை அணிதிரட்டி தமது பலத்தை உரசிப்பார்த்து வெளிக்கொணர்ந்தும் ஒரு களமாகவே மே தினம் அமைந்துள்ளது.

தொழிலாளர்களின் உழைப்பைக் கௌரவிக்க இலங்கையில் கொண்டாடப்படும் மே தினத்தில் மக்களுக்கு காணப்படும் பெரும் சுமையான வாழ்கைச் செலவும் எதிர்வரும் தேர்தலுக்காக மக்களை அணிதிரட்டுவதற்கான பலப் பரீட்சையும் செல்வாக்குச் செலுத்தும். இருந்தும் தொழிலாளர்கள் பல்வேறு படித்தர மட்டங்களில் காணப்படினும் இவ்வாழ்க்கைச் செலவு ஒவ்வொரு மட்டத்தினருக்கு ஏற்ப பாதிப்புச் செலுத்துகிறது. இவ்வாழ்க்கைச் செலவினூடாக வறுமைப் போராட்டத்தை ஈடுகொள்ள முடியாமல் அவர்கள் தங்களைத் தாங்களே மாய்த்துக்கொள்வதை அன்றாடம் செய்திகளாக அறிகிறோம். இம்மேதினத்தில் தொழிலாளர்களின் கஷ்டங்கள் உணரப்பட்டு அவர்களுக்கான நிவாரணங்கள் அரசியல் மட்டத்தில் உணரப்படுமாக இருந்தால் அதுவே அவர்களது உழைப்புக்குக் கிடைக்கின்ற நன்றிக் கடனாக அமையும்.

## பொதுபல சேனாவும்...

(03 ஆம் பக்கத் தொடர்)

வில்லங்கம் இல்லாமல் எதையாவது பேச எல்லோரும் தாயார். ஆனால், வில்லங்கத்திற்கு விலைப் போன பொதுபல சேனாவைப் பற்றி பேச யாரும் தாயாரில்லை. எல்லா முஸ்லிம் அமைச்சர்களும் தன் பதவியை காத்துக்கொண்டே தான் சார்ந்த சமூகத்தை பாதுகாக்க முடியாது. இன்னும் சில தினங்களில் நோன்பு வரவிருக்கின்றது. பட்ஜெட் பிரகாரம் போட்டு முடித்த கணக்குக்கு அமைய நோன்பு திறக்க அலரி மாளிகையில் இருந்து அழைப்பு வரும். குறைந்தபட்சம் முஸ்லிம் சமூகத்தின் நன்மை கருதியும் இந்த அரசாங்கத்திற்கு பொதுபல சேனா தொடர்பான தம் எதிர்ப்பு மனநிலையை பிரதிபலித்துக் காட்டவும் உலமா சபை, முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் இப்தார் அழைப்பை புறக்கணித்து தம் எதிர்ப்பை வெளிக்காட்ட முடியும். காகித அறிக்கையிலும் பார்க்க இந்த காத்திரமான நடவடிக்கை எரிந்துகொண்டிருக்கும் முஸ்லிம் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும்.

## கசினோவுக்கு...

(05 ஆம் பக்கத் தொடர்)

ஆகியோர் இந்த சட்டமூல வாக்களிப்பில் கலந்துகொள்ளாது தவிர்த்திருக்கின்றனர். இது ஒருவகையில், பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும் காட்டும் உத்தியே அன்றி இச்சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாக முடியாது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் 'தில்' இருந்திருந்தால் வாக்களிப்பில் கலந்துகொண்டு எதிர்த்து வாக்களித்திருக்க வேண்டும். அதன் மூலம் இச்சட்டமூலத்தை தோற்கடித்து நாட்டுக்கும் சமூகத்திற்கும் பேரழிவை ஏற்படுத்தும் சூதாட்டத்தை தடுத்த பங்காளியாகியிருக்க முடியும். இவர்களைப் பொறுத்தமட்டில் அமைச்சுப் பதவிகளுக்கும் நல்ல பிள்ளை பேருக்கும் ஆப்பு வந்துவிடும். சுமந்திரன் எம்.பி. சொன்னதுபோல இவர்களுக்கெல்லாம் முதுகெலும்பு இல்லை.

ஆதரவளித்த ஆசாமிகள், குறித்த சட்டமூலத்தில் கசினோ என்று ஒரு வார்த்தை கூட இல்லை; அதனால் வாக்களித்தோம் என்று கூறி பல்டி அடிக்கப் பார்க்கலாம். சமூகத்தின் எதிர்ப்பை சமாளிக்க கசினோ என்று ஒரு வார்த்தையை நீங்கிவிட்டு தந்திரமாக அனைத்து சூதாட்டம் உட்பட மாபாதக செயல்களையெல்லாம் உள்ளடக்கி சட்டமூலம் கொண்டு வரப்பட்டிருப்பதை அறிய முடியாதளவு இவர்கள் என்ன சிறு பாப்பாக்களா?

கசினோ இல்லாவிட்டால் நான் முதலீடு செய்ய தயாரில்லை என ஜேம்ஸ் பெக்கர் அறிவித்திருந்தும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் நிறுவும் பணி தொடர்கிறதென்றால் அதன் அர்த்தந்தான் என்ன? சமூகத்தாரை மடையர்களாக்கி விட்டு அரசாங்கம் செய்யும் காய்நகர்த்தலுக்கு இந்த ஆசாமிகளும் அடிபணிந்து போவதுதான் கவலையளிக்கிறது.

இவர்கள் அல்லாஹ்விடம் பதில் சொல்லிக் கொள்ளட்டும்.

வேண்டுமானால் எம்மால் ஒன்றே ஒன்று செய்ய முடியும்:

கொக்கு முட்டை பற பற சொல்லும் போது கையை உயர்த்தும் சிறுவர்களை ஆட்டத்தைவிட்டும் வெளியேற்றுவது போல அடுத்த தேர்தலில் இந்த ஆசாமிகளையும் எம்மால் வெளியே போட முடியும்!

## மத முரண்பாட்டு...

முன் பக்கத் தொடர்

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீம், இது உலகில் எங்குமே நடக்காத விடயம். இவ்விடயம் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல், நிலைமையை இன்னும் மோசமாக்குமே தவிர, பிரச்சினைக்குத் தீர்வாகமாட்டாது.

பொதுபல சேனா அமைப்பினர் தாம் உத்தியோகப்பற்றற்ற பொலிஸார் என ஏற்கனவே பிரகடனப்படுத்தியுள்ள நிலையில், இந்த பொலிஸ் பிரிவை அவர்கள் கையாளக்கூடிய ஆபத்து ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இப்பொலிஸ் பிரிவு பௌத்த சாசன மத விவகார அமைச்சில் அமைக்கப்பட்டிருப்பதும் இப்பிரிவில் முஸ்லிம் சமய விவகாரங்களை அறிந்த முஸ்லிம் அதிகாரி நியமிக்கப்படாமையும் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளன.

இப்பொலிஸ் பிரிவு அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பௌத்த சாசன மத விவகார அமைச்சின் செயலாளர், திஸா நாயக்க, இதற்குப் பிறகு மதஸ்தாபனங்கள் புதிதாக நிருவப்பட வேண்டுமானால் எமது அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மத விவகாரங்கள்...

முன் பக்கத் தொடர்

இலங்கையில் மதங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்ய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவின்படி அமைக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் மத விவகாரங்கள் அமைச்சின் கீழ் செயற்படவுள்ளது.

மத விவகாரங்கள் தொடர்பில் 011 2307674, 011 2307694 என்ற தொலைபேசி இலக்கங்கள் மற்றும் 011 2307688 என்ற தொலை நகல் இலக்கம் மூலமாக முறைப்பாடு செய்ய முடியும்.

## பொதுபல சேனாவுக்கு...

முன் பக்கத் தொடர்

இவர்களது நடவடிக்கை, சமூகங்களைக் கூறுபடுத்தி மக்களிடையே பாரிய இன முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. சர்வதேச அரங்கில் அரசாங்கத்திற்குள்ள வெளிநாடுகளின் ஆதரவை, மென்மேலும் குறைக்க விரும்பும் சில வெளிநாடுகள் சார்பாக பொதுபல சேனா இயங்குகிறதா என்ற சந்தேகமும் பரவலாக நிலவுகிறது.

2013 நவம்பர் 06 ஆம் திகதியன்று 1,96,000 பொதுமக்களது கையொப்பங்கள் அடங்கிய ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றை தேசிய ஷூரா சபையினர் கையளித்திருந்தனர். சிறுபான்மை மதத்தினரதும் அவர்களது மத ஸ்தலங்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்திற்கும் எதிரான அனைத்து எதிர்ப்புப் பிரசாரங்களையும் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் இம்மகஜரில் வேண்டப்பட்டிருந்தன.

கடந்த ஒன்றரை வருட காலத்தில் 300 இற்கும் அதிகமான மத விரோத, எதிர்ப்புடன் தொடர்புபட்ட சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் அதிகமானவை பொலிஸாரின் முன்னிலையிலேயே இடம் பெற்றுள்ளன.

பொதுபல சேனாவின் எதிர்ப்புப் பிரசாரம், புனித அல் குர்ஆனை இழிவுபடுத்தும் நிலையை இன்று அடைந்துள்ளது. இது உலகளாவிய ரீதியில், நாட்டிற்கெதிரான எதிர்மறையான அவப் பெயரை ஏற்படுத்தவே வழிவகுக்கும்.

பொதுபல சேனா தலைமையிலான கும்பல், ஏப்ரல் 09 ஆம் திகதி மதிப்பிற்குரிய வடரக விஜித தேரர் நடத்திய ஊடக சந்திப்பை கொலை அச்சுறுத்தல் மூலம் பலவந்தமாக குழப்பியிருக்கிறது. இதற்கு எதிராக, உடனடியாக சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என தேசிய ஷூரா சபை, அரசாங்கத்தையும் பொலிஸாரையும் வேண்டிக்கொள்கிறது.

நாட்டின் நன்மை கருதி, முஸ்லிம்களுக்கு எதிரான முஸ்லிம் சமூகத்தினது சமய, கலாசார, பொருளாதார, அரசியல் ஆணிவேரைத் தாக்கும் இந்த அழிவுப் பிரசாரம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

## முஸ்லிம்கள்...

முன் பக்கத் தொடர்

இதற்காக ஆரம்பகாலம் தொடக்கம் இற்றைவரை முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்புகளை வெளிக்காட்டக் கூடிய நிகழ்வுகள், கண்காட்சிகள் மற்றும் நூதனசாலைகள் அமைக்கப்பட வேண்டும். ஏனைய இன மக்களது பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக கொழும்பில் பெரிய பிரகடன மாநாட்டையும் நடத்த வேண்டும். இவ்வாறு பல்வேறு மாற்றுத் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்த முனைய வேண்டும் என அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார். எங்கள் தேசத்துக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வளவு காலமும் நாங்கள் செய்து வருகிற இந்த அரசியலிலே தன்னிலை சார்ந்த செயற்பாடுகள்தான் இருக்கின்றன. மாற்று சிந்தனையின் அடிப்படையில் முஸ்லிம்கள், தாங்களும் இலங்கையர் என்பதை செயற்பாடுகளின் மூலம் தக்கவைப்பதற்கான தேவையிருக்கிறது. இந்த செயற்பாடுகள்தான் இவர்களுக்குச் சொல்லுகிற பதிலாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

## 50 அரசதரப்பு ....

முன் பக்கத் தொடர்

இது அரசாங்கத்துக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள முதலாவது பெரும் பிளவாக இது பார்க்கப் படுகிறது.

நாடாளுமன்றத்தில் ஆளும் கூட்டணியில் 162 உறுப்பினர்கள் உள்ளபோதிலும் 112 உறுப்பினர்களே இதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

## இலங்கைக்கு விரல்...

முன் பக்கத் தொடர்

பாகிஸ்தானுக்கும் துணிவுடன் பாடம் கற்பிக்க வேண்டிய கட்டாயம் உருவாகியிருக்கிறது என இந்திய பிரதமருக்கான வேட்பாளர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கருத்துக்களை அவர் வெளியிட்டு வரும் நிலையில், மோடியுடனான உறவை வளர்த்துக்கொள்ள இலங்கை அரசு சார்பாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே தினம்: சங்க....

(09 ஆம் பக்கத் தொடர்)

முன்னெடுத்துச் செல்வதன் மூலமே அரசாங்கத்தை செயற்பட வைக்க முடியும் என்று கருதி, அதன்படி போராட்டங்களை வடிமைத்தவரும் தோழர் இளஞ்செழியனே.

இவையெல்லாம் இந்த மே தினத்தில் நினைத்துப் பார்க்கப்பட வேண்டியவை. இளைய தொழிலாளர் சமூகத்துக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டியவை. ஏனெனில், இப்படியெல்லாம் நடந்தன என்பதையும் இனி இதற்கெல்லாம் வாய்ப்புகள் அமையுமா? என்ற கேள்வியையும் இளைய தலைமுறையினரிடம் நாம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

சுதந்திரமும் உரிமைகளும் சும்மா கிடைத்தவை அல்ல என்பதை அறிந்திருந்தால் மட்டுமே அவற்றை பாதுகாக்கும் எண்ணம் உண்டாகும். அவற்றை விலை பேசத் தோன்றாது. விலை பேசுபவர்களை தடுக்கும் சக்தியும் எம்மிடம் உண்டாகும்.

மாற்றம் ஒன்றே, மாறாதது என்பார்கள். அந்த மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

பெருந்தோட்டங்களின் ஆரம்பகாலத்தை எடுத்துக்கொள்வோம். அன்றைக்கு முதலாளித்துவத்தின் ஆட்சி மட்டுமே. தொழிலாளர்களைப் பிழிந்து வேலை வாங்கி அதன் மூலம் அதிக இலாபத்தைப் பெறுவது மட்டுமே குறிக்கோள். இதற்காக வெள்ளை முதலாளிகள் தமக்கு விசுவாசமான கறுப்பு ஏவலர்களை வைத்திருந்தனர். அவர்களைத்தான் நாம் கங்காணி என்று அழைத்தோம். தென்னிந்தியாவில் இருந்து தமது கிராமங்களைச் சேர்ந்த ஏழைத் தொழிலாளர்களையும் தம்மை விட சாதியால் தாழ்ந்தவர்களையும் மந்தைகள்போல அழைத்து வந்து தோட்டங்களில் அடிமைகள்போல வேலை வாங்கினர். கங்காணிமார் வெள்ளைத்துரைமார் தயவில் பிழைப்பு நடத்த, தொழிலாளர் முடிவே இல்லாதத் துயரத்தில் ஆழ்ந்தனர். இவர்களுக்காக முதல் குரல் எழுப்பியவர் நடேச ஐயர் என்பது வரலாறு. தமிழ்த் தொழிலாளர் வரலாறு அங்கிருந்துதான் திசை திரும்புகிறது.

ஆனால் பார்த்தீர்களா, இதே கதை இன்று திரும்பவும் நிகழ்ந்து கொண்டிருப்பதை?

படுமோசமான முதலாளித்துவத்தின் பிடியிலிருந்து மீட்பதற்காக போராட வந்த மலையகத் தொழிற்சங்கங்கள் படிப்படியாக மாற்றம் அடைந்தன. எந்த முதலாளிகளுக்கு எதிராக போடார ஆரம்பித்தனவோ அதே முதலாளித்துவ அடையாளங்களை இந்தத் தொழிற்சங்கங்களே இன்று அணிந்து கொண்டிருக்கின்றன. இந்த சங்க முதலாளிகளை விட துரைமாரே மேல் எனத் தொழிலாளர்கள் சொல்லுமளவுக்கு நிலைமை மாறிவிட்டது.

அன்றைக்கு வெள்ளைத் துரைமார் தமது அடியாட்களாக கங்காணிகளை வைத்திருந்தனர். அவர்கள் மூலம் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். இன்றைக்கு அரசாங்கங்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் தொழிலாளர் உரிமைகள் மற்றும் நலன்களை ஒடுக்கவும் பிரச்சினைகளின் தீர்வுகளை தாமதப்படுத்தி இழுத்துச் செல்லவும் சங்க முதலாளிகளையே பயன்படுத்துகின்றன. கவனித்தீர்களா, எத்தகைய முரண்பாடு என்பதை!

இன்று மே தினத்தைக் கொண்டாடுவது யார்? தொழிலாளர்களா? தொழிலாளர் கூட்டம் சேர்க்க மட்டுமே கறிவேப்பிலையாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறார்களே தவிர, மே தினத்தை தொழிலாளர்களின் பெயரில் கொண்டாடுவது முதலாளிகளே. அவர்களுக்காக சங்க முதலாளிகள், அதாவது அன்றைய கங்காணிகள், மே தின வைபவங்களை ஏற்பாடு செய்து தருகிறார்கள். இதுதான் மலையகத்தில் இன்றைக்கு மே தினம்.

இந்த மலையகத் தொழிற்சங்கங்கள் மே தினத்தைக் கொண்டாடத்தான் வேண்டுமா? தொழிலாளர்களுக்காக எதைச் சாதித்திருக்கிறோம், எவற்றை சாதிக்கப் போகிறோம் என்பதை இவர்களால் மேடைகளில் தைரியமாகச் சொல்ல முடியுமா? நாங்கள் வலுவிழந்து போனோம். துவண்டு போனோம். போராடும் சக்தியை இழந்து போனோம். தொழிலாளர்களை எமது நலன்களுக்காக அடகு வைத்தோம் என்பதை இச்சங்க முதலாளிகள் ஒத்துக் கொள்ளமாட்டார்கள். அதற்கான அவசியமும் கிடையாது. ஏனெனில் எவற்றையெல்லாம் நாம் இழந்து வருகிறோம் என்பதை தொழிலாளர்களும் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை.

எனவே, மே தினம் அல்லது தொழிலாளர் தினம் என்பது இலங்கையில் அர்த்தம் இழந்து விட்டது என்பதையும் மலையகத்தில் அதன் அர்த்தங்கள் செத்துவிட்டன என்பதையும் புரிந்து கொள்ளும் நாளாக இது இருக்கட்டும். அப்படிப் புரிந்து கொண்டால்தான் எதிர்வினை ஆற்றக் கூடியதாக இருக்கும்.

## பத்ஹுல்லாஹ் குலனின்...

(13 ஆம் பக்கத் தொடர்)



பெரும்பான்மையான துருக்கிய மக்கள் மீண்டும் ஜனநாயகத்திற்கு எதிரான மதச் சார்பற்ற வாதம் மேனுவதை அச்சத்தோடு பார்க்கின்றனர். துருக்கியின் பிரபல்யமான மதச்சார்பற்ற பத்திரிகையான ஹுர்ரியத் டெயலியின் பிரதம ஆசிரியர்: எவ்வளவுதான் ஆர்ப்பாட்டங்களை எதிர்க்கட்சிகள் ஒழுங்கு செய்தாலும் அவர்களால் அர்துகானை வெற்றிகொள்ள முடியாது. துருக்கிய மக்கள் அவரை அளவுக்கு மீறி நம்பத் துவங்கியுள்ளனர் என்கிறார்.

### தேர்தல் வெற்றியின் பின்னர் துருக்கியின் எதிர்காலம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல்களில் பிரதமர் ரஜப் தையிப் அர்துகான் வேட்பாளராக களமிறங்குவதற்கான மக்கள் ஆணை கிடைத்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இதனடிப்படையில், பெரும்பாலும் பிரதமர் அர்துகான் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கலாம் என எதிர்வு கூறப்படுகிறது.

எதிர்க்கட்சிகளினது விசம பிரசாரத்தினாலும் உள்நாட்டு அரசியல் அசாதாரண நிலைகளினாலும் இடைநடுவே தேக்கமடைந்த குர்திஷ் மக்களுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடரலாம்.

மிக முக்கியமாக, அறிஞர் பத்ஹுல்லாஹ் குலனினுடைய அமைப்பினரின் சட்டவிரோத அரசியல் கையாடல்களுக்கு எதிராகவும் அவ்வமைப்பினர் அரசுக்குள் செயற்படுத்தும் இரகசிய ஏஜன்டாக்களையும் ஆளுங்கட்சியினர் தோலுரிப்பதோடு, அதை சட்டரீதியில் களைவதற்கான நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கலாம்.

இன்னும், எகிப்து, யமன், லிபியா மற்றும் சிரியா போன்ற நாடுகளில் இஸ்லாமியவாதிகள் முன்கொண்டு செல்லும் அரசியல் போராட்டத்திற்கு துருக்கிய நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் வெற்றி உந்துசக்தியாக அமையலாம்.

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் மதச்சார்பற்ற எதிர்க்கட்சிகள் மேலும் குட்டிச்சுவராகும் சந்தர்ப்பங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களோடு 6 ஆவது முறையாக மதச்சார்பற்ற கட்சிகள் தோல்வியடைந்துள்ளன. எனவே, கட்சியின் ஆதரவாளர்கள் நம்பிக்கையிழந்துள்ளதோடு, கட்சியின் தலைமைகள் மாற வேண்டும் எனக் குரலெழுப்பவும் ஆரம்பித்துள்ளனர்.

# புரூணையில் சில நாட்கள்...



புரூணையிலுள்ள சுப்பர் மார்கட் ஒன்று

தொடர்-25

——பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com

அன்று மாலை புரூணை நூதனசாலைக்குச் செல்வதற்கான ஏற்பாட்டில் இருந்தோம். ஸிஹானுக்கு அன்று முக்கிய வகுப்பொன்று இருந்ததினால் அதனை முடித்துக்கொண்டு வரும்வரை சொபிங் செய்வதென்றும் விடுதியில் சமைப்பது என்றும் முடிவு செய்திருந்தோம்.

இன்றுதான் அந்த 'கடாமோல்' இனை பார்க்கப் போகிறேன். நீங்கள் ஆட்டுக் கடாவெல்லாம் கற்பனை செய்யத் தேவையில்லை. கடா என்றால் கடை என்று வைத்துக் கொள்ளுங்கள். பெரிய சுபர் மார்க்கட்தான் இந்த கடாமோல். தாயையும் தந்தையையும் தவிர எல்லாம் வாங்கலாம் என்று ஒரு கதைக்கு சொல்வார்களே; அப்படியான ஓரிடந்தான் இந்த கடாமோல்.

அங்கு சென்று தேவையான பொருட்களை வாங்குவதற்கு மேலாக அந்நாட்டு வர்த்தக நடவடிக்கை, வர்த்தகர்களின் கலாசாரம் என்பவற்றைப் பார்க்கவேண்டும் என்பதே எனது தேவையாக இருந்தது.

ஜவுளிக் கடைகள் உட்பட பலதரப்பட்ட நூற்றுக்கணக்கான கடைகளைத் தன்னகத்தே கொண்டிருந்த ஒரு கடாமோலுக்குள் நுழைந்தோம்.

ஒரு ஜவுளிக் கடைக்குள் நுழைந்தபோது எங்களைக் கவனிக்கவோ, வியாபாரம் செய்யவோ ஆட்கள் இருக்கவில்லை. இருவர் உட்கார்ந்துகொண்டு அவர்களுடைய வேலையை பார்த்துக் கொண்டிருந்தனர். எங்கள் பாட்டுக்கு எடுத்தெடுத்துப் பார்த்துவிட்டு வந்துவிட்டோம்.

சொரணை கெட்டவர்கள்; என்ன தேடுகிறீர்கள் என்றாவது கேட்கவேண்டாமா?

புரூணையில் இப்படி ஆயிரத்தில் ஒரு கடையில் புரூணைக்காரர்கள் இருப்பார்கள். அவர்கள் பேரம் பேசி விற்கமாட்டார்கள்.

நாம் விலை குறைத்துக் கேட்பதெல்லாம் அவர்களுக்கு புதினமான விடயம். உடைகளை விடுங்கள்; மரக்கறி, உணவுப் பண்டங்களைக்கூட அப்படித்தான்.

தேவையென்றால் வாங்கு; இல்லாட்டி போ என்ற தோரணையிலேயே இருப்பார்கள். ஒன்றும் விற்க முடியாமல் பழுதாகி லொறிக்கணக்கில் கொண்டுபோய் கொட்டினாலும் பறவாயில்லை, அவர்களுக்கு.

இன்னொரு ஜவுளிக் கடையில் நுழைந்தபோது அங்கிருந்த ஒருவர் சம்மந்தா சம்பந்தம் இல்லாத உடைகளைக் கூட எங்களிடம் திணித்து விற்பதற்கு முயன்றார். அது ஒரு பாகிஸ்தானிய கடை. இந்தியர்களுக்கு சொந்தமான கடைகளிலும் இந்த 'விரட்டல்' இருந்தது.

சீனர்களுடைய கடைகளே, தனி ரகம்!

புரூணையை ஆக்கிரமித்துக் கிடப்பவர்கள் சீனர்கள்தான். தேரைக் குஞ்சுகள்போல வெள்ளை வெளேரென 'குட்டி'கள் கடைகளில் நிற்பார்கள்.

மனைவியின் நினைவுவரவே, பெண்களுக்குத் தேவையான ஹொஸ்மெடிக் ஐட்டங்களுள்ள ஒரு கடைக்குள் நுழைந்தோம். பொருத்தமான ஆடை மற்றும் அதற்குப் பொருத்தமான ஆபரணங்களையும் துருவிக் கொண்டிருந்தோம். அந்த வெள்ளைத் தேரைகள் என்ன நினைத்தனவோ தெரியாது சிரித்துக்கொண்டே இருந்தார்கள்.

நான் எனது மனைவியை மனதில் இருத்திக்கொண்டு புரட்டிக் கொண்டிருந்தேன். இஸ்மத் அலி வருங்கால மனைவியை மனிதில் இருத்திக்கொண்டார் போல். ஏனென்றால், இன்னும் ஒன்றரை மாதத்தில் அவருக்குத் திருமண நாளும் குறிக்கப்பட்டிருந்தது.

புரூணையின் நினைவுச் சின்னமாக புரூணைப் பெண்களின் தேசிய உடையான பஜ்ஜு ஒன்றினைத் தெரிவு செய்து சில ஆபரணங்களையும் வாங்கிக்கொண்டேன்.

நான் நன்றாக செலக்ட் பண்ணியுள்ளதாகவும் இதுபோன்று இன்னொன்றை எடுத்துக் கொள்ளுமாறும் ஒரு வெள்ளைத் தேரை 'ஐஸ்' வைத்தது.

அவருக்கு ஒரு மனைவிதான்




இரண்டைக் கொடுத்து குடும்பத்துக்குள் பிரச்சினையை ஏற்படுத்திவிடாதீர்கள் என்று இஸ்மத் அலி சொன்னபோது அவர்கள் சிரித்த சிரிப்பில் கடாமோலுக்குள் பூமியதிர்ச்சி வந்தது!

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசப்போட்டி



"அப்பா அப்பா.. கார் சாவி எங்கே" என்று கேட்டபடி உள்ளே நுழைந்தான் மிதுன்.

"எதுக்கப்பா..."

"எதுக்கா நான் ப்ராக்டிஸ் பண்ணத்தான்" என்றான் ஸ்டைலாக.

"ஐயோ! அதெல்லாம் வேணாம்பா... அப்புறம் எங்கேயாவது இடிச்சிட்டேன்னா..."

"கார் டேமேஜ் ஆயிடும்னு கவலைப் படுறீங்களா?"

மிதுன் விளையாட்டாக கேட்டாலும் அவர் கவலைப்படுவது தனக்காகத்தான் என்று அவனுக்குத் தெரியும்.

"சீ... சீ அப்படியில்லப்பா... நீ நல்லா டரைவிங் கத்துக்கிட்ட பிறகு எடுக்கலாம்னு சொன்னேன்" என்றார் சிவலிங்கம்.

"நல்லா கத்துக்கனும்னுதானே அவன் ப்ராக்டிஸ் பண்ணனும்னு சொல்றான். காரை எடுக்காம எப்படி ப்ராக்டிஸ் பண்ண முடியும்? இந்தாப்பா சாவி, நீ ஓட்டிப் பாரு, வேணும்னா நானும் துணைக்கு வர்றேன்"

என்றபடி வந்தாள் அம்மா சத்யவதி.

"உனக்கு கொஞ்சமாவது அவன் மேல அக்கறை இருக்கா? கார் ஓட்டுறேன்னு எங்கேயாவது அடி கிடி பட்டுக்கிட்டா என்ன ஆவறது?"

மனைவியை நோக்கி சீறினார் சிவலிங்கம்.

"இல்லீங்க, நா என்ன சொல்ல வர்றேன்னா..."

"அப்பா.. போதும். மறுபடியும் உங்க சண்டையை ஆரம்பிச்சுடாதீங்க. நா அப்புறமா கார் கத்துக்குறேன்"

கார் சாவியை டேபிள் மேல் வைத்துவிட்டு உள்ளே சென்றுவிட்டான் மிதுன்.

மிதுன் கல்லூரி இறுதியாண்டு படித்துக் கொண்டிருக்கிறான். ஒரே பிள்ளை. ரொம்ப செல்லம். வீட்டில் அவன் அப்பா அம்மாவுக்குள் சண்டை வருவதென்றால் அது அவனிடம் யார் அதிகம் அன்பு வைத்திருக்கிறார்கள் என்ற பாசப் போட்டியாகத்தான் இருக்கும்.

சிவலிங்கம் எப்போதுமே அவன் வலிக்கத் தாங்கமாட்டார். சின்ன வயதிலேயே அவனுக்கு காதுகுத்தும் போது அவன் கதறலை தாங்கமுடியாது என்று காதுகுத்தும் இடத்திலேயே அவர் இல்லை.

இதைப் பலமுறை சொல்லி மனைவியை மட்டம் தட்டியிருக்கிறார்.

"நீயெல்லாம் எப்படித்தான் அவன் அழுகையை தாங்கிக்கிறியோ. என்னால அவன் அழுவதை தாங்கவே முடியாது. அந்த இடத்திலேயே இருக்கமாட்டேன்" என்பார்.

அவன் உறவினர்களும் நண்பர்களும் கூட, மிதுன் இப்படி ஒரு அப்பா கிடைக்க நீ ரொம்ப கொடுத்து வச்சவன்தான் என்று பெருமைப்படுவார்கள்.

"என்னப்பா... அப்பா கார் கொடுக்கலைன்னு கோவமா? அவரைப் பத்திதான் தெரியுமில்ல..."

என்று சொன்னபடி உள்ளே வந்தாள் அம்மா.

"அதெல்லாம் ஒன்னுமில்லம்மா..."

என்றபடி புத்தகத்தை பிரித்தான் மிதுன்.

"அவருக்கு எப்பவுமே உம்மேல பாசம் அதிகம். அதனாலதான் அப்படி சொல்றார்" என்ற அம்மாவை நிமிர்ந்து பார்த்தான் மிதுன்.

"அப்போ உங்களுக்கு?"

"இல்லை, என்னைவிட அவர்தான் உம்மேல பாசமா இருக்கார். சின்னதுல உனக்கு ஒரு ஊசி போடட்டாக்கூட அவருக்கு தாங்காது. அந்த இடத்த விட்டும் ஓடிடுவார். இப்பவும் அப்படித்தான்"

தாயை பாசத்துடன் பார்த்தான் மிதுன்.

"அவரைவிட உங்க அன்பு எந்த விதத்துலயும் கொரைஞ்சதில்லம்மா..."

என்ற மிதுனை வியப்புடன் பார்த்தாள் சத்யவதி.

ஒரு குழந்தை தனக்கு வலிக்கும் சமயத்தில் தந்தையையோ, தாயையோதான் ஆறுதலுக்காக தேடும். அந்த சமயத்தில் அதன் அழுகை காணப் பொறுக்காமல் ஓடி ஒழிவது சிறந்த பாசம்னு எப்படி சொல்றது? தனக்கு கஷ்டமா இருந்தாலும் தன் குழந்தைக்கு ஆறுதலா கூடவே இருந்து தைரியப்படுத்தரதுதான் உண்மையான அன்பு. அதைத்தான் நீங்களும் இதுவரைக்கும் செய்திருக்கீங்க. அந்த வகையில பார்த்தா, அப்பாவைவிட உங்களுக்குத்தான் என்மேல அன்பு அதிகம்.

மிதுன் பேசி முடிக்க,

தன் மகன் தன்னை சரியாக புரிந்து வைத்திருப்பதை உணர்ந்து பெருமிதம் அடைந்தாள் அந்தத் தாய்.

கதவருகே நின்று இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிவலிங்கமும் சிந்திக்க ஆரம்பித்தார்.

## அரசாங்கத்தை விட்டு...



(10 ஆம் பக்கத் தொடர்)

ஆகவே நம்பத்தகுந்த குரலுக்கான இடைவெளி முஸ்லிம் சமூகத்தில் காணப்படுகிறது. அத்தோடு முஸ்லிம் இளைஞர்களும் ஓர் ஏக்கத்துடன்தான் காணப்படுகிறார்கள். இதனால் ஒரு மாற்று அரசியல் சக்தி புதிய வடிவம் எடுக்கும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

**கேள்வி:** முஸ்லிம் பிரதிநிதிகள் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என செயலாளர் ஹஸன் அலி அண்மையில் அழைப்பு விடுத்திருந்தார். இந்த விடயத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பதில்:** பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு அரசியல் நடைமுறை என்பது ஒரு பழைய வண்டில். இவ்வாறான செயற்பாடுகளினூடாக முஸ்லிம் சமூகத்திற்கான பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முடியாது. ஒரு சிறிய தெரிப்பை ஏற்படுத்தலாம். இதற்கு எல்லா முஸ்லிம் எம்பீக்களையும் சேர்த்தெடுக்கின்ற ஒரு சவாலை அவ்வாறு சொன்னதன் மூலம் எங்களுடைய செயலாளர் நாயகம் ஏற்றிருக்கிறார். இதன் மூலம் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தியடைந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதும் ஒரு சாதாரண அரசியல் நடவடிக்கையாகத்தான் நான் பார்க்கிறேன்.

எதிர்க்கட்சியில் இருக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து குரல்கொடுக்கின்ற போது பலவிதமான சந்தேகங்களும் விமரிசனங்களும் வர வாய்ப்பிருக்கின்றன. முஸ்லிம் அரசியலில், எதிர்க்கட்சியில் இருக்கும் அரசியல்வாதிகள் எதிர்க்கட்சி அரசியல்தான் செய்ய முடியும். முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரைக்கும் அரசாங்க அரசியல் செய்யவில்லை. இதைவிட முஸ்லிம் சமூகமட்டத்தில் காணப்படும் அனைத்துத் தரப்பினரையும் இணைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த வெளிநாடுகளுக்கு கடிதம் கொடுப்பது, பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு செய்வது போன்ற நடவடிக்கைகளை விடவும் புதிய சிந்தனையின் அடிப்படையில் மாற்றுத் திட்டங்களை முஸ்லிம் சமூகம் முன்வைக்க வேண்டும்.

**கேள்வி:** உங்களுக்கும் கட்சியின் தலைவருக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதுபற்றி உங்களது கருத்து என்ன?

**பதில்:** என்னைப் பொறுத்தவரையில் எனக்கும் கட்சியின் தலைவருக்கும் கட்சிக்கும் இடையில் ஒரு பிரச்சினையுமில்லை. ஆனால், இலங்கை முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் புதிய அணுகுமுறைகள் தேவை என்ற விடயம் என்னுடைய நிலைப்பாடாகும். அதுபற்றி விளங்கிக் கொள்கின்ற போதாமை காரணமாக விமர்சனங்களைச் செய்கிறார்கள்.

கடந்த 3 தசாப்தங்களாக காணப்பட்டு வரும் அரசியல் நடைமுறையை இனிமேல் செய்யமுடியாது. அது களைத்துப்போய் விட்டது. அதுமட்டுமல்ல புதியதொரு மாற்றத்தை நோக்கியதாக எமது முஸ்லிம் அரசியல் நகர்த்தப்பட வேண்டும் என்ற விருப்பம் எனக்கிருக்கிறது. இந்த விருப்பத்தின் வெளிப்பாடுகளில் பலருக்கு விருப்பமின்மைகளுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தக் கூடும். அதனால்தான் இப்படியான கதைகள் வருகின்றன.

கட்சியின் தலைவரும் நானும் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் மரணத்தின் பின்னர் 2010 ஆம் ஆண்டு வரை இரண்டறக் கலந்த அரசியலைச் செய்தோம். அந்த அரசியல் இப்பொழுது இல்லை. 2010 இலிருந்து வியூக அமைப்பிலுள்ள நடவாமைகள் காரணமாக இருவருக்குமிடையே தூரப்படுத்தல் இருக்கின்றது. இப்போதிருக்கும் தலைமைகளாலும் எம்பீக்களாலும் இருக்கின்ற நிலைமைகளுக்கு அப்பால் செல்ல முடியாது. புதிய தலைமுறைதான் இதனை முன் கொண்டு செல்லமுடியும்.

**கேள்வி:** அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலின்போது உங்களது கட்சியின் ஆதரவு எதன் பக்கம் இருக்கும் என்று தெளிவுபடுத்த முடியுமா?

**பதில்:** ஜனாதிபதி தேர்தலுக்கு யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பாக கட்சி கூடி முடிவெடுக்கும். இது தலைவரை அடியொட்டிய கட்சி. அது தலைவர் அஷ்ரஃபாக இருந்தாலும் தலைவர் ரவூப் ஹக்கீமாக இருந்தாலும் புதிதாக வரக்கூடிய தலைவர்களாயிருந்தாலும் சரிதான், அக்கட்சி அப்படித்தான் இருக்கும். இது தலைவரின் விருப்பத்தை உள்ளடக்கிய ஒரு விடயம். இருப்பினும் கட்சியின் பாராளுமன்றக்குழு மற்றும் உயர்பீடம் ஆகியனவும் ஒன்றுகூடி தற்போதிருக்கின்ற அரசாங்கக் கட்சியோடும் முஸ்லிம்களுடைய பிரச்சினை தொடர்பாகவும் உத்தரவாதங்கள் தொடர்பாகவும் முதலில் பேசும். அத்தோடு எதிர்க் கட்சியோடும் பேசுவதற்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றன. இது சூழ்நிலையைப் பொறுத்து எடுக்கப்படுகின்ற முடிவு.


## ஜெனீவா...

(07 ஆம் பக்கத் தொடர்)

இருந்து பெற்ற வர்த்தகக் கடனை அடைக்க முடியுமா என்ற கேள்வி உள்ளது. ஹம்மாந்தோட்டை துறைமுகமும் இதே போன்றுதான் சர்ச்சையில் உள்ளது. ஹம்மாந்தோட்டை துறைமுகத்துக்கென்றே எத்தனை கப்பல்கள் புதிதாக வருகின்றன. அதன் வருமானம் சீனாவின் அதிக வட்டியுடனான கடனையும் வட்டியையும் அடைக்கப் போதுமானதா என்ற கேள்வியுள்ளது. இதுவரையும் உள்ள அனுபவம் போதாது என்பதுதான். ஏனைய அபிவிருத்திகளும் இதே நிலைதான். தெற்கில் அதிவேக கடுகதிப் பாதை விடயமாகவும் உள்ள விமர்சனங்கள் யாதெனில், ஆகக்கூடுதலான வாகனப் போக்குவரத்துள்ள பிரதேசந்தான் தெரிவு செய்யப்பட்டு அதிவேக பாதை அமைக்கப்பட்டதா என்ற கேள்வியுள்ளது.

ஆசியாவின் ஆச்சரியத்தை நோக்கிய பொருளாதார அபிவிருத்திப் பாதையின் இலக்குகளை அடைவதற்கான மற்றுமொரு சவால், மனித உரிமை மீறல் விசாரணைக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்காமையுடன் தொடர்பானது. அமெரிக்காவும் ஐரோப்பாவும் செய்வது சரியா என்பதை விட, அவைகளின் கெடுபிடிகளில் இருந்து தப்பித்துக்கொள்ள என்ன செய்யவேண்டும் என்பதே கேள்வி. மனித உரிமைப் பேரவைக்கு விசாரணைக்கான ஒத்துழைப்பை வழங்குவதும் வட மாகாண சபையுடன் இணக்கமான போக்கைக் கடைபிடித்து தமிழர் பிரச்சினையை அணுகும் வழிமுறையைக் கடைபிடிப்பதுந்தான் ஒரே வழியென்று இலங்கையின் இறைமையை மதிக்கும் நாட்டுப்பற்றுள்ள விமர்சகர்கள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரணம்

மண்ணுயிர்களுக்கு மரணம் உண்டு
என்று மறையவன் வகுத்துவிட்டான்
மானிடன் என்ன செய்வான்?
இன்று அவன் என்றால்
நாளை நான் என்கிறானே?
ஜனனம் உண்டெனின் மரணமும் உண்டு
இது உலகின் உறுதியான
நியதியே அதையெண்ணி
நீ அதிர்ச்சி கொள்வதேன்?
பகைவன் மாண்டான் என
நீ குதூகலிக்கிறாயா?
இது மனித தர்மமாகுமா?
மரணத்தை வென்றோர் எவருமில்லை
அது வரும் நேரம் யாரும் அறிந்ததில்லை
மரண வேதனையை தாங்க முடியாது
அது தெரிந்தால்
மனிதனால் தூங்க முடியாது
ஏகாந்த வேளையிலும்
ஏகனை நினைத்திடுவோம்
நல்ல மரணம் நமை ஆட்கொள்ள
நாயகனிடம் இறைஞ்சிடுவோம்
மரணம் என்பது
வாழ்வின் முற்றுப்புள்ளியல்ல — அது
நிரந்தரமான வாழ்க்கையின்
தொடக்கப்புள்ளியே!

சப்ரி எம். ஷாபி
பூவலிகடை



# உயிர் மொழி

## குமரெடுங்கள்

ஒரு வீட்டில் இரு குமர்கள்
ஒன்றையொன்று முகம் பார்த்து
வருடங்கள் பல கடந்தும்
வாழ்வின்றித் தவிக்கின்றார்

பெற்றோர் வறுமை நிலை
பெண் கொடுக்க வழியில்லை
உற்றார் ஆதரவும்
ஒன்று கூட சேரவில்லை

அழகுண்டு அடக்கமுண்டு
அறிவான கல்வியுண்டு
இளவயதுப் பருவத்தில்
ஏனிந்த விதி விலக்கு



சீதனத்தால் சீரழிந்த
செல்வமற்ற பெண்மணிகள்
வேதமறை வழிநடந்தும்
வாழ வகை ஒன்றிலையே

சீதனத்தை எதிர்பார்க்கும்
செம்மையுள்ள ஆடவரே
சோதனைகள் எதுவரினும்
சோராது குமரெடுங்கள்

நபி ரசூல் அறநெறிகள்
நல்லறமாம் இல்லறமே
அபிமானம் கொண்டோரே
அணிதிரண்டு பெண்ணெடுங்கள்

மூதூர் கலைமேகம்

# மனிதன் வெந்துதான் புண்ணோ?



வாயக்கட்டி வயித்தக்கட்டி
உண்ணாமத் திங்காம
ஒறுத்துக்கட்டி
நோயப் பேயா நம்பி
உழைச்ச காசக் கொட்டி
வகிலன்டய வைத்தியன்
திண்டாப் போல

பதுக்கிப் பழகி நல்லா
பல்ல இளிச்சிப் பாஞ்சு
ஒதுக்கித்தள்ளி ஒறவ
ஒண்ணுமில்லாதாக்கி
சந்தோசம் சப்பாணியாக
குதிக்கிற குதிமனுசன்
குதிகால் கெண்டே
ஒடஞ்சாப் போல

தெத்துப் புத்தி திருகுதாளம்
கெடுக்கது பொளப்பு
கெடுபடுவது வழக்கு
ஒவ்வாமை
ஒத்துவராப் பிண்டம்
உக்காந்தா மொடக்கு
இடுப்புல தொறப்பு
இதுவென்ன பொறப்பு?

குடிக்கிற மூத்திரம்
கொப்பளிப்பது பன்னீர்
படிக்கிற வேதம்
பண்பாடு வெகுதூரம்
கடிக்கிற கடியில இவன்
குடியே மூழ்கும்
துடிப்பு நிற்கும் வரை இதயம்
மனிதன்
வெந்துதான் புண்ணோ?


கலைதாசன் ஹக்கீம்

# உதிரும் பூக்கள்

இவன் பணி செய்ததில்
நாற்காலியோடு வருடங்கள் நான்கு
உதிர்ந்து விட்டன...
விட்ட தடயங்கள்
பெற்ற அனுபங்கள்
அழியாக் கனவுகளாய் பதிகிறது

பூக்களில் இதழ்கள் உதிர்வது ஒன்றும் புதிதல்ல
புதிரான வாழ்வில் புரியாத பக்கங்கள்தான் அதிகம்
நெடுதூரம் பயணித்தால் அப்பக்கங்களை அரித்து விடலாம்
உன் அடுத்த நகர்வு கோணிவிடாதிருக்க பயணங்கள் வேண்டும்
அதற்காகவேனும் பூக்கள் உதிரத்தான் வேண்டும்

மீரா எம். அஸ்ஹர்



# துறைபோனவள் சிறை வாழ்விலே

கதறும் அவலத்தோடு பதறியடித்து
கண்கலங்கி நின்றவள்
கண்ணியமிழந்து ஓர் இராட்சசியாய்
ஆன்மா அற்றவளாய், மோகப் பொருளாய்
சோகப் பொழுதுகளில் நடமாடும் பிணமென
நடத்தப்பட்டவள்...
ஒரு யுகப் பெண்ணிவள்
இஸ்லாம் வருமுன் வாழ்ந்தவள் இவள்

ஆண் - பெண் சரிபாதி சரிநிகர்
சம உரிமைக்குரியவர் என்று
சத்திய நெறி சொன்ன - கொள்கைப்
புரட்சியில் சாத்தியமானது
பெண்கள் எழுச்சி

கருவறை முதல் கல்லறை வரை
கல்வி தேடும் உரிமையை
சமையற் கட்டும் சரிதம் மீட்டும்
சாதனைப் பெண்கள் சரிதத்தை
புரட்டப் புரட்ட பக்கங்களில் நிறைந்தது
இஸ்லாம் இங்கிதமான
பெண்களைப் படைத்தது
இன்றும் பெண்
பல்கலைகளில் துறைபோகிறாள்
கல்வியியலில் பல கட்டங்களைக் கடக்கிறாள்
ஆனால் அவள் கற்றதால் பெற்றதென்ன?
பெண் ஆளுமை அத்தனையும்
பிரயோகிக்கப்படுகிறதா...?
பிரயோசனம் தெரிகிறதா...?

குடும்பத்தைக் கொண்டு செல்ல
உயர்கல்வி போதும் என - இலட்சிய
நங்கைக்கு இடராகும் பெற்றோர்
ஊர் சுற்றி ஓ... சிருக்கி
உனக்கெதுக்கு வீண் முயற்சி
உன் கடமை வீடோடே என்று
உருமாறும் எற்றோர்

சிந்தனைக்குள் நிந்தனைகளை
பெண் பணிக்குள் வரையறைகளை
பொருத்தமின்றி உரத்துச் சொல்லும்
உலகறிந்த கற்றோர்

சமைத்திடு...
குழந்தைகளை வளர்த்திடு...
வாழும் வரை வாழ்ந்திடு...
இறந்திடு...
என்று வாழ்க்கைத்
துணையாய் ஏற்றோன்...

நாகரிகம் தந்த ஆண் - பெண் நட்பு
உல்லாசத் தளங்கள் வல்லுறவுகள்
என தொடரும் பல தடைகள்

ஒரு பெண்ணை உயிராக்கினால்
ஒரு சமூகமே உயிர் பெறும்
ஓ... பெண்ணே!
உன் பயணம் துவங்கட்டும்
ஈமானியத்தோடு தொடரட்டும்...

உனக்கான கட்டுக்களை
சரியான எட்டுக்களால்
திட்டமிட்டு அவிழ்த்திடு
சமூகமே!
நீ செழிக்க சரிபாதி வசந்தத்தை
உன்னோடு இணைத்திடு...

நுஸ்ரா ஷாமிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்போது இணைய உலகில் இணைந்துள்ளது

# எங்கள் தேசம் இணையம்...

**மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!**

செய்திகள்
சிறப்புக் கட்டுரைகள்
அரசியல் அலசல்
விஷேட செவ்விகள்...
என பல்சுவை அம்சங்களுடன்
இணைய உலகில் உலா வரும்
உங்கள் உள்ளத்தை கொள்ளை
கொள்ளும்!

எங்கள் தேச இணையம்...

**www.engalthesam.lk**

எங்கள் தேசம் செய்திகளை உங்கள் கையடக்கத் தொலைபேசியில் பெற்றுக்கொள்ள F (இடைவெளி) engalthesam என Type செய்து 40404க்கு SMS செய்யுங்கள்

**JUST MEDIA FOUNDATION**
77, DEMATAGODA ROAD, COLOMBO 09, SRI LANKA.
Tel: 011 2698771 E-Mail: jmflanka@gmail.com



# LAW

**LLB (Hons) From University of WOLVERHAMPTON**

The BTEC HND in Law delivered by BCAS Campus is awarded by the Edexcel, UK. Major portion of the curriculum is contextualized on existing legal system in Sri Lanka. The student is assessed through Examination( Open and Closed books), Time Controlled Assessment, scenario based course works, written and viva voce examinations plus presentations.

On successful completion of the HND, the students are accepted for LLB (Hons) top-up which is again delivered locally for the University of Wolverhampton, UK. This degree awarded by the said university has been recognized by the Council of Legal Education, Sri Lanka making way for the students for direct entry to the Sri Lanka Law College.

The flying faculty of the UK University is substantially involved in the delivery process while the assessments and examinations are exclusively conducted by the university itself. This set-up gives the local students a harmonious blend of local and international learning experience as the students enjoy lectures delivered by the flying faculty with the online library facility made available.

## BTEC HND - edexcel

| Semester 1 | Semester 2 | Semester 3 | Semester 4 |
|---|---|---|---|
| + Legal System | + Constitutional Law | + Evidence | + Commercial Law |
| + Law of Contract | + Company Law | + Law of Property | + International Law |
| + Criminal Law | + Family Law | + Human Rights Law | + Jurisprudence |
| + Law of tort | + Employment Law | + Interpretation of Statutes | + Project on Legal Research |

## LLB (Hons) – 3rd Year Structure

| Year Long Modules | Semester 1 | Semester 2 |
|---|---|---|
| + Research Methods & Project | + International Trade & finance Law | + Contemporary Issues on European Law |
| + Equity & Trusts | + Counter Terrorism Law Policy & Practice | + Law of Criminal Evidence |

BCAS Awarded "Performance Excellence" for the years 2010 & 2011 by Edexcel - UK

Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD

15 YEARS

Hotline : 077 311 4105

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

**Colombo Campus :**
32, Dharmarama Road, Colombo 06.
Tel : (+94) 11 250 1145, (+94) 11 255 9255
Email : info@bcas.lk www.bcas.lk

**Kandy Campus :**
344, Peradeniya Road, Kandy. Tel : 081 222 4731

**Batti Campus :**
294, 1/4 Trinco Road, Batticalo. Tel : 065 222 8451

**Wayamba Campus :**
103, Dambulla Road, Kurunegala. Tel : 037 2221144

**Jaffna Campus :**
16, Point Pedro Road, Jaffna. Tel : 077 710 2131



# நீங்களும் நாளைய உலகின் DIPLOMA தொழில் நுட்ப துறை நிபுனராக வேண்டுமா ?

குறைந்த வயதில் கைநிறைய சம்பாதிக்கக் கூடிய கற்கைநெறி

## AIR CONDITIONING & REFRIGERATION

- 6 மாத கால பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் Diploma சான்றிதழ்
- 100% வீதமான Practical
- இலங்கையில் எங்கும் இல்லாத Work Shop வசதியுடனான பயிற்சி நெறி
- தேர்ச்சி பெற்ற முன்னணி ஆசிரியர்களின் வழி காட்டால்
- பயிற்சி நெறி முடிவின் பின் வெளியில் சென்று வேலைசெய்ய உத்தரவாதம்
- இஸ்லாமிய சூழல்
- தேவைப்படின் தங்குமிட வசதி செய்து தரப்படும்
- ஸகாத் பெற தகுதியான மாணவர்களுக்கு விஷேட சலுகை

வார இறுதி நாட்களில் மாத்திரமே வகுப்புகள் நடைபெறும்

வெளிநாடு செல்வதற்கு தேவைப் படுபவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்

# LEELAK TECHNICAL INSTITUTE

LTi

*Linking People With Technology*

No. 189/1, Kolanawa Road, Dematagoda. Colombo - 09.
Tel : 0112-689-584 E-mail : leelaktech@yahoo.com

**Kaleel 0779-711-721**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at IPC Printers.